# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

57



கலை இலக்கிய மாத சஞ்சிகை

ஆனி – 2013

80/=

# நதியினுள்ளே...


## கவிதைகள்

ஆ.முல்லைத்திவ்யன்

கெகிறாவ ஸ்லைஹா

ஈழக்கவி

த.ஜெயசீலன்

ஷெல்லிதாசன்

யாழ்.சிட்டு

## கட்டுரைகள்

பேராசிரியர் சபா.ஜெயராசா

த.கலாமணி

அந்தனிஜீவா

முருகபூபதி

திரவியம் சர்வேசன்

ச.முருகானந்தன்





கலை இலக்கிய நிகழ்வுகள்

அட்டைப்படம் - நன்றி இணையம்

## சிறுகதைகள்

வி.ஜீவகுமாரன்

இ.சு.முரளிதரன்

க.சட்டநாதன்

ராதா

சூசை எட்வேட்





## நேர்காணல்

லெனின்.மதிவானம்

## நூல் அறிமுகக்குறிப்புகள்

அர்ச்சுனன்

## கடிதங்கள்

மலரன்பன்

# ஜீவநதி

2013 ஆனி இதழ் - 57

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப் புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

- ஆசிரியர்


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

- பாரதிதாசன்-

## "யாதும் ஊரே யாவரும் கேளீர்"

எதிர்கால தீர்க்க தரிசனமாக, கணியன் பூங்குன்றனார் அன்றே சொல்லி வைத்த இவ் வாசகம் இன்று எம்மில் பல சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றது. நாகவிக சமுதாயமொன்றின் வாழ்வியல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை "முற்றும் உணர்ந்த ஞானி"யைப் போல் பூங்குன்றனார் பூடகமாக இவ்வாசகத்தின் மூலம் எடுத்துரைத்தார். உலகத்தில் யாவரையும் சுற்றத்தவராகக் கொண்டு உலக சமுதாயமொன்றைக் காண விரும்பிய அப் பெருமகனார் உண்மையில் ஒரு தீர்க்க தரிசியே.

இன்றைய உலகின் அபரிதமான வளர்ச்சி பிரமிப்பைத் தருவது; மானிடத்தின் மாட்சி பகர்வது. ஆயினும், இந்த உலகின் இருப்பு ஒரு நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உலகத்தார் உணர்ந்தாரில்லை. உலகின் பாகங்கள் எங்கணும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அக்கிரமங்களையும் யுத்த அனர்த்தங்களையும் காணுந்தோறும், சில கணப் பொழுதில் முழு உலகையும் அழிக்கக் கூடிய அணுவாயுதங்களின் அச்சுறுத்தல்களை அறியவரும் போது தான் கணியன் பூங்குன்றனாரின் "உலக சமுதாயம்" என்ற எண்ணம் பொருண்மை பெறுகின்றது.

அதிகரித்த தொழில்நுட்ப இலத்திரனியல் சாதனங்களும் போக்குவரத்து சாதன வசதிகளும் எமது உலகைச் சுருங்கச் செய்து விட்டன. சொந்த ஊர் என்றில்லாமல் எவ்வூரிலும் எவரும் வாழும் நிலை இன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனாற் தான் இன்றைய உலகை ஒரே சமுதாயமாகக் காண வேண்டியது அவசியமாகியுள்ளது. உலகை ஒரே சமுதாயமாகக் காணும் மனோ நிலை ஏற்பட வேண்டுமெனில், உலகத்தோர் யாவரையும் எமது சுற்றத்தோராகக் காணும் மனப்பாங்கு எம்மிடத்து விருத்தியடைய வேண்டும். பல்வேறு குரோத உணர்வுகளாலும் உளநலம் கெட்டு, பிறருக்கு கொடிய ஊறு விளைவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு, மிகக் கடுமையான உளநோய்க்கு ஆட்படாமல் எமது உலகை மீட்டெடுப்பதற்கு கணியன் பூங்குன்றனாரின் வாசகமே சிறந்த ஆதார அறப்போதனையாகும்.

– க.பரணீதரன்


ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 80/= ஆண்டுச்சந்தா - 1200/= வெளிநாடு - $ 50U.S

மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி

**K.Bharaneetharan, Kalaiaham , Alvai North west, Alvai.**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்

K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch

A/C No.- 8108021808 CCEYLKLY

பேராசிரியர் சபா.ஜெயராசா

# செய்யுள் அணிகளும் வர்க்கச் சார்புடைமையும்

இந்தியச் சமூக நிலைவரங்களுக்கும் அணியிலக்கண ஆக்கங்களுக்குமிடையே நேரிய இணைப்புக்கள் காணப்படுதல் நோக்குதற்குரியது. மனித ஆற்றல் என்பது சூழலால் உருவாக்கப்படுதல் இல்லை என்ற கருத்து நிலமானிய சமூகத்திலே மேலோங்கியிருந்தது. முற்பிறப்பின் வழி வருவதே அறிவும் ஆற்றலும் என்ற கருத்தியல் நிலமானிய சமூகத்தில் வலுவுற்றிருந்தது. வடமொழியில் அது "வசனாமல"த் தொடர்ச்சி என்று விளக்கப்படும். அது உயர்குடியினருக்குச் சாதகமான கருத்தாக்கமாயிற்று.

தொன்மையான சமூக வாழ்க்கையில் மனித நிலையும் பொருளாக்கமும் வேறு பிரிக்கப்படாது ஒன்றிணைந்த ஐக்கியமாக இருந்தன. பொருளில் மனிதர் அந்நியப்பட்டு நிற்கவில்லை. சமூக வளர்ச்சியின் போது, பொருளும் மனித நிலையும் அந்நியமாகின. அந்த இருமை நிலை இலக்கியங்களை இனங்காணுதலிலும் பிரதிபலித்தது. அதன் தொடர்ச்சியாக அணிகள் என்ற அலங்காரங்கள் வகைப்பாட்டுக்கு உள்ளாக்கப்படுகையில் "சுபாவோக்கி", "வக்கிரோத்தி" என்ற இருநிலைப் பாகுபாடுகள் கொண்டன. சுபாவோக்கி என்பது தன்மை நவிர்ச்சி அணியென்றும் வக்கிரோத்தி என்பது அலங்காரங்களுடன் உரைப்பது என்றும் குறிப்பிடப்படும்.

மெய்வகையான விளக்கம் தன்மை நவிர்ச்சியாயிற்று. அது இயல்பான மனிதநிலைக்கு ஒப்புமையாகின்றது. பொருளுற்பத்தியின் வளர்ச்சிபன்மை நிலையான தோற்றங்களை நோக்கி நகரும். அதாவது பலவிதமான வண்ணங்களிலும், வடிவங்களிலும் மேலெழும் தொழிற்பாடுகளை உள்ளடக்கி பொருட்கள் வெளி வருதல் தவிர்க்க முடியாதது. அத்தகைய உற்பத்தி நிலவரங்களைக்காணும் அறிகை நிலை செய்யுள் வடிவங்களை நோக்கியும் நீட்சி கொண்டது. உவமைகளைப் பகுத்தறிதல் அலங்காரங்களைப்பகுத்தறிதல் என்ற கல்விச் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்தன.

வாழ்க்கை நிலவரங்கள் உட்புக செய்யுள் புனைந்தோர் புறநிகழ்ச்சிகளின் பன்மை இயல்புகளைக் கவிதையாக்கங்களிலே அலங்காரங்களாகப் பெய்யத் தொடங்கினர்.

அலங்காரங்களைக்கற்று அவற்றை அடியொற்றிச் செய்யுள் புனைதல் அதன் பின்னர் இடம் பெற்ற நிகழ்ச்சியாகும். அணியிலக்கணத்தில் முதற் கண் உருவக அணி மற்றும் உவமையணி ஆகிய இரண்டையும் நோக்கலாம். உருவக அணியே காலத்தால் முந்தியது.

உபமானம் உபமேயம் என்ற இரண்டையும் வேறுபாடு நீக்கி ஒன்றே என்று அறிந்து கொள்ளும் படி கூறுதல் உருவக அணியாகும். உதாரணமாக "சிங்க முகன்" என்று கூறுதல் உருவக அணியாகும். அங்கு சிங்கத்தின் முகத்துக்கும் குறித்த நபரின் முகத்துக்கும் வேறுபாடு கொள்ளப்படமாட்டாது. மேலும் ஓர் எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். "மாரியாத்தா" என்று கூறும் பொழுது மாரிமழைக்கும் ஆத்தாவுக்கும் பேதம் உரைக்கப்படவில்லை. தொன்மையான வாழ்க்கை அத்தகைய பேதங்களைக் கண்டறியாத இயல்பினதாகவே இருந்தது. அந்நிலையில் உருவக அணியே உவமை அணிக்கு முன்னர் தோற்றம் பெற்றது எனலாம்.

மனிதரையும் பொருட்களையும் வேறு பிரித்துப் பார்க்கும் சக நிலவரம் உவமை அணியைத் தோற்றுவித்தது. உதாரணமாக "மலை போல மனிதன்" என்று கூறும்பொழுது மலை உபமானம் மனிதன் உபமேயம். அங்கு ஒப்புமை அறிதற்குக் காரணமாய் நிற்கும் பொருள் உபமானம் எனவும் அதனால் உவமிக்கப்படும் பொருள் உபமேயம் எனவும் கூறுவர். உவமித்தல் பொருள் உற்பத்தியில் நிகழ்ந்த பதிலீட்டுடன் (Subistitute) தொடர்புடையது. அதாவது உபமானத்தினை உவமை எனவும் உபமேயத்தினைப் பொருள் எனவும்

குறிப்பிடுவர். அந்த இரண்டு பொருள்களிடத்தும் சமஞ் சொல்லுதற்குக் காரணமாய் அதாவது ஒத்ததன்மையாய் இருக்கும் நிலை "பொதுத்தன்மை" எனப்படும். உவமை உருபுகள் மொழியிற் பிற்காலத்திலே தோற்றம் பெற்றவை என்பது மானிடவியலாளரின் கருத்து.

சமூகத்தின் பொருள் உற்பத்தியில் நிகழ்ந்த பல்வகைமை மொழியில் அணிகளை ஆக்குதலிலும் நீட்சி கொண்டது. அந்நிலையில் தீவகம், ஆவிருத்தி, ஆக்ஷேபம், அர்த்தாந்தரந்யாசம்(வேற்று பொருள் வைப்பு அணி) வியதி ரேகம் (வேற்றுமையணி) சமாசோக்தி (ஒட்டணி) விபாவனை(விசேடமாகக் கூறல்) அதிசய வணி, உற்பிரேட்சை (தற்குறிப்பேற்றம்) ஏதுவணி, சூக்கு மாலங்காரம்(நுட்பவணி) இலேசவணி, யதாசங்கியம் (நிரனிறையணி) ஊர் ஐச்சுவி (தன்மேம்பாட்டுரை) சமாஹிஅணி(துணைப்பேறு) சிலேடையணி, விசேடோக்தி (விசேட வணி) அப்பிரஸ்துதஸ்தோத்திரம் (மாறுபடு புகழ்நிலை) வியஜஸ்துதி(புகழாப் புகழ்ச்சி யணி) என்ற வாறு அணிகள் தோற்றம் பெற்றன.

தொடக்க காலத்து எளிமையான சமூக அமைப்பிலும் இலக்கிய ஆக்கங்களும் சிக்கலற்ற நேர்ப் பண்புகள் காணப்பட்டன. தாம் கண்ட காட்சிகளை நேரடியாக எடுத்தியம்பல் (Direct Expression) ஆரம்ப காலக் கவிதைகளிலே காணப்பட்டது. சங்ககாலக் கவிதைகளில் இப்பண்பினைக் காணமுடியும்.

சமூக வளர்ச்சியின் ஏற்றம் தொடர்ச்சியான சிக்கல் நிலைமைகளை உருவாக்கியது. சமூகத்தின் சிக்கல்நிலை மனிதருக்குரிய புலக்காட்சிகளிலும் சிக்க லான பண்புகளைத் தோற்றுவித்தது. அந்தச் சிக்கலான பண்பு கலை இலக்கியங்களிலும் நீட்சி கொண்டது.

தொன்மையான ஓவியங்கள், சிற்பங்கள் முதலியவற்றிலும் அதிக சிக்கலான விபரணங்கள் காணப்படவில்லை. சமூக வளர்ச்சியிலே மேலெழுந்த பன்முகப்பாடுகளும் சிக்கல் நிலவரங்களும் மொழி நிலவரங்களிலும் சிக்கலான நிலைகளை ஏற்படுத்தின. மொழி வழி எடுத்தியம்பலிலும் சிக்கல்களை ஏற்படுத்தின.

இந்திய மரபிலே சமூக வளர்ச்சி, அதனோ டிணைந்த மொழி வளர்ச்சி ஆகியவற்றை அடியொற்றிப் பல்வேறு கோட்பாடுகளும் கருத்து முறைகளும் வளர்ச்சி யடைந்தன. வாமனர்(8ஆம் நூற்றாண்டு) நத்திரடர் மற்றும் ஆனந்தவர்த்தனர்(9ஆம் நூற்றாண்டு) இராஜசேகரர்(10ஆம் நூற்றாண்டு) மம்மடர்(12ஆம் நூற்றாண்டு) பானுதத்தர்(14ஆம் நூற்றர்ணடு) அப்பையா தீட்சிதர்(16ஆம் நூற்றாண்டு) என்றவாறு கால வளாச்சியோடு அழகியல் தொடர்பான புதிய புதிய சிந்தனையாளரும் தோற்றம் பெற்றனர்.

எளிமையிலிருந்து சிக்கலை நோக்கிச் செல்லல் சமூக வளர்ச்சியிலே காணப்படும் ஒரு முக்கியமான இயல்பு அந்த இயல்பு அனைத்துத் துறைகளிலும் நீட்சி கொண்டது. எளிமையான நேர் வெளிப்பாடுகளுடன் கூடிய கவிதைகள் ஆரம்பநிலையிலும் சிக்கலான அலங்காரங்கள் கொண்டவை வளர்ச்சி நிலையிலும் தோற்றம் பெற்றன. அணிகளைப் பொறுத்தவரையும் அதே நிலை காணப்பட்டது. ஆரம்பத்தில் எளிமையான வகையிலே இடம் பெற்றிருந்த அணிகள், கால வோட்டத்திலே சிக்கலானவையாக மாற்றமுற்றன.

தனியுரிமை நோக்கு, தனிச் சொத்துரிமை, சமூக அந்தஸ்து முதலியவற்றை அடியொற்றியே தனி மனிதருக்குரிய ஆடை அலங்காரங்கள் இடம் பெற்றிருந்தன. இன்றுவரை அந்த இயல்பு தொடர்ந்த வண்ணமுள்ளது.

அரசுகளின் வளர்ச்சியோடு அரசர்களையும் ஆட்சிச் சிறப்பையும் புகழ்ந்து பாட முயன்றவேளை பல்வேறுவிதமான அணிகள் எடுத்தாளப்பட்டன. சாமானியரைப் பாடுகையில் பெருமளவு அலங்கார வகைகள் எடுத்தாளப்படாதிருத்தல் பொதுவான ஓர் அவதானிப்பாகவுள்ளது.

பேரரசர்களைச் சுட்டி உரைப்பதற்கு அலங் காரம் நிரம்பிய மொழியாட்சியே பயன்படுத்தப்பட்டது. மெய்கீர்த்திகள் அரசர்களுக்கு மட்டும் உரியவையாயின.

தமிழ் மரபிலும் வடமொழி மரபிலும் காவியங் களிலே தான் பெருமளவு செய்யுள் அலங்கார வகைகள் எழுத்தாளப்பட்டிருத்தலைக் காணலாம். அரசர் களுடைய வாழ்க்கையை அடியொற்றியே காவியங்கள் புனையப்பட்டன. காவிய ஆக்கத்தை அடி யொற்றியே பெருந்தொகையான அலங்காரவகைகள் மேலெழுந்தன. காவிய வளர்ச்சியும் காவியங்களை அடியொற்றிய நாடக வளர்ச்சியும் பல்வேறு கலைக் கோட்பாடுகள் இந்திய மரபிலே உருவாக்கம் பெறுவதற்குத் துணை நின்றன.

ஆழ்ந்து நோக்கும் பொழுது சமூக வர்க்க நிலவரத்துக்கும் செய்யுள் வழியாக எழுந்த அலங்கார சாஸ்திரக்கட்டமைப்புக்குமிடையே இணைப்பு இருத்தலைக் கண்டறிய முடியும். வர்க்க அமைப்புக்கும் மொழிப் பயன் பாட்டுக்குமிடையே தொடர்புகள் காணப் படுதல் நவீன மொழியியல் ஆய்வுகள் வழியாக கண்டறியப்பட்டுள்ளன.

பேரரசுகள் பெரும் இலக்கியங்களின் தோற்றங்களுக்கு மட்டுமன்றி செய்யுள் அணிகளின் பெருக்கத்துக்கும் வழிகோலியுள்ளன. பேரசுகளின் வளர்ச்சி மேற்குறித்த துறையில் மட்டுமன்றி ஏனை துறை களிலும் வர்க்க சார்புடைமையை வெளிப்படுத்தியது.

அ) மருத்துவதிலே "தங்க பஸ்பம்" அரசர்க்கும் உயர்குடியினருக்குமுரிய மருந்தாயிறு.

ஆ) நவமணிகள் அரசர்க்குரிய அணிப் பேறாயிற்று

இ) சோதிடம் அரசர்க்கும் உயர் குடியி னருக்கும் உரியதாயிற்று முனிவர்களின் ஆற்றுப் படுத்தலும் அவர்களுக்கே உரியதாயிற்று . ஜாதக ஓலை எழுதும் மரபு சாமனியர்களிடத்து இடம்பெற்றமைக்குச் சான்றுகள் இல்லை.

இவ்வாறாக செய்யுள் அணிகள், மொழி யாட்சி, பண்பாட்டுக்கோலங்கள் அனைத்திலும் வர்க்க நிலை நீட்சி கொண்டிருத்தலைக் காணமுடியும்.



இது இது எல்லாம் நடந்திராது விட்டால் வாழ்க்கை எவ்வளவு ரம்மியமாக இருந்திருக்கும் என எல்லோரும் வாழ்வின் ஒரு சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்ப்பதுண்டு.

1974ல் யாழில் 4வது உலகத் தமிழர் மகாநாட்டில் 9 உயிர்களின் இழப்பு...
1983ல் நடந்த இனக்கலவரம்...
1987ல் திலீபனின் மரணம்...
1990ல் யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லீம்களின் வெளியேற்றம்...
1991ல் ராஜீவ்காந்தியின் கொலை...
2009ல் முள்ளிவாய்க்கால் அவலம்....

இத்தியாதி...இத்தியாதி...இத்தியாதிகள்...
இவ்வாறுதான் சுந்தரேசன் வீட்டுச் சம்பவமும் என்னை இரண்டொரு நாட்களாக குடைந்து எடுத்துக் கொண்டு இருக்கின்றது.

எந்தச் சம்பவத்தின் நதிமூலம் ரிஷிமூலத்தை ஆராய்ந்து கொண்டு சென்றாலும் ஓர் எல்லைக்கு மேல் என்னால் போகமுடியாது இருக்கின்றது. அல்லது உண்மைகளைத் தேடி பல இருட்டுக் குகைகளின் ஊடாக பயணிக்க வேண்டியிருக்கின்றது. செல்லும் பாதைகளும் பல்வேறுபட்ட திசைகளில் பிரிந்து போய்க் கொண்டிருக்கின்றது.

வி. ஜீவகுமாரன்

# ஆமினாபேகம்...



இந்த தூரத்தை கடக்க எனக்கு போதிய சக்தி இல்லை எனவும் நன்கு தெரியும். எது நடந்ததோ அவை நன்றாகவே நடந்தது என கிருஷ்ணனின் காலடியில் போய் சரண் அடையவும் முடியாமலிருக்கின்றது.

*

சுந்தரேசன் சுமங்களா.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு 1987ல் பிரான்சுக்கு அகதி அந்தஸ்து கோரி வரும் போது அவர்களின் வயது 24ம் 22ம். வசதியான வாழ்வை அமைத்துக் கொள்ளும் கனவில் அதிகமான தமிழர்களைப் போல் கிடுகுவேலிகளுக்குள் இருந்து ஐரோப்பிய நாட்டுக்கு வந்து சேமிக்க வேண்டிய இடத்தில் சேமித்து செலவழிக்க வேண்டிய இடத்தில் செலவழித்து, நல்ல பணக்காரர்களாக வாழ்பவர்களில் அவர்களும் இருவர் என்பதைத் தவிர வேறு எந்த முன்னுரையும் அவர்களைப் பற்றி இங்கு தேவையில்லை.

“அடுத்த குழந்தை இப்போது வேண்டாம் – இரண்டிற்கு மேல் எப்போதும் வேண்டாம்” என வீதியோரங்களின் சுவர்களில் ஒட்டப்பட்ட வாசகங்கள் கல்மேல் எழுத்து போல மனத்தில் பதிந்து இருந்தாலும் பிரான்சில் மூன்றாது பிள்ளையும் இருந்தால் அரச உதவி அதிகமாகவே இருக்கும் என்பதால் சுமங்களாவின் வயிற்றில் வந்து இறங்கியவள் தான் பூஷா என வகுப்புத் தோழிகளால் அழைக்கபட்ட பூர்ணிஷா.

ஐரோப்பாவில் பிள்ளைகளின் பெயர்களுக்கெல்லாம் காரணப்பெயர் தேடி புறப்படுவதும் முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களின் பெயர்ப்பட்டியலைத் தேடுவதும் ஒன்றுதான். அது அதுக்கான காரணங்கள் அவர் அவர்களுக்கே விளங்கும். உண்ணல், உடுத்தல், உழைத்தல், வாழ்தல் என்ற நான்கு கோட்பாட்டின்படி வாழவேண்டுமே தவிர “காரணகாரியங்கள் எல்லாம் நமக்கேன்?” என ஆராயாது வாழ்ந்து விட்டுப் போவதுதான் இன்றைய ஐரோப்பிய ரெண்ட். அதனையே 99.99 வீதமான தமிழர்கள் கடைப்பிடிக்கின்றார்கள் – என்னைப் போல் ஒரு சிலரைத் தவிர.
இனி கதைக்குள் வருவோம்!
பூஷா அந்த நகரத்தின் 19 வயதாகும் செல்லப் பிள்ளை. பிரான்ஸில் வாழ்ந்தாலும் தமிழில் புலி. மேடைப்பேச்சு, நடனம், நாடகம் அனைத்திலும் முதலிடம்.
ரமணி சந்திரனின் நாவலுக்கு நாவல் “ஜெ” வரையும் ஓவியங்கள் போல அவளின் அழகும் எப்போதும் மெருகேறிக் கொண்டேயிருக்கும்.

நான்கு பருவகாலங்களின் மாற்றங்களும் அவள் உடைகள், கை வளையல்கள், நெற்றிப் பொட்டு, காதணிகள், சப்பாத்துகளின் தெரியும்.

தனக்கு தெரிந்த எவரையும் விழா மண்டபங்களில் சரி மற்றும் பொது இடங்களில் கண்டால் சரி அன்பாக கட்டியணைத்து பிரான்சு கலாசார முறைப்படி கன்னத்தோடு கன்னம் வைத்து அன்பைப் பரிமாறுவாள்.

“உந்தக் குமரிக்கு உந்த ஏடு எடுப்பெல்லாம் தேவையோ”, என எனது மனைவி வீடு வரும்வரை புறுபுறுத்துக் கொண்டே வருவாள்.
“மறைவிலை செய்தாத்தான் தப்பு! வெளிச்சத்திலை செய்தால் எதுவுமே தப்பில்லை!!” இது என் தத்துவம்.
“நல்ல காலம் எனக்கு இதுமாதிரி பொம்பிளைப் பிள்ளை இல்லை”, இது மனைவியின் சமாதானம்.
“உனக்கு வரப்போற மருமகள் ஒரு பொம்பிளைப்பிள்ளை தானே”, எனது வாய் கிண்டுகிறது.

"காலை உடைச்சு அடுப்புக்கை வைச்சுப் போடுவன்"

கடைத்தெருவுக்கு போய் வந்த களைப்பு தெரியாமல் அன்றைய தினம் பூஷாவின் கதையே காருக்குள் ஓடிக்கொண்டிருக்கும்.
பூஷாவின் பெற்றோர் அவளுக்கு கொடுக்க வேண்டிய அளவு சுதந்திரத்தைக் கொடுத்தும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப் பாட்டை விதித்தும் வளர்த்தது கண்டு எப்பவுமே எனக்கு நல்ல திருப்தி. ஆனால் அந்த சுதந்திர பூஷாவை என் மனைவியால் ஏற்றுக் கொள்ள முடியாமலிருந்தது.

என்னுடைய மகனுக்கு அவளைவிட ஒரு வயது குறைவு என்பதில் எப்பவுமோ ஒரு சின்ன வருத்தம் உண்டு. என் மகனும் அவளும் ஒரு வயது வித்தியாசத்தை தாண்டி ஒருவரையொருவர் காதலித்தாலும் பச்சைக் கொடி காட்டவே நான் தயாராய் இருந்தேன். அப்படி ஒரு மருமகள் கனவு எனக்கு. எல்லாம் என் மனைவிக்குத் தெரியாமல் என் மனதுக்குள்ளே தான். ஒரு தலைக்காதல் போல இது ஒரு தலை மருமகள் கனவு.
பூஷாவின் பெற்றோர் இருவரும் பிரான்சுக்கு வந்த காலம் தொடக்கம் எங்களுக்கு நல்ல நண்பர்கள். நன்மை, தீமை, இதர தமிழர்கள் பற்றிய புதினங்கள், சீட்டுகள், கழிவுகள், இலங்கை அரசியல் எல்லாவற்றையும் நேரம் கிடைக்கும் பொழுது தொலைபேசிகளில் பரிமாறிக் கொள்வோம்.
கோடைகாலம் என்றாலும் அடைமழை பெய்யாமல் நல்ல வெயில் வந்தால் சில வேளைகளில் வாட்டிய இறைச்சியுடனும் சிவாஸ் றீகலுடனும் ஆண்கள் நாங்கள் முற்றத்தில் அமர்ந்திருக்க பொம்பிளையள் இருவரும் கடைசியாக சென்னை சில்க்கில் வந்த சேலைகளை இன்ரநெற்றில் பார்த்துக் கொண்டும் கதைத்துக் கொண்டும் இருப்பார்கள். இருவருக்குமே கடைசியாக வந்த நல்லசேலையை யார் முதலில் வாங்குவது என சின்னப் போட்டி வேறு ஒரு தளத்தில் நடந்து கொண்டிருக்கும். இது இப்ப ஒரு ஐந்தாறு வருடமாகவே நடந்து கொண்டிருக்கிறது.
பூஷா எப்பொழுதும் தன்னுடன் கொண்டு திரியும் நாய்க்குட்டி எங்கள் தோட்டத்து புல்தரையில் ஒரு பந்தை உருட்டி விடுவதும் பின் அதைப் பார்த்து குலைத்து விளையாடுவதுமாக இருக்கின்றது. இடைக்கிடை வாலை ஆட்டியபடி என்னிடம் வந்து வாட்டாத பச்சை இறைச்சியை வேண்டிக் கொண்டு ஓடிச் செல்லும். பூஷாவும் அவளது மூத்த இரு சகோதரர்களும் எனது இரண்டு மகன்மாருடனும் சீட்டாடிக் கொண்டு இருப்பார்கள். சிலவேளை ஆளை ஆள் ஏமாற்றி விட்டார்கள் என்று பெருங்குரலுடன்

ஐவருக்கும் இடையிலான அடிபாட்டுச் சத்தமும் வெளியில் கேட்கும்.
"உது கட்டாயம் பூஷா தான் ஏமாத்தியிருப்பாள்" தகப்பன் தன் மகள் மீதே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வார்.
நானும் சிரித்தபடியே "அவளுக்கு ஏதாவது இடம் பார்க்கிறிகளோ" என எனது மருமகள் கனவு என்னையும் தாண்டி அவரிடம் கேட்கும்.

"இப்பதானே அவளுக்கு 19. இன்னும் 3 வருசத்திலை யூனிவேசிற்றி முடியட்டும். பிறகு யோசிப்பம்"

எனக்கு மனம் சற்று நிம்மதியடைந்தது – என் மகன் முயற்சி பண்ண இன்னும் மூன்று வருடம் இருக்கின்றது என்ற நிம்மதியில்.
கிறில் மீது நெருப்பில் வாட்டப்பட்டிருக்கும் இறைச்சியை வெட்டுவதற்காக கத்தியுடன் வந்த மனைவியைப் பார்த்த பொழுது "நீங்களும் ஒரு அப்பாவோ... பிள்ளைக்கு மாமா வேலை பார்க்கிறியளோ" எனச் சொல்லியபடி வருவது போலப்பட்டது.

மனக் கலக்கத்தில் இந்த முறை எதுவும் கலக்காமலே சிவாஸ்ரீகலை ராவாக அடிக்க சுந்தரேசன் என்னை வியப்பாய் பார்த்தார்.
நான் அசடு வழிந்தேன்.

*

தொடர்ந்தும் பிறந்தநாள் விழாக்கள், கல்யாணவீட்டு வைபங்கள், கோயில் திருவிழாக்கள் என பொது இடங்களுக்குச் செல்லும் பொழுதெல்லாம் என் கண்கள் பூஷாவை தேடிக் கொண்டிருக்கும். அவள் வரும் வரை ஏதோ என் மனம் அலைபாய்ந்து கொண்டிருக்கும்.
தீடீரென தேவதை போல முன்னே வந்து நிற்கும் பொழுது எல்லோரும் அதிசயிக்குமாப் போல அவளது ஆடை அணிகள் அலங்காரம் அமைந்திருக்கும். எங்குபோய் இவற்றைக் கற்றுக் கொள்கிறாளோ என என் மனம் வியந்து போகும்.
என் மருமகள் (?) இவ்வளவு அழகாக இருக்கின்றாள் என மனதுள் நான் தலையில் வைத்துக் கூத்தடித்தாலும் "ஒரு பொம்பிளைப் பிள்ளைக்கு இவ்வளவு ஆட்டம் கூடாது கண்டியளோ" என்று என் மனைவி மிளகாயை வறுத்தபடி குசினியுள் நின்று புறுபறுக்கும் பொழுது நான் மீண்டும் தலையைக் குனிந்து கொண்டு வாராந்த பத்திரிகை ஒன்றினுள் ஒளிந்து விடுவேன். மீண்டும் வேதாளம் போல மனம் மட்டும் மனைவியை எட்டிப் பார்த்து, "பொறு... பொறு... அவள் மருமகளாய் மட்டும் வந்து உன் கொட்டத்தை அடக்கப் போறாள்"



என சொல்லி விட்டுப் போய் முருங்கை மரத்தில் ஏறிவிடும்.
சாப்பாட்டுக் கோப்பையுடன் கதிரையில் வந்திருக்கும் என் மகனைப் பார்க்கும் பொழுது மகன் தந்தைக்காற்றும் உதவி என்ற குறளைத் தெரியாமல் வளர்ந்திருக்கிறானே என மனம் அவனைச் சபிக்கும். பணத்துக்கு பணம் அழகுக்கு அழகு. இந்த இரண்டையும் கொஞ்சம் கூட கையுள் வளைச்சுப் போடும் உலக நடப்பு தெரியாத மகனாக வளர்ந்திருக்கிறானே என்றும் மனம் வேதனைப்படும்.
"என்னடா... பூஷா விட நீ நல்ல றிசஸட் எடுத்து கிளாஸ் அடிப்பியா?"
நான் இவனுக்கு அப்பாவா... இல்லை.... மாமா வேலை பார்க்கிறானா என மனதுள் ஒரு வேதனை வந்து போனது.
"பூஷா எல்லாம் பெரிசாய் பாஸ் பண்ணுவள் எண்டு நான் நினைக்கேல்லை அப்பா"
"ஏனடா... "
"அதெல்லாம் ஏனப்பா உங்களுக்கு.... சுந்தரேசன் மாமாவும் சுமங்களா அன்ரியும் தான் பாவங்கள் "
என்றபடி குசினியுள் போனான்.
தோளுக்கு மேல் வளர்ந்தவனை தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை.
எனக்கு எதுவுமே விளங்கவில்லை. ஆனால் அவன் சொன்ன விதம் நல்லதாகப்படவில்லை.
மேலாக எதுவும் விளங்காமல் இருந்தாலே போதும் என மனம் எண்ணியது.
தோல்விகளைத் தாங்க ஏன்தான் மனித மனங்கள் தயங்கின்றதோ?
அன்று முழுக்க நான் நானாக இல்லாது அமைதியாக வீட்டினுள்ளேயே இருந்தது மட்டும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

*

அடுத்து வந்த புதுவருட தினத்திற்கு மூன்று நாள் இருந்த பொழுது சுந்தரேசன் வீட்டிற்கு போகும் பொழுது கையில் எடுத்துச் செல்லுவதற்காக நல்ல ஒரு வைன் வாங்குவதற்கு பெரிய கடை ஒன்றினுள் நுழைந்தேன்.

அங்கு பூஷா ஒரு வைன் போத்தலை வைத்து பிரட்டிப் பிரட்டிப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

எனக்கு மனது திக் என்றாலும் அவள் யாருக்கோ வேண்டுகின்றாள் என மனம் சமாதானப்பட்டுக் கொண்டது.

அவளிடம் போய் கதை கொடுப்போம் என நினைக்க முன்பு அவளின் அருகே வந்த மூன்று வெளிநாட்டு மாணவர்களுடன் அவள் பணம் செலுத்தும் இடத்துக்கு சென்றாள்.

நன்கு உற்றுப் பார்த்த பொழுது நால்வரும் தனித்தனியே தங்கள் கைகளில் இருந்த வைனுக்கு பணம் செலுத்தி விட்டு வெளியே போனார்கள்.

அவளும் யாருக்காவது பரிசு கொடுக்க வேண்டியிருக்கலாம் என மனம் சொல்லிக் கொண்டாலும் என்னால் சமாதானம் அடைய முடியவில்லை.

எதுவுமே வேண்டாமல் வீட்டுக்கு வந்தேன்.

நல்ல காலம் மனைவி வீட்டில் இருக்க இல்லை.

மகன் மட்டும் கம்பியூட்ருக்குள் முழுகிக் கொண்டு இருந்தான்.

நான் போய் பக்கத்தில் நின்றேன்.

“என்னப்பா”

“பூஷா பெரிதாய் பாஸ் பண்ண மாட்டாள் என்று எப்பிடித் தெரியும்”

என்னை மேலும் கீழும் பார்த்து விட்டு, “இதிலை இருங்கோ அப்பா” என பக்கத்தில் இருந்த கதிரையைக் காட்டினான்.

தனது பேஸ் புக்கின் பல்வேறு நண்பர்களினூடு பல்வேறு பக்கங்களினூடு பயணப்படத் தொடங்கினான்.

இறுதியாக ஆமினாபேகம் என்ற ஒரு பெண்ணின்பக்கத்தில் வந்து நின்றான்.

எனக்கு தூக்கி வாரிப் போட்டது.

அந்தப் பக்கத்தில் இருந்தது பூஷா தான். நெற்றியையும் வாயையும் மறைத்து மெல்லிய கறுத்த துப்பட்டா போட்டு ஒரு அரேபிய அழகி போல இருந்தாள்.

அதனூடு அவளின் முகம் நன்கு தெரிந்தது. கண்களில் மட்டும் அரேபிய அழகிகளின் போதை தெரிந்தது.

கீழே உள்ள படங்களில் நின்றிருந்தது வைன் கடையில் நின்றிருந்த நான்கு வெளிநாட்டு இளைஞர்களில் ஒருவன். முஸ்லீமாய் இருக்க வேண்டும். ஈரானோ, ஈராக்கோ, ஆப்கானிஸ்தானோ என என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை மற்றைய மூன்று இளைஞர்களும் வேறு வேறு நாட்டுப் பெண்களுடன்.

என் முகம் கறுத்ததை அவன் அவதானித்திருக்க வேண்டும்.

“அப்பா! இது எத்தனையோ நாளாய் நடக்குது.... இனிமேலாவது பூஷா கிறேசியிலை இருந்து விடுபடுங்கோ”

மகன் என் கன்னத்தில் அறைந்தது போலிருந்தது.

பூஷாவை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற நினைப்பில் மகனின் அறையில் இருந்து வெளியேறி நேராக சுந்தரேசன் வீட்டுக்கு போனேன்.

அவர்கள் வீட்டு வாசலில் நாலைந்து பொலிஸ்காரர் நின்றிருந்தார்கள்.

வீடு கலவரப்பட்டுக் கொண்டு இருந்தது.

இரண்டு பொலிஸ்காரர் பூஷாவின் தமையன்மார் இருவரையும் கெட்டியாக பிடித்தபடி நின்றிருந்தார்கள்.

“அண்ணை எங்கடை மானம் எல்லாத்தையும் கொண்டு போறாள் உவள்” சுமங்களா என்னைக் கண்டவுடன் கதறத் தொடங்கினாள்.

சுந்தரேசன் மௌனமான கதவடியில் நின்றிருந்தார்.

தான் அந்த முஸ்லீம் பையனுடன் போகப்போகின்றேன் என அவள் பிடிவாதப்பட்டிருக்கின்றாள்.... பெற்றாரும் சகோதரங்களும் தடுத்திருக்கின்றார்கள்...

18வயதான என்னை என் விருப்பத்தின்படி வாழத் தடைசெய்கிறார்கள் என வீட்டினுள் இருந்தபடியே பொலிசுக்கு தகவல் கொடுத்திருக்கிறாள்.... அவளை பாதுகாப்பாக வீட்டில் இருந்து அழைத்துச் சென்று அவள் விரும்பிய இடத்தில் சேர்க்க பொலிஸ் வந்திருக்கிறது.

“நீங்கள் அவளுக்கு நல்ல பெற்றாராய் இருந்திட்டீர்கள். ஆனால் அவள் உங்களுக்கு நல்ல பிள்ளையாய் இருக்கேல்லை. அதுபடியால் கவலைப்படாதீர்கள்” – இது வழமையான எனது ஒரு ஆறுதல் வார்த்தை தான்.

எனது மனமோ விடைதெரியாத பல கேள்விகளுக்கு விடை தேடிக்கொண்டு இருந்தது.

தனது எல்லாப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு நடுக்கூடத்துக்கு வந்து எல்லோரையும் பார்த்து விட்டு பொலிசுக்கு பின்னால் போய் காரில் ஏறுகின்றாள்.

வழமையாக என்னைக் கண்டவுடன் “அங்கிள்” என கண்கள் விரிய விழிக்கும் அழைப்பு அவளிடம் காணாமல் போய் இருந்தது. அந்தக் கணத்தில் அங்கே நின்றிருந்தது என் பூஷா இல்லை.

“அண்ணை உவள் வழியில்லாமல் றோட்டிலை நிற்கப்போகின்றாள்” பிரேதம் எடுக்கும் பொழுது வீட்டை நிறைக்கும் அவலக் குரலாய் சுமங்களாவின்

குரல் ஒலிக்கின்றது.

அவள் வளர்த்த நாய்க்குட்டி மட்டும் குலைத்தபடி வீட்டுக்கும் பொலிஸ்காரரின் காருக்கும் இடையில் மாறி மாறி ஓடிக்கொண்டு நின்றது.

*

இது இது எல்லாம் நடந்திராது விட்டால் வாழ்க்கை எவ்வளவு ரம்மியமாக இருந்திருக்கும் என எல்லோரும் வாழ்வின் ஒரு சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்ப்பதுண்டு.

1987ல் சுந்தரேசனும் சியாமளாவும் அகதி அந்தஸ்துக் கோரி பிரான்சுக்கு வராமல் இருந்திருக்கலாம்.
1993ல் ஒரு பெண்பிள்ளைக்கும் பிரான்சு நாட்டு அரசின் மூன்றாவது பிள்ளைக்கான பொருளாதார உதவிக்கும் ஆசைப்படாமல் இருந்திருக்கலாம்.
2006ல் பூஷா பெரியபிள்ளை ஆகிய பொழுது சேமித்தது எல்லாம் போதும் என ஊருடன் போயிருக்கலாம். அக்கம் பக்கம் பார்த்து வளர்ந்திருப்பாள்.
2011ல் 18 வயதாகிய பொழுது தானாக வந்த ஒரு சம்மந்தத்தை படிப்பு முடியட்டும் எனக் காத்திருக்காமல் சுந்தரேசனும் சியாமளாவும் செய்திருக்கலாம்.
2012ல் எனது மகனே அவளைக் காதலித்து இருந்திருக்கலாம்.
2013ல் ஐபோன், ஐபாட், பேஸ் புக்குகளில் இன்னும் தொழில்நுட்ப வசதிகள் பெருகாமல் இருந்திருக்கலாம். மொத்தத்தில் பூஷா என்கிற பூர்ணிஷா பேஸ்புக்கில் ஆமினாபேகமாக ஆறுமாதம் பழக்கமான வேற்று நாட்டு ஒருவனுடன் அவசரப்பட்டு வீட்டை விட்டு போகாமல் இருந்திருக்கலாம்.
ஏன் இப்படி எல்லாம் நடந்தது?
எந்தச் சம்பவத்தின் நதிமூலம் ரிஷிமூலத்தை ஆராய்ந்து கொண்டு சென்றாலும் ஓர் எல்லைக்கு மேல் என்னால் போகமுடியாது இருக்கின்றது. அல்லது உண்மைகளைத் தேடி பல இருட்டுக் குகைகளின் ஊடாக பயணிக்க வேண்டியிருக்கின்றது. செல்லும் பாதைகளும் பல்வேறுபட்ட திசைகளில் பிரிந்து போய்க் கொண்டிருக்கின்றது. இந்த தூரத்தை கடக்க எனக்கு போதிய சக்தி இல்லை எனவும் நன்கு தெரியும். எது நடந்ததோ அவை நன்றாகவே நடந்தது என கிருஷ்ணனின் காலடியில் போய் சரண் அடையவும் முடியாமலிருக்கின்றது.

# தோட்டக்காரனும் மரக்கன்றுகளும்

ஆ.முல்லைதிவ்யன்


தோட்டக்காரனின்
பிரசன்னம் இன்றியதாய்
அந்த தோட்டத்தின்
மரக்கன்றுகளை

பக்கத்து தோட்டக்காரன்
தனது தோட்டத்தில்
இருந்த மரக்கன்றுகளை
வலுக்கட்டாயமாக
பிடுங்கி நடுகின்றான்.

நீண்ட காலமாக
இந்த மரக்கன்றுகள்
அந்த தோட்டத்தில்
விதையாய் விழுந்து
கன்றுகளாய்
வேருன்றி நின்றவை

என்பது இந்த தோட்டக்காரனுக்கு
தெரியவில்லை.

தோட்டக்காரனின்
வரவு மீளவும் இருக்கும் இடத்து
மரக்கன்றுகள்
சொந்த தோட்டத்தில்
திரும்ப வேர்களைப்
பாய்ச்சக்கூடும்.







இன்று "அனைவர்க்கும் தரமான கல்வி" என்ற குரல் பலமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. கல்வி என்பது அடிப்படை மனித உரிமை என ஐ. நா. மனித உரிமைகள் சாசனம் எடுத்துரைக்கின்றபோதிலும் உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் பலருக்கும் "அடிப்படைக் கல்வி" என்பது கூட எட்டாக்கனியாகவே இன்றும் உள்ளது. உலகியல் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல பிரதான கருவியாகக் கல்வி விளங்குகின்றபோதிலும் ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கான கல்வியின் பொருத்தப்பாடு குறித்த சிந்தனையின்றி எடுத்துரைப்பு முறையிலேயே இக்கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. இந்த எடுத்துரைப்பு முறைக் கல்வியைக் கண்டனம் செய்து, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான கல்வி பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்திய கல்வியாளர்களுள் முக்கியமான ஒருவரே பிறேசில் நாட்டைச் சேர்ந்தவரான போலோ பிறெய்றி ஆவார்.

# ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான கல்வி: "போலோ பிறெய்றி"யின் சிந்தனைகள் பற்றிய சில குறிப்புகள்

த. கலாமணி



போலோ பிறெய்றி 1921ஆம் ஆண்டு பிறேசில் நாட்டிலுள்ள றெசிஃப் மாகாணத்தில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். வறுமையும் பசியும் பிணியும் நிறைந்த சிறுபராய வாழ்வு வழங்கிய அனுபவங்களே பின்பு அவர் ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி குறித்த சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதற்கு அடிப்படையாக அமைந்தன. 1943இல் றெசிஃப் பல்கலைக்கழகத்தில் சட்டம் படிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. ஆனால், குழந்தை உளவியலிலும் மொழி உளவியலிலும் அவருக்கிருந்த ஆர்வம் காரணமாக உயர் நிலைப் பள்ளிகளில் போர்த்துக்கேய மொழியைப் பயிற்றுவிக்கும் ஆசிரியராகத் தன்னை அவர் இணைத்துக் கொண்டார். 1944இல் தனது சக ஆசிரியையான மரியாவைத் திருமணம் செய்து கொண்டு, அவருடன் இணைந்து மாணவர்–ஆசிரியர் குறித்த ஆய்வுகள் பலவற்றை மேற்கொண்டார். பாடசாலைக் கல்வி நடைமுறைகள் குறித்த அதிருப்தியால், கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்து, பணிமாற்றத்திற்காக ஏங்கினார். அக்காலத்தில், தொழிற்றுறைகளின் தேசிய நேசக் கூட்டமைப்பானது தொழிற்றுறைச் சமூக சேவைக்கான கல்வி மற்றும் கலாசாரத் திணைக்களம் ஒன்றை நிறுவியிருந்தது. இத்திணைக்களத்தின் தலைவராக 1947இல் பிறெய்றி நியமிக்கப்பட்டார்.

இத்திணைக்களத்தில் பணியாற்றிய காலத்தில், படிப்பறிவற்ற, ஏழை எளிய மக்களோடு ஊடாடும் வாய்ப்பு பிறெய்றிக்கு ஏற்பட்டது. இதனால், அந்நாட்டிலுள்ள பிரதான பிரச்சினையாகக் கல்விப் பிரச்சினை விளங்குவதையும்

குறிப்பாக எழுத்தறிவின்மை அங்கு பெரிதும் நிலவுவதையும் கண்டறிந்தார். அக்காலத்தில் பிரேசில் நாட்டில் எழுத்தறிவற்றவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்த காரணத்தால், அங்குள்ள மக்கள் தொகையின் 10 சதவீத உயர்தட்டு வர்க்கத்தினரே அரசை நிர்ணயித்தனர். இந்நிலையை மாற்றிட, ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வியறிவை வழங்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்ட பிறெய்றி ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்விக் கோட்பாடுகள், அவற்றின் நடை முறைகள் என்பன பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார்.

சுரண்டலுக்கும் சுரண்டல் சார்பான கல்விக்கும் எதிராகக் "கருத்தியல்வாத"க் கல்வியை உருவாக்க வேண்டுமெனில், அதற்குப் பலமான தத்துவ அடிப்படைகள் வேண்டும். இத்தத்துவ அடிப்படைகள் மனிதனை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதனால் மனிதனைப் பற்றிய எண்ணக்கருவைப் பிறெய்றி கட்டியெழுப்பினார். விலங்குகளிலிருந்து மனிதனை வேறுபடுத்தும் வகையில், மனிதனுக்குள்ள புறநிலைப்படுத்தும் தன்மையை முதன்மைப்படுத்தினார். விலங்குகள் தங்களையும் உலகையும் புறநிலைப்படுத்த முடியாதவை. நேரம் பற்றிய எண்ணக்கரு அவற்றிடையே இல்லை. ஆனால், மனிதன் நிலை மாற்றம் செய்யும் திறன் கொண்டவன். மனிதனின் செயற்பாடுகள் தெறித்தலுடன் தொடர்புடையவை என்பதால், ஒரே நேரத்தில் பல செயல்களைப் புரிந்து, உலகை நிலை மாற்றம் செய்யும் ஆற்றல் மனிதனுக்கே சிறப்பானது. எனவே, சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்குக் கல்வியைக் கருவியாகக் கொள்ள வேண்டுமெனின், ஒடுக்கப்பட்ட மக்களிடத்து அக்கல்வியை எடுத்துச் செல்ல வேண்டும் எனப் பிறெய்றி தீர்மானித்தார். இத்தீர்மானத்தின் பிரகாரம் கிராமப்புறத்து அடிநிலை மக்களுக்குக் கல்வியை எடுத்துச் செல்வதைத் தனது வாழ்நாட் பணியாகவும் ஏற்றார்.

ஆனாலும், அடிநிலை மக்களிடத்துக் கல்வியை எடுத்துச் செல்வதிலுள்ள தடைகளை அவர் எதிர் கொள்ளவே வேண்டியிருந்தது. கொடிய வறுமையும் பசியும் பட்டினியும் நிறைந்த, அடிநிலை மக்களின் வாழ்வு, நோய் நொடிகளோடு பின்னிக் கிடந்தது. ஒரு சொற்ப நேரம் ஓரிடத்தில் ஆற அமரக்கூடிய வாய்ப்பற்றவர்களாக, பல ஊர்களிலும் பல லட்சம் கூலித் தொழிலாளிகள் காணப்பட்டனர். இத்துன்பியல் நிலையில் இந்த மக்களுக்குக் கல்வி அவசியம் தானா என்ற ஐயம் பிறெய்றியிடத்துத் தோன்றியது.

ஆனாலும், ஒடுக்கப்பட்ட மக்களின் இந்த இழி நிலையை நிலைநிறுத்துவதாக அன்றைய கல்வி அமைந்திருந்தமையைப் பிறெய்றி உணர்ந்தார். பொருளாதார, சமூக, அரசியற் சுரண்டல்களால், இழிநிலையிலுள்ள இம்மக்கள் மேலும் மேலும் ஒடுக்கப்பட்டு எதன் மீதும் பற்றற்றவர்களாக வாழ்வதற்கும் எதனையும் பரிசீலிக்கவோ விவாதிக்கவோ நினைக்கவோ முடியாத அளவுக்கு, அவர்களுக்கு விதிக்கப்பட்டது தான் அவர்களின் வாழ்வு என்ற மூடநம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கும் அடிப்படையாக அன்றைய கல்வி அமைப்பே அமைந்தது. இவ்வாறு, எதனையும் மீள்பரிசீலனை செய்யத் துணியாத ஒடுக்கப்பட்ட மக்களின் மௌன நிலையை "மௌனத்தின் பண்பாடு" எனப் பிறெய்றி அழைத்தார். இவ்வகையான மௌனத்தின் பண்பாட்டு நிலையை உடைத்தெறிவதற்கும் இந்நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கும் புதிய கல்வி முறையொன்றின் உருவாக்கம் பற்றிப் பிறெய்றி ஆழமாகச் சிந்தித்தார்.

அக்காலத்தில் நடைமுறையிலிருந்த கல்வியின் எடுத்துரைப்புத் தன்மையைப் பிறெய்றி பிரதானமாகக் கேள்விக்குள்ளாக்கினார். இந்த எடுத்துரைப்பு முறையிலான கல்வியானது ஆசிரியர்–மாணவர் உறவை எல்லைப்படுத்தியிருப்பதையும் அவர் விளக்கினார். அப்போதைய ஆசிரியர்–மாணவர் உறவில் ஆசிரியர் எல்லாம் தெரிந்தவராகவும் முன்மொழிவுகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரமுள்ளவராகவும் கல்வி நிகழ்ச்சிப் போக்கைத் தீர்மானிப்பவராகவும் தொழில் நிலை அதிகாரத்தால் அறிவில் அதிகாரம் செலுத்துபவராகவும் காணப்பட்டார். இதற்கு நேர்மாறாக, மாணவர் ஏதும் அறியாதவர்களாய் ஆசிரியரின் முன்மொழிவுகளை அப்படியே ஏற்றுக் கொள்பவராயும் ஆசிரியர்களின் திட்டத்திற்கேற்பத் தம்மை வடிவமைத்துக் கொள்ள வேண்டியவராயும் ஆசிரிய அதிகாரத்திற்குப் பணிந்து செல்ல வேண்டியவர்களாயும் கருதப்பட்டனர். இவ்வகையில், கல்வி முறையின் மனிதக் கூறாய் ஆசிரியரும் ஆசிரியர் எடுத்துரைப்பவற்றைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருக்கும் சடத்தன்மை வாய்ந்த நிலை காரணமாக மாணவர்கள் பொருட்கூறுகளாயும் விளங்குகினர்.

இவ்வாறான எடுத்துரைப்பு முறைக் கல்வியின் தாக்கம் வலுவாக இருப்பதை உணர்ந்து கொண்ட பிறெய்றி, அக்காலக் கல்வியானது எடுத்துரைப்பு எனும் நோயினால் அவதியுறுகின்றதெனக் குறிப்பிட்டார். கல்வியின் உள்ளடக்கம் எவ்வாறிருப்பினும்–மதிப்புடையதாகவோ–அனுபவ வழி வந்ததாகவோ இருப்பினும் கூட–அது எடுத்துரைக்கப்படுவதன் காரணமாக உயிர்ப்பற்ற வெற்றுச் செய்தியாகி விடுகின்றதெனப் பிறெய்றி வலியுறுத்தினார்.

எடுத்துரைப்பு முறையிலான கல்வியானது மாணவர்களை யந்திரப் பாங்காக மாற்றுகிறது. அத்தோடு, ஆசிரியர் எடுத்துரைக்கும் செய்திகளால் நிரப்பப்பட வேண்டிய வெற்றுப் பாத்திரங்களாக மாணவர்களைக் கருதுகிறது. மாணவர் எனும்

வெற்றுக் கொள்கலனை முழுமையாக நிரப்புபவர் களே திறமையான ஆசிரியர்கள். அதே வேளை, அதனை அனுமதித்து விரைவில் கொள்கலனை நிரப்பிக் கொள்ளும் நிலையில் மாணவர் திறமையான மாணவராவார்.

இவ்வாறாக, வங்கியில் பணத்தைப் போட்டு வைப்பதை ஒத்ததாக, ஆசிரியர்கள் பணம் போடுபவர் களாகவும் மாணவர்கள் சேமிக்கத்தக்க களஞ்சிய மாகவும் விளங்கும் வகையில் செய்திகளை அல்லது தகவல்களை மாணவர்களிடம் ஆசிரியர்கள் போட்டு நிரப்பும் முறையிலான இந்த எடுத்துரைப்பு முறைக் கல்வியை வங்கி முறைமைக் கல்வியாகப் பிறெய்றி கண்டார். கல்வி பற்றிய வங்கியியல் முறைமையிலான இந்த எண்ணக்கரு பிரபல்யமானது. வங்கி முறைமைக் கல்வியில் படைப்பாக்கத் திறனுக்கோ தர்க்கத்திற்கோ இடமில்லை. சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளையும் அதிகார-ஒடுக்குமுறை நிலைகளையும் நிலை நிறுத்துவதே வங்கி முறைமைக் கல்வியின் பிரதான அம்சமாகும். ஒடுக்குமுறையை ஏற்று வளைந்து கொடுப்பவர்களாய் மாணவர்களை ஆக்குவதன் மூலம் உலகை மாற்றியமைக்கும் சிந்தனை அற்றவர்களாய், எதிர்ப்புச் சக்தி அற்றவர்களாய் மாற்றுவதே வங்கி முறைமைக் கல்வியின் நோக்கமாகும்.

வங்கி முறைமைக் கல்விக்கு மாறாக நடைமுறைக்குச் சாத்தியமான மாற்றுக் கல்வி முறைமை பற்றிய தீவிரமான தேடலில் பிறெய்றி இறங்கினார். பதினைந்து ஆண்டுகள் வரையிலான ஆய்வுகளின் பேறாகவும் தேடலின் விளைவாகவும் 1962இல் "பிரச்சினை முற்கவிப்புக் கல்வி"யையும் "கருத்தாடல் வழிப் போதனாமுறை"யையும் மாற்றுக் கல்விச் சிந்தனை களாகக் கொண்டார். இச்சிந்தனைகளைச் செயற்படுத்து முகமாக எழுத, வாசிக்கத் தெரியாத 300 கரும்புப் பண்ணைக் கூலிகளோடு செயலில் களமிறங்கினார்.

பிரச்சினை முற்கவிப்புக் கல்வி (Problem Posing Education) என்பது கற்றலிலும் கற்பித்தலிலும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் இணைந்த நிலையில் பங்காளிகளாக்குவதாகும். ஆசிரியர்-மாணவர் ஆகியோருக்கிடையிலான பொறிமுறை ரீதியான தொடர்பாடலைக் கைவிட்டு உணர்வுபூர்வமான தொடர்பாடலை வழிப்படுத்துவதுமாகும். இங்கு, ஆசிரியர் நடத்துபவராகவும் மாணவர் நடத்தப்படுப வராகவும் அல்லாமல், ஒரு பிரச்சினையை எடுத்துக் கொண்டு இருவரும் இணைந்து அதற்கான தீர்வைத் தேடுவர். நடப்பியல் மீது தொடர்ந்து ஒளி பாய்ச்சப்படும். தமது வாழ்க்கையில் காணப்படுகின்ற நிறைவின்மையை யும் மட்டுப்பாடுகளையும் மாணவர் தாமே உணர்ந்து கொள்வர். எடுத்துரைப்பு முறைக்கு மாறான கருத்தாடல் முறை ஆசிரியர்களும் மாணவர்களுமாய்க் கலந்துரை யாடுவதற்கு இடமளித்து, அவர்களிடையே அதிகார முரண்பாடற்ற தோழமை உணர்வைத் தோற்றுவிக்க ஏதுவாகும்.

பிறெய்றி முன்வைத்த கல்விக் கோட் பாடானது ஒடுக்குமுறைக்கெதிரான பலத்தை மாணவரிடையே வளர்த்தலை நோக்கமாகக் கொண்டிருந்தது. பிறெய்றியின் கருத்துப்படி, பிரச்சினை முற்கவிப்புக் கல்வியும் கருத்தாடல் முறையும் சமூக மாற்றத்திற்கு மாணவர்களை வழிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், கல்வியின் உள்ளடக்கம் கருப்பொருள்களின் அல்லது அறிதலைப்புகளின் பிரபஞ்சமாக இருக்க வேண்டும். மனித வரலாற்றின் தொடர்புகளினால் மனிதன் எவ்வாறு உருவாக்கப்பட்டு வருகின்றான்? வரலாற்றுச் சூழலில் மனிதன் எவ்வாறு சுரண்டலுக்கு உட்பட்டான்? சொத்துரிமையின் தாக்கம் மனிதனை எவ்விதம் தாக்குகிறது? இந்நிலையில் சமூகம் உருவாக்கிய தொன்மங்கள் எவை? கருத்தியல் என்ன? விழுமியங்கள் எவை?-இவ்வாறான எண்ணங்களின் சிக்கலான தொடர்புகள் தான் அறிதலைப்புகளின் பிரபஞ்சமாகும்.


பிறெய்றி 300 கரும்பு விவசாயக் கூலி களுடன் ஆரம்பித்த இயக்கத்தில் ஆயிரக்கணக் கானவர்கள் இணையத் தொடங்கினர். இதனால் பிரேசிலில் ஒரு கல்விப் புரட்சி தோற்றுவிக்கப்பட்டு, ஏழைகளைப் பயிற்றுவித்தலை அரசே பொறுப்பேற்கும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்நிர்ப்பந்தத்தின் பேரில் கலாசாரக் குழுக்களை அரசு நிறுவியது. பிறெய்றி தோற்றுவித்த கல்வி முறை நாட்டில் பரவிய வேகத்தைக் கண்டு, உயர்வர்க்கத்தினர் கலங்கினர். 1964இல் இராணுவப் புரட்சியின்போது பொலிவியா விற்கு பிறெய்றி நாடு கடத்தப்பட்டார். அங்கே சிலியில் பிறெய்றி தனது வேலைகளைத் தொடர்ந்தார்.

பிறெய்றி முதன்முதலில் 1967இல் வெளி யிட்டு வைத்த நூல் "கல்வி விடுதலையை நோக்கிய பயிற்சி" என்பதாகும். அதனைத் தொடர்ந்து 1968இல் அவர் வெளியிட்ட "ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக் கான கல்வி முறை" என்ற நூல் பல்வேறு மொழி களிலும் மொழிபெயர்க்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட மக்களிடத்து மிகுந்த செல்வாக்கைப் பெற்றது. இது 1974 வரை பிரேசிலில் தடை செய்யப்பட்டிருந்தது. மேலும் பல நூல்களைப் பிறெய்றி எழுதி வெளியிட்டார். ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்கான கல்வி முறை பல்வேறிடங்களிலும் புரட்சியைக் கொழுந்து விட்டெரிய வைத்தது. 1997இல் மே 2ஆம் திகதி தமது எழுபத்தாறாவது வயதில் மாரடைப்பால் பிறெய்றி மரணமானார். ஆயினும், அவர் விதைத்த விதை, இன்று பெருவிருட்சமாய்க் கிளை பரப்பி நிமிர்ந்து நிற்கின்றது.

**Amrita Pritam**



பிறப்பு ஆகஸ்ட் 31,1919- இறப்பு ஒக்டோபர் 31,2005 பஞ்சாபி இலக்கியத்தில் ஒலித்த முதல் பெண்குரல். கவிதை, கட்டுரை, நாட்டாரிலக்கியம், நாவல், சிறுகதையென பல துறைகளிலும் மிளிர்ந்த முன்னோடி. தன் பதினோராம் வயதில் தாயை இழந்தார். ஆசிரியராய்த் தொழில் பார்த்த தன் தந்தையோடு 1947வரை லாகூரில் வாழ்ந்து, இந்தியா, பாக்கிஸ்தான் பிரிந்தபோது அகதியாகி 1948 இல் புதுடில்லி வந்தார். எனினும், பாக்கிஸ்தானாலும் அதிகம் விரும்பப்படும் எழுத்தாளராகத் திகழ்ந்தார். தாயினது மரணம் வாட்டியது அம்ரிதாவை. இலக்கியத்தின்பால் ஈர்க்கப்பட்டு 1936இல் தன் முதல் நூலைப் படைத்தார். பதினாறு வயதில் பிரீதம் சிங்குடனான திருமணபந்தம் பல கசக்கும் அனுபவங்களைத் தந்ததில் 1960இல் விவாகரத்துச் செய்து கொண்டு தனியே வாழ்ந்தார். பெண்ணுக்கெதிரான வன்முறைகளை அதிகம் பேசின அவரது ஆக்கங்கள். இவரது எழுத்துக்கள் பல மொழிகளில் மொழி மாற்றமும் கண்டுள்ளன. 1956இல் சாகித்திய மண்டலப் பரிசு, 1982இல் இந்தியாவின் உயர் விருதுகளுள் ஒன்றான பாரதீய ஞானபீட விருது, 1969இல் பத்மவிபூஷன் பட்டம், 2004இல் சாகித்திய மண்டல வாழ்நாள் சாதனையாளர் விருது என்று பல இலக்கிய வெற்றிகள் கண்டவர் அம்ரிதா. ஓவியரும், எழுத்தாளருமான இம்ரோஸ் ஆறுதலான ஒரு நட்பாய் அம்ரிதாவின் இறுதி நாற்பதாண்டுகள் அவரோடு கூடவேயிருந்தார். அம்ரிதாவின் பல நூல்களுக்கு அட்டைப்படம் தயாரித்தவர் இம்ரோஸ். நோயுற்றுப் படுக்கையில் இருந்தபோது, இம்ரோஸுக்காக எழுதப்பட்டது இந்தக் கவிதை. நோய்ப் படுக்கையிலிருந்து மீண்டு வராமலேயே 2005இல் இறப்பெய்தினார் அம்ரிதா.



# உனை எப்படியும் மறுபடி சந்தித்தே தீருவேன் நான்


பஞ்சாபி மொழியில்:- அம்ரிதா பிரீதம்
ஆங்கிலத்தில்:- நிருபமா தத்
தமிழில்:- கெகிறாவ ஸுலைஹா

உனை எப்படியும் மறுபடி சந்தித்தே தீருவேன் நான்.
எங்கே, எப்போது என்பதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது.
சிலவேளை, ஓவியம் வரையப் பயன்படுத்தும் உன் கித்தான்துணி மீதில்
நான் உந்தனது கற்பனையின் உருவமாய் ஆகி,
ஒரு மர்மம் நிறைந்த கோட்டுக்குள் எனையே கிடத்தியபடி
வைத்த கண் வாங்காது பார்த்தபடியே இருப்பேன் உன்னை.

சிலவேளை, உன் வண்ண நிறங்களால் தழுவிக் கொள்ளப்படும்
சூரியவெளிச்சத்தின் ஒளிக்கற்றையென நான் மாறி, எனையே
உன் கித்தான்துணி மீதில் நானே சித்திரமாய் வரைந்தும் வைப்பேன்.
எங்கே, எப்படி என்பதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது.
ஆயினும், உனை எப்படியும் நிச்சயமாய் சந்தித்தே தீருவேன் நான்.

சிலபோது, ஒரு நுரை தள்ளும் ஊற்றாய்க்கிளம்பியே வந்து
உந்தன் உடலெங்கனும் நீர்த்துளிகள் தெளித்து
கொதித்துத் தகித்துக் கிடக்கும் உன் மார்பின் மீதில்
எந்தன் குளிர்மையைக் கிடத்துவேன் நான்.
எனக்கெதுவும் தெரியாது.
ஆயினும் அப்படியொரு வாழ்க்கை நிச்சயமாய்
என்கூட நடந்து வந்தே தீரும்.

இவ்வுடல் அழிகையில் எல்லாமும் அழிந்துதான் போகும்.
ஆயினும் ஞாபகத்தின் நூலிழையோ முடிவுறா
நுண்ணணுக்கள் கொண்டன்றோ இழைக்கப்படுகிறது.
இத்துகள்கள்தனை ஒவ்வொன்றாய்ப் பொறுக்கியெடுத்து வந்தே,
அந்த நூல்மாலையை இழைத்திழைத்தாகினும்
உனை எப்படியும் மறுபடி சந்தித்தே தீருவேன் நான்.



இ.சு.முரளிதரன்

# கைமாற்றத்தகாத காசோலை

கடல் நுரைச்சிரிப்பு ஒடிந்து போய் மௌனம் சுமந்தபடி சோர்ந்திருந்தது. கடற்கரை மருங்கில் தொடங்கிய ஒற்றையடிப்பாதை, பிரதான வீதியில் இணைகிறது. தெருவின் மறுகரையிலுள்ள பனங்கூடல் காவோலை கத்தரிக்கப்பட்டு பசுமை சுமந்திருந்தது. உயர்மரத்தின் வட்டில் பாளை சீவிக் கொண்டிருந்த கறுப்புருவம் கொக்காரை ஒன்றினை காலால் உந்தித் தள்ளியது. கொக்காரை தரை தொட்ட ஓசையில் நாகதாளிப் புதரின் அருகே படுத்திருந்த குட்டைநாய் ஒன்று திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தது. அகன்று கிளை பரப்பி விழுதெறித்த ஆலமரத்தை அடையும் வரை நிகழ்ந்த எவையும் எனக்கு சுவாரஸ்யமாகத் தோன்றவில்லை. ஆலமரத்தை அண்மித்த போது பரவசத்தில் முள்ளந்தண்டு குளிர்ந்தது. வெண்சிறகுகளையுடைய பசுவை அன்றுதான் முதன்முதலாகச் சந்தித்தேன். காமதேனு குறித்த கதைகள் அனைத்தும் ஞாபகப்பரப்பில் நெரிசலாக வந்து குவிந்தன. அருகிலே சென்று பார்த்தேன். அடிவயிறு மேலெழுந்தும் தாழ்ந்தும் மூச்சின் அலைவரிசைக்கு ஏற்ப அசைந்து கொண்டிருந்தது. ஆர்வம், தீவிரமடைய முகத்தினை உற்று நோக்கினேன். முதுமை முகாமிட்டிருந்தது. வதனத்தின் வசீகரம் காலவதியாகி வெகு நாளாயிற்று. காமதேனுவின் கண்கள் காந்தம் போலக் கவர்ந்திழுக்கும் வீரியம் மிக்கவை என்று போசிரியர் மேகநாதன் எழுதிய "பொன்னகர உயிரிகள்" நூலில்(பக்கம் - 204) வாசித்தறிந்திருந்தேன். விழிகளில் எதுவுமே தென்படவில்லை. சலனமற்றிருந்தன. சிற்பங்களிலும் ஓவியங்களிலும் தரிசித்த சிகையலங்காரம் கூட அப்போதில்லை. வெளிறிய மயிர்க்கற்றை சிறிதளவு பிடரியிலே காணப்பட்டது.

முதுமையடைந் திருப்பினும் காமதேனு தானே? விரும்பிய அனைத்தையும் பெற்று இன்புறலாம். இக்கணத்திலிருந்தே என் வாழ்வின் செல்நெறியினைப் புதுப்பிக்கலாம். எனக்கும் சிறகுகள் முளைத்து விடும் போலிருந்தது. எல்லையறு வான் பரப்பை நோக்கி பறக்கும் அவா முகிழ்த்தது. விசித்திரமான மனோநிலையில் சிறையுண்டேன். அதிஷ்ட தேவதைக்கு என் மீதிருந்த ஒவ்வாமை அகன்றிவிட்டதை நினைக்க இரத்த அணுக்களில் கற்கண்டு கரைந்தது.

சோம்பேறித்தனம் என் வாழ்வோடு இரண்டறக் கலந்திருப்பதாக நண்பன் றகீம் வேண்டுமென்றே குற்றஞ்சாற்றிக் கொண்டிருப்பான். நான் எந்த வேலையினையும் செய்யாமல் மூலைக்குள் முடங்கிக் கிடந்தால் அவன் கூறுவதை மெய்யெனக் கொள்ளலாம். ஆனால் என் கடமைகளை நானே தான் நிறைவேற்றுகிறேன். யாராவது உதவி என்ற புனைபெயரில் எனக்குரிய வேலையினை பூர்த்தி செய்தால் உளப்பூரிப்படைவேன். அத்தகையவர்களையே நட்பின் இலக்கணமென்றும் உறவின் மெய்யுருவம் என்னும் மனம் நம்பத்தொடங்கி விடும். என்னுடைய வேலைகளை பிறர் செய்யும் தருணங்களில் நான் அனுபவங்களிலிருந்து தப்பித்து வாழ்க்கைக்கு அந்நியமாகி விடுவதாக றகீம் குற்றஞ்சாற்றுவான்.

கள்ளத் தேகத்திலிருந்து முதற்துளி வியர்வை மண்ணில் புணரும் போது, மனக்குதிரை கடிவாளம் அறுத்து அபத்தமாக ஓடத்தொடங்கி விடும். ஒரு புதையல் கிடைத்தால் எப்படி இருக்கும்? என்றொரு வெளவால் பாழடைந்த சிந்தனை மண்டபத்தில் தலைகீழாக தொங்க ஆரம்பிக்கும். ஆசைகள் எங்கிருந்து கருத்தரிக்கின்றன? விருப்பங்கள் மரணமடைய மரணமடைய எவ்வாறு புதிய பிறவி கொள்கின்றன? ஆசைகளை விரட்டி விடுதல் எளிதன்று விரட்டும் தருணத்தில் முரண்டு பிடித்து வென்று விடும் ஆசைகளிடம் மனிதன் அடிபணிந்து போகிறான். வேட்கைச் சிறைக்குள் சிக்குண்டு விடுதலையடையாத ஆயுட் கைதியாகவே பூமியை விட்டுப் புறப்படுகிறான்.

மனதின் இடுக்கில் அற்பத்தனமான எண்ணங்களும் ஒளித்திருக்கிறது. நாம் பயணிக்கும் பாதையில் யாராவது தவறவிட்ட பெருந்தொகை பணமோ? விலை உயர்ந்த ஆபரணங்கள் அடங்கிய பொதியோ கிடைத்தால் எப்படி இருக்கும் என்று சோம்பேறி எண்ணம் கற்பனை செய்து களிக்கிறது. சிற்றுதவியைப் பெற்றமைக்காக தேவதையோ மந்திரவாதியோ அற்புதமான பதுமநிதிகளைப் பரிசாகத் தந்து சென்றால்... என்ற கனவு இமையோரம் படிகிறது. வேட்கை என்ற வெறிநாய் காரணமின்றியே கடித்துவிடும். சிகிச்சை பெறாவிட்டால் கடிபட்டவன் வேட்கைமயமாகி அழிய வேண்டி நேரிடும். பேருருவம் கொண்ட வேட்கையினை திருப்திப்படுத்த முடியாத நிலையில் மனிதன் தோற்றதாக கற்பனை செய்து புழுங்கிப் போகிறான். தோல்வி என்று ஒன்று இருக்குமோ?

ஆலமரத்தடியில் காமதேனுவை கண்ட இந்நாளிலிருந்து எனது எல்லா வேட்கைகளுக்கும் விடிவு கிடைத்தாயிற்று. காமதேனுவிடம் என்னவெல்லாம் கேட்கலாம் என்று பட்டியலிடத் தொடங்கினேன். திடீரென்று சந்தேக வண்டின் இரைச்சல் சிந்தை தீண்டியது. தேவலோகப்பசு எப்படி பூலோகம் வந்தது? என்ற வினா ஊற்றெடுத்தது. மெதுவாக காமதேனுவின் அருகமர்ந்தேன். ஐயச்சுருளை அகல விரித்தேன்.

தேவலோகத்தில் தற்போது அனைத்தும் உழைப்பின் மகிமையால் தான் உற்பத்தியாக வேண்டுமென்ற சட்டம் நடைமுறையில் உள்ளதாக காமதேனு கூறியது. தேவதொகைப் பெருக்கமின்மையும், பூலோகக் குடியகல்வு சொர்க்கம் நோக்கியமையாமையும் பொன்னகரத்தை மாற்றுக் கருத்துகளுக்கு செவிசாய்க்க வைத்து விட்டது. கருத்துப் பரிமாற்ற நுட்பங்களின் விரிவாக்கத்தால் தேவலோகமயமாக்கல் நிகழ்ந்து சர்வலோகங்களும் சுருங்கி ஒருமைப் புள்ளியில் சந்தித்துள்ளன. வல்லமைகளின் கருத்தாடல்களால் பன்முக இறையாட்சியில் பொன்னகரம் புதுப் பொலிவடைந்து விட்டது. "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்பது இறை விசுவாசமாகவே அர்த்தம் கொள்ளப்பட வேண்டுமென மாற்றுலகத் தேவன் வலியுறுத்தியதால் காமதேனுவின் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. அவாவுதலற்ற உலகிலே மரணத்தைத் தழுவ விருப்பற்று அந்திமகாலத்தை பூமியிலே போக்குவதற்கு வந்ததாக காமதேனு தெளிவு படுத்தியது.

தேவைகள் என்றும் தீர்ந்து விடுவதில்லை. காமதேனுவையே எனக்கு உரிமையாக்கினால் என்ன? என்ற எண்ணம் ஒரு பரதேசியைப்போல தயங்கித் தயங்கி நுழைந்து ஈற்றில் ராஜகம்பீரத்தோடு ஆட்சிபீடம் ஏறியது. மூளை நாலா திசைகளிலும் பயணித்து முடக்குகளில் முட்டிமோதியது. பேராசிரியர் மேகநாதனின் "பொன்னகரத்து உயிரிகள்" நூலின் குறிப்புகள் கைகொடுத்தன. தேவகாளை ஒன்று இருப்பின் காமதேனு முப்பத்திமூன்று நிமிடத்தில் கருத்தரித்து வாரிசை ஈன்றெடுக்கும் வல்லமை கொண்டது என்று அந்நூலில் (பக்கம் 764) குறிப்பிட்டிருந்தார். ஆசைகள் அழகானவை. அவை நிறைவேறும் கணங்கள் அற்புதமானவை. அதனாலேயே தான் வேறோர் ஆசை வசீகரமான வாத்சல்யமாகத் தொற்றிக் கொள்கிறது. காமதேனுவின் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தேன். தேவலோகம் சென்று மீள அருள் செய்யுமாறு வேண்டினேன். காமதேனு இமை மூடித் திறந்தது. ஆழிப் பேரலையில் அகப்பட்ட படகு போலத்தூர வீசப்பட்ட உணர்வு. சுற்றுமுற்றும் பார்த்தேன். பொன்னகரம் தகதகத்தது.

சருகுகள் உதிர்க்காத மரங்கள் சுடரின் பிரதிகளாய் ரிஷிகள். இளமைப்பூரிப்பினைக் கச்சணிந்து காக்கும் பெண்கள் தூய்மை மிகு வீதிகள் வியர்வைத் துளிகளற்ற விநோத உடல்கள். இமைக்காத விழிகள். நிலத்தோடு பாதம் விரவாத நடை. பொன்னகரத்தின் போக்கே புதுமையாக மிளிர்ந்தது. அடர்காடு நோக்கி விரைந்தேன். தங்க நிறத்தில் இலை சுமந்த மரங்கள் ஒளி முகிழ்த்து நின்றன. சிங்கமும், புலியும் சாத்வீக உயிரிகளாய் நடமாடின. பூலோக இயல்பற்று சிறுத்தைகள் கனி உண்டு விளையாடின. தேவகாளை மட்டும் கண்களில் படவேயில்லை. பொன்னொளி விருட்சங்களின் நடுவே ஒரே ஒரு வெளிர்நிற விருட்சம் தென்பட்டது. அதன் அடியில் ரிஷி ஒருவர் அமர்ந்திருந்தார். மானிட தேகத்தோடு பூலோகவாசியின் தேவலோகப் பிரவேசம் கண்டு அதிர்ந்தார். சிரந் தாழ்த்தி வணங்கி முழுமையும் ஒப்புவித்தேன். "மனிதப் பதரே...! தேவகாளையை காமதேனுவிடம் கேட்டே பெற்றிருக்கலாம். அதுவும் இரண்டாம் பட்சம் தான். இன்னொரு காமதேனுவை நேரடியாகவே யாசித்திருக்கலாம். காலம் தாழ்த்தாதே. உடனே புறப்படு. இதோ பார்! வெளிறிக் காணப்படும் இவ்விருட்சமே கற்பகதரு. தேலலோகத்தில் இலவசமாகப் பெறுதல் குற்றமாக்கப்பட்டதால் இம்மரம் வெளிறி விட்டது. அதோ கிடக்கும் கற்பகக் கனியை விரும்பினால் எடுத்துச் செல். ஆயினும் உனக்கு உதவாது. அதனுள் வீற்றிருக்கும் விதை பூலோகக் காலக் கணக்கில் எண்பது வருடத்தில் விருட்சமாகும்" என்று கூறி ரிஷி விழிகளை மூடித் திறந்தார்.

ஆலமரத்தின் கீழே காமதேனு படுத்திருந்தது. வயிறு அசைவின்றிக் காணப்பட்டது. நீள்துயில்! கையிலுள்ள கற்பகக் கனியை அழுத்தினேன். வெண்ணுரை வெளியேறியது. முரண்களின் அழகியலே வாழ்வா? தெளிவும் ஒருவகை மாயையா? புரிதல்கள் அனைத்தும் அவரவர்க்கே உரியனவா? அனைத்துமே விம்பங்களா? இக்கனியிலுள்ள விதை மண் கிழித்து வெளிவரும் போது என்ஆயுள் முடிந்திருக்கும். விரல்களில் படிந்த வெண்ணுரை என்னைப் பார்த்து நகைப்பது போலிருந்தது.

## இடதுசாரிச் சிந்தனை மிக்க இளம் நம்பிக்கை நட்சத்திரம்



இவர் இடதுசாரிச்சிந்தனை மிக்க ஒரு நம்பிக்கைக்கு உரிய இளம் எழுத்தாளர்.இடதுசாரிச் சிந்தனையோடு பொது எதிரிக்கு எதிராக ஒன்றாக போராட வேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்பட்டு வரும் இளம் படைப்பாளி. இன்று உள்ள விமர்சகர்களில் இவரது விமர்சனம் தனித்துவமானது.ஆழமானது. இவரது நேர்காணலை ஜீவநதி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

**சந்திப்பு –பரணீ**

# லெனின் மதிவானம்

**பரணீ - உங்களுடைய குடும்பப் பின்னணி பற்றியும் நீங்கள் எழுத்துலகில் பிரவேசிப்பதற்கு உந்து சக்தியாய் இருந்த காரணிகள் பற்றியும் குறிப்பிடுவீர்களா?**

லெனின் - எங்க அப்பா ஆரம்பத்தில் இளம்செழியன் தலைமையில் இயங்கிய திராவிட முன்னேற்றக் கழகத்திலும் பின்னர் சமஜமாச கட்சியிலும் இணைந்து செயற்பட்டவரு. கடைசிகாலத்துல அவர் அமைப்பு சார்ந்த பணிகளிலிருந்து விலகி தான் நின்றாரு. நான்காம் அகிலம் சோசலிஸ்ட் கட்சியின் ஆதரவாளராக இருந்தாரு. அவரை நான் அறிந்த கால முதல் தீவிர ட்ரொஸ்கியவாதியாகவே இருந்திருக்கின்றார். ஸ்டாலினிஸ்டுகளையும் மாவோ வாதிகளையும் அவர் தாக்கி வந்திருப்பதை நான் அவதானித்திருகின்றேன். எங்க அம்மாவும் தொழிலாளர் தேசிய சங்கத்தில் மாதர் அணித் தலைவியாக இருந்தவங்க. அவங்கதான் முதலாவது மாதர் அணித் தலைவியின்னு சொல்லக் கேட்டிருக்கின்றேன். சி.வி வேலுப்பிள்ளை, வெள்ளையன் முதலானோர் தனக்கான தொழிசங்க குருவாக இருந்தாக எங்கம்மா சொல்லுவாங்க. சி. வியின் பல நூல்களை எங்கம்மா தான் சேகரித்து வைச்சிருந்தாங்க. எமது மலையக சமூகத்தில் எங்க முன்னோர் இந்த காலடி வைத்த கால முதல் எவ்வளவு கொடுமைகளையும் துன்பங்களையும் அனுபவிக்க முடியுமோ அத்தனையையும் அனுபவித்தவர்கள். கல்வியறிவு இல்லாத காலத்தில, அல்லது கல்வியுரிமை மறுக்கப்பட்ட காலத்தில அவுங்க தமது கலைகளையும் பண்பாடையும் வாய்மொழி இலக்கியங்களாக பதிவு செய்தே வந்திருங்காங்க. இப்படியான எங்க காலத்திலேயும் தொடந்து கொண்டு தான் இருக்கிறது. தாத்தா பாட்டியிடம் கதைக்கேட்பதிலே தனிசுகம் இருக்குதுனு நினைக்கின்றேன். எங்க தாய் வழி தாத்தா பாட்டி கல்வியறிவு இல்லாத தொழிலாளர்கள். ஆனா எங்க தாத்த பழைய இதிகாச புராணங்களையெல்லாம் நல்லா வாசிப்பாரு. எங்களுக்கு மகாபாரதம், இராமாயணம் என்றெல்லாம் வாசித்துக்காட்டியிருக்காரு. அப்படிதான் எங்க பாட்டியும் மலையக நாட்டார் பாடல்களை அதன் இராகம் பிசகாமல் பாடிக் காட்டுவாள். பல நாட்டார் கதைகளை எங்களுக்கு சொல்லியிருக்கிறாங்க. அந்த காலத்திலே இதெல்லாம் எனக்கு புரியாவிட்டாலும் பின்னாட்கள்ல எனது செயற்பாடுகளுக்கும் ஆய்வுகளுக்கும் இந்த படிப்பினைகள் மிகவும் தாக்கம் செலுத்தியிருக்கின்றது. எனது ஆய்வுகளின் தொடக்கமே இந்த நாட்டார் இலக்கியத்திலிருந்தான் ஆரம்பித்துள்ளது என்பதை இப்போது என்னால் உணர முடிகின்றது. அத்துடன் என் தந்தை ஒரு தீவிர வாசகர். மும்மொழிகளிலிலும் பரிட்சயம் கொண்டிருந்ததுடன் சிங்கள மொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்தார் என்றே சொல்ல வேண்டும். செ.கணேசலிங்கன் அவர்களின் நூல்களை சிங்கள மொழியில் மொழிப்பெயர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுப்பட்டிருந்ததை அவரது இறப்பு செய்தியை செ.க விடம் கூறிய போது அவர் என்கிட்ட சொல்லிருக்கிறார். அவர் தொழிலளவில் வர்த்தகராக என்றளவில் தொழில் பழுவில் நேரத்திற்கான அல்லாடிக் கொண்டிருந்த போதிலும் அவர் வாசிப்பை விட்டதாக தெரியவில்லை. அவரின் ஒரிரு கட்டுரைகள் தான் பிரசுரமாகியிருக்கின்றன. பல கட்டுரைகளை எழுதி பிரசுரிக்காமலே வைத்திருந்தார். எங்கப்பா நானும் தம்பியும் இந்த

மாதிரியான புத்தகங்களையெல்லாம் வாசித்து மனிதர் களாக உருவாக வேண்டும் என்பதில் அதிகமான நம்பிக்கையை கொண்டிருந்தார். அந்த எதிர்பார்ப்பிலேயே எனக்கு லெனின் தம்பிக்கு ட்ரொஸ்க்கி என்றும் பெயர் வைத்திருந்தார். எனக்கு அதற்காக சிறுவர் சார்ந்த நூல்களை வாங்கித் தந்தார். எல்லாத்தையும் விட எங்கப்பா இளஞ்செழியனோடு சேர்ந்து கூட்டங்களுக்கு செல்லுகின்ற போதும் என்னையும் அழைத்து சென்றிருக்கின்றார். குறிப்பாக ஹட்டன் பகுதியை அண்மித்துள்ள காசல்றி தோட்டம் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக இருந்தது என்று தான் சொல்ல வேண்டும் பலர், அவர்கள் நடத்திய அரசியல் வகுப்புகளில் கலந்துக் கொண்டார்கள். இந்தச் சூழல் நான் உருவாகுவதற்கான முதல் தளமாக அமைந்திருக்க வேண்டும்.

**பரணீ - இடதுசாரிச் சிந்தனைகள் மீது உங்களுக்கு நாட்டம் ஏற்படக் காரணம் யாது?**

**லெனின் -** நான் முன்னரே குறிப்பிட்டது போல எமது சமூகத்தில் பெரும்பாலானோர் தொழிலாளர்களாகவே இருந்தனர். எங்களது மூதாதயரும் அவ்வாறு தொழிலாளர்களாகவே இருந்துள்ளனர். மிக சிறு தொகையானவர்களே சிறு முதலாளிகளாக இருந்துள்ளனர். இந்நாட்டில் காலணித்துவ வாதிகளாலும் இனவாதிகளாலும் மிக கொடூரமாக நசுக்கப் பட்டது எங்களது சமூகம். இந்த சமூகப்பின்னணியில் உருவான தன்மானமுள்ள எந்த மனிதனும் அந்த ஒடுக்கு முறைகளை இனங்கண்டவனாகவும் அதற்கு எதிரான போர்க்குணாதிசயத்தை கொண்டவனாகவும் இருப்பான். இதற்கு நான் விதிவிலகல்ல. இந்நிலையில் மார்க்சிய கருத்துக்களை கேட்க கூடிய குடும்ப சூழல் எனக்கிருந்தது. அத்துடன் உலகின் பல பாகங்களில் குறிப்பாக இரசியா சீனா போன்ற நாடுகளில் உள்ள உழைக்கும் மக்கள் எவ்வாறு வெகுண்டு எழுந்தார்கள் அதனூடாக தமது சுய மரியாதையை எவ்வாறு பாதுகாத்துக் கொண்டார்கள் என்ற அனுபவங்களை நான் வாசித்த நூல்கள் எனக்கு தந்தன. அதிலும் பாரதியை படித்த போது தான் நமது சூழலுக்கான மார்க்சிய பிரயோகம் பற்றி சிந்திக்க தொடங்கினேன். எனவே மார்க்சியம் எங்களது பிரச்சினை களுக்கான சரியான தீர்வை தரும் என்ற நம்பிக்கை என்னில் ஆழமாக பதிந்தது.

**பரணீ - இடது சாரிச் சிந்தனைகளை உங்களிடத்தில் வளர்த்துக் கொள்ள உதவியாக இருந்தவர்கள் பற்றிக் குறிப்பிடுவீர்களா?**

**லெனின் -** எனது தந்தையின் அரசியல் பிரவேசத்திற்கு காரணமாக இருந்த தோழர் இளஞ்செழியன் தான் எனது கலை இலக்கிய பண்பாட்டு செயற்பாடுகளுக்கும் ஆதர்சன மாக அமைந்தார். நான் சிறுவனாக இருந்த காலத்தில் எங்க அப்பாவோடு இளம்செழியன் அவர்கள் நடத்தும் கூட்டங் களுக்கு சென்றிருக்கின்றேன். கணீரென்ற குரலில் மிக சிறப்பாக உரயையாற்றுவார். நீண்ட நேரம் அவர் ஆற்றுகின்ற உரையை கூட்டத்திற்கு வந்து இருப்பவர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவர் மட்டுமல்ல அவருடன் இருந்த தோழர்கள் எல்லோருமே சிறந்த பேச்சாளராக இருந்தார்கள். ஏதோ அவங்க சொல்லுறதில் உண்மை இருப்பதாக எனக்கு பட்டது. அதோட அவரது வாழ்க்கை யும் மிக மிக நேர்மையாக இருந்தது. சாப்பாடு, உடுப்பு இன்னும் இதர செலவுகளில் மிக கட்டன் ரைட்டாகவே இருந்தார். சொகுசான வாழ்க்கை தங்களது கொள்கையை அழித்துவிடம் என்பதை அடிக்கடி கூறி வந்தார். நான் அறிந்தவரையில் அவரது தோழர்கள் அன்பளிப்பாக பணம் கொடுத்தால் அதனை பெரும் பாலும் தோழர்களுக்கு கடிதம் அனுப்புகின்ற செலவு களுக்கே பயன்படுத்தினார் என்றே நம்புகின்றேன். பெரியாரில் அதிகமான நாட்டம் கொண்டிருந்த அவர் பின்னாட் களில் மார்க்சிய கருத்துக்களில் நம்பிக்கை வைத்து செயற்படத் தொடங்கினார். குறிப்பாக ட்ரொக்சிய தத்து வத்தில் தான் சரியானது என்ற நம்பிக்கை அவருக் கிருந்தது. அதன் வழி "இளம் சோசலிச முன்னணி" என்ற அமைப்பை உருவாக்கினார். தோழர் இளம்செழியனுடன் இணைந்து செயற்படத் தொடங்கிய எங்கப்பா அதிகமான மார்க்சிய நூல்களை வாங்கி வாசிப்பார். மார்க்சிய இலக்கியம் பற்றி எனக்கும் தம்பிக்கும் விளங்கப் படுத்துவார். அத்துடன் 80களில் எங்கப்பாவுக்கு செ. கணேசலிங்கனுடனான உறவு சிறப்பாக இருந்தது. இந்தகாலத்தில கைலாபதி சிவத்தம்பியின் ஆய்வுகளில் அவருக்கு ஈடுபாடு ஏற்பட்டது. அந்த நேரமே கைலாசபதி எழுதிய பெரும்பாலான நூல்கள் எங்களுக்கு கிடைத்தது. ஒருவகையில் இந்தச் சூழலில் அறிமுகமாகியிருந்த மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், கார்க்கி, பாரதி, பெரியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், கைலாசபதி, சிவத்தம்பி இன்னும் இது போன்ற சிந்தனையாளர்களின் கருத்துக்கள் எனக்கு "மார்க்சிய அழகியல்" குறித்து வெளிச்சம் தந்தன. இதைவிட முக்கியமானதொரு விசயம் தான் எனக்கு தோழர் ந. இவீந்திரனுடன் வந்த நட்பு. அந்த நட்பு இப்போது குடும்ப நட்பாக மாறியிருக் கின்றது. 90களில் நான் ஒரு இளம் ஆசிரியராக பணி யாற்றிக் கொண்டிருந்த காலம். இரவீந்திரன் அரசியல் பண்பாடு கலை இலக்கியம் தொடர்பில் ஸ்தாபன செயற்பாடுகளில் தீவிரமாக செயற்பட்ட காலம். அவரது செயற்பாடுகள் மலையகத்தில் இளைஞரிடையே பெரும் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த காலம். அத்தகைய செயற்பாடுகளினால் ஈர்க்கப்பட்டதாகவே எனது செயற்பாடுகள் அமைந்திருந்தன. மார்க்சியத்தை தமிழ் சூழலுக்கும் மரபிற்கும் ஏற்ப பொருத்திப் பார்த்து எமக்கான ஒரு விமர்சன பார்வையை உருவாக்க துணை நின்றவர் கலாநிதி ந.இரவீந்திரன். நான் எழுத்துலகில் காலடி வைத்த காலம் முதல் இன்றுவரை அரசியல், கலை இலக்கியம், சமூகம் தொடர்பில் பல கருத்தாடல்களும் விவாதங்களும் தோழமையுடன் எம்மிடையே இடம் பெற்று வந்துள்ளன. இவை இலக்கியத்திற்கும் சமூகத் திற்கும் இடையிலான உறவு - பயன்பாடு பற்றி பல கோணங்களிலிருந்தும் தளங்களிலிருந்தும் புரிந்து கொள்வதற்கான அடிப்படையை எனக்கு வழங்கியது. எங்க குடும்ப சூழலில் கார்க்கியும் டால்டோயையும் ஜுலியஸ் பூசிக்கையோ அறிந்திருந்த அளவுக்கு

பாரதியை அறிந்திருக்கவில்லை. பாரதியை அவனது சரித்திர சூழலில் வைத்து புரிந்துக் கொண்டதே இவருடனான விவாதங்களின் ஊடாகத் தான். இத்தோழரிட மிருந்து பெற்ற புதிய கண்ணோட்டங்கள் தவிர, நான் ஏற்கனவே கொண்டிருந்த கலை இலக்கியம் குறித்த கருத்துக்களும் அவரின் அங்கீகாரிப்பின் மூலம் வலுவடைந்தன என்றே சொல்லத் தோன்றுகின்றது. வறட்டு தத்துவ ரீதியான பார்வைகளுக்கு எதிராக தொடர்ந்து போராடுவது அவசியம் என்பதை உணர்ந்தேன்.

இலக்கிய கலந்துரையாடல்களின் போதும் தனிப்பட்ட உரையாடல்களின் போதும் என்னுடன் விவாதித்து என் பாதையை நெறிப்படுத்தியவர் பலர். சகலருடைய பெயர்களையும் இங்கு குறிப்பிடுதல் சாத்தியமில்லை. அதற்கான அவசியமும் இல்லையென்றே கருதுகின்றேன். இருப்பினும் முக்கியமாக சிலரின் பெயர் களை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. திருவாளர்கள் நீர்வை பொன்னையன், நந்தினிசேவியர், தெளிவத்தை ஜோசப், தெணியான், வ.செல்வராஜ், ஆதவன் தீட்சண்யா, பேராசிரியர்கள்: சோ.சந்திரசேகரன், அ.மார்க்ஸ், சி. மௌனகுரு, மல்லியப்புசந்தி திலகர், ஜெயகுமார் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். இத்தகைய மார்க்சிய முற்போக்கு ஜனநாயக சக்திகளிடமிருந்து நான் கற்றுக் கொண்டது அனேகம். இத்தகைய சக்திகளே என் மீதான தொற்றை ஏற்படுத்தி இடதுசாரி சிந்தனையில் நான் காலுன்றுவதற்கு காரணமானவர்கள். நம்மில் இடதுசாரி சிந்தனையை எற்படுத்துகின்றவர் ஒரு இடதுசாரியாகத் தான் இருக்க வேண்டும் என்பதல்ல. ஜனநாயக சக்திகளும் கூட எம்மை இடதுசாரி சிந்தனையை நோக்கி நகர்த்தலாம் என்பதை எனது சொந்த அனுபவங்கள் படிப்பினைகளை தந்துள்ளன.

**பரணீ -** **உங்களுடைய இலக்கிய முயற்சிகள் பற்றிக் கூறுங்கள்?**

**லெனின் -** ஆரம்பத்தில் மலையகம் சமூகம் பற்றித் தான் அனேகமான கட்டுரைகளை எழுதியுள்ளேன். ஆனால் பின்னாட்களில் என் எழுத்துக்கள் மலையகம் சமூகத்தின் எல்லைகளை கடந்து வந்துள்ளதை உணர்கின்றேன். அப்படியிருந்தும் அவைக் கூட மலையக சமூகத்தின் விடுதலையை நாடுவதாகவே அமைந்திருக்கின்றது என்ற எண்ணமே எனக்கிருக்கின்றது. இன்றை காலச் சூழல் அதன் யதார்த்தம் மலையக இலக்கிய முயற்சிகள் மலையகத்தின் எல்லையை தாண்டிவரவே முயற்சிக்கின்றது. எடுத்துக் காட்டாக சி. வி. வேலுப்பிள்ளையோ அல்லது என். எஸ். எம் இராமையாவோ மலையக படைப்பாளியாகவே நோக்கப் பட்டனர். ஆனால் இன்று இந்த நிலை மாறியுள்ளது. எடுத்துக் காட்டாக ஒரு காலத்தில் மலையக இலக்கியவாதியாக பார்க்கப்பட்ட தெளிவத்தை ஜோசப் இன்று இலங்கை படைப் பாளியாக நோக்கப்படுகின்றார். இது தற்செயலாக ஏற்பட்ட மாற்றமில்லை. மலையக இலக்கியம் அதன் யதார்த்த போக்கினை வெளிப்படுத்துகின்ற அதே சமயம் பல சமூகங்களிடையிலான புரிந்துணர்வையும் அது ஏற்படுத்த வேண்டும் என்பது இன்றைய சமூகத் தேவையாகின்றது.

ஒரு கருத்து பிரபல்யமாக பொப்பியுலராக இருக்கு என்பதற்காக நான் என்றும் பேசியதில்லை. எனக்கு சரியானதாக பட்டதையே நான் இதுவரை பேசி வந்திருக்கின்றேன். அவ்வாறு நான் வெளிப்படுத்திய கருத்துக்கள் பிழையானதாக இருந்தால் அதனை சுயவிமர்சனம் செய்தும் இருக்கின்றேன்

உண்மையை சொல்லுறதுனா என் எழுத்துக் கள் எப்போதுமே கூட்டு முயற்சி என்றே சொல்ல விரும்பு கின்றேன். என் வாழ்க்கை அனுபவங்கள், வாசித்த நூல் களில் பெற்ற அறிவு, தோழர்களுடன் இடம் பெற்ற விவாதங்கள் உரையாடல்கள் அனைத்தும் என் எழுத்துக் களை பாதித்திருக்கின்றன. எனது எழுத்துக்களில் சக மனிதர்களையும் அவர்களில் என்னையும் காண்ப தாகவே உணர்கின்றேன். இதை விட அதிகார வர்க்கத்தை சாந்தவர்களுக்கு சௌகாரியத்தை ஏற்படுத்த பீடத்தை யும் அலங்கரிக்கவோ விருதுகளுக்காகவோ நான் எழுதப் போவதில்லை. மறுப்புறத்தில் எமது வாழ்வை யெண்ணி அதற்காக உட்கார்ந்து ஒப்பாரி வைக்க போவதுமில்லை. என் எழுத்துக்கள் சமூக மாற்றப் போராட்டத்தில் ஆயுதமாக திகழ வேண்டும் என்பதே என் எதிர்பார்ப்பு என்பதை ஒரு துளியும் கர்வம் இல்லாமல் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.


**பரணீ -** **இடது சாரிச்சிந்தனைகள் இன்று செயலிழந்து விட்டனவா?**

**லெனின் -** உலகளவில் உழைக்கும் மக்கள் சார்பான ஸ்தாபனங்கள் பின்னடைந்துள்ள நிலையில் மக்களின் புரட்சிகரமான உணர்வுகள் பல தாக்கங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உட்பட்டு வந்துள்ளதை நாம் கவனத்திலெடுத்தல் வேண்டும். உலகளாவிய ரீதியில் பின்னடைவு தனிமனித ஆளுமைச் சிதைவுகள் இன்னும் இது மாதிரியான புறச் சூழல்கள் புறச் சூழ்நிலை காரண மாக இன்று ஒரு பகுதி மக்கள் மத்தியிலும் தோழர்கள் மத்தியிலும் ஒருவித அதிருப்தி மனப்பான்மை வளர்ந்து புரட்சிகர எண்ணங்கள் மங்கலாகி போவதை நாம் நேரடி யாக பார்க்கின்றோம். முதலாளித்துவ சமுதாயத்தை அகற்றி புதிய ஒரு சமுதாயத்தை அமைப்பதன் மூலம் மட்டுமே மனித குலத்திற்கான விமோசனம் கிடைக்கும் என்பதை மறந்து இன்றுள்ள அமைப்புகள் மீது பிரம்மைகள் வளர்வதை நாம் காண்கின்றோம். அதன் காரணமாக போராட்ட உணர்வுகள் மழுங்கி விரக்தியில் மூழ்கி ஒட்டு மொத்தமாக மக்கள் இயக்கங்கள் மீதே வசைபாடுவதை காணலாம்.

அதே போல இடதுசாரி இயக்கத்தில் உள்ள தோழர்கள் சிலரில் தாம் வாழும் சிந்தனைகளில் பல தவறான எண்ணங்கள் உருவாகின்றன. சாதிய உணர்வு கள், மூட நம்பிக்கைகள், பெண்களுக்கு எதிரான தவறான பார்வைகள், தமது வயிற்றுப் பிழைப்பிற்காகவும் புகழுக் காகவும் தன்னார்வ நிறுவனங்களில் சரணடைதல், இன்னும் இதுபோன்ற எண்ணற்ற பிரச்சினைகள் தாக்கம் செலுத்தி வருகின்றன. இவற்றிற்கு இரையாகி புரட்சிகர மான வர்க்க பார்வையை பலவீனமாக்குவது தொடர்பாக வும் நாம் விழிப்படைய வேண்டியுள்ளது. தலைகுனிய வேண்டிய தனிமனித சண்டை, புகழாசை பொன்னாடை

சுமக்கும் ஆசை என்பன இவர்களின் சிந்தனைகளை கீழ் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன. இது தொடர்பிலும் நாம் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. இத் தத்துவார்த்த போராட்டத்தில் எதிரிகளை விட இந்த புதிய மதம் மாறிகளே தீவிரமாக செயற்படுவதால் நமது போராட்டத்தை மிகுந்த நிதானத்துடன் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இவ்விடத்தில் பல இடது சாரி இயக்கங்களினதும் அர்ப்பணிப்பு மிக்க தோழர்களினதும் செயற்பாடுகள் எமக்கு வழிகாட்டியாக உள்ளன.

அத்தோடு இன்னொரு விடயம் பற்றியும் கவனமெடுக்க வேண்டியுள்ளது. மார்க்சியத்தை இன்றைய யதார்த்த சூழலுக்கு ஏற்றவகையில் புனரமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. மார்க்சியம் என்பது எல்லாக் காலகட்டத்திற்கும் எல்லா சூழலுக்கும் பொருத்தமான திட்டவட்டமான தத்துவத்தையோ வேலைத்திட்டத்தையோ முன்மொழியவில்லை. அது ஒவ்வொரு வரலாற்றுக் காலங்களிலும் மனித குலத்தின் முன்னேற்றத்திற்கான திசை வழியைக் காட்டி நின்றது என்பதை நாம் புரிந்து செயற் பட வேண்டியுள்ளது. எடுத்துக் காட்டாக முன்னோர் சொல் வசனங்களுக்குள் முடங்கி விட்டு வெறும் கோசங்களை எழுப்பி செல்வதால் மட்டுமே இடதுசாரி இயக்கங்கள் முன்னேற போவதில்லை. சில நேரங்களில் பாரிய பின்னடைவுகளை அடைந்ததும் உண்டு. தோழர்கள் தியாகம் என்ற பெயரில் அர்ப்பணிப்பை பற்றி மாத்திரமே கவலைப்படுகின்றார்களே தவிர விளைவை பற்றி கவலைப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக லியோன் ட்ரொட்கி மார்சின் கருத்துகளினால் கவரப்பட்டு மார்க்சுக்கு மிகுந்த விசுவாசமாக இருந் திருக்கின்றார். லெனினை பொறுத்தமட்டில் மார்க்சியத்திற்கு விசுவாசமாக இருந்தமை யினால் தான் தன் காலச் சூழலுக்கு ஏற்ற வகையில் அவரால் சிந்திக்க முடிந்தது. லெனினிசம் என்ற கோட்பாட்டை உருவாக்க முடிந்தது. அவ்வாறே தான் மாஓ தன்காலத் தின் தேசத்தின் உயிர்நாடிகளை புரிந்து கொண்டு செயற்பட்டமையினாலேயே மாஓலிசம் என்ற தத்துவம் கட்டி வளர்க்கப் பட்டது. தேசவிடுதலையின் ஊடாக சோசலிசத்தை கட்யெழுப்ப முற்படுகின்ற வரலாற்றுக் காலக்கட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வதிவகாரத்தை மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் என விருத்தி செய்திருந்தார். அவர் அதனை தொடர்ந்து முன்னெடுக்கும் முயற்சிகள் பற்றி இன்று மார்சியர்கள்



விமர்சனத்திற்குள்ளாக்குகின்றனர். மார்சியத்தை அதன் மூலவர்களிட மிருந்து கற்று நமது சூழ்நிலைக்கு ஏற்றவகையில் ஒடுக்குகின்ற தேசங்களிலிருந்து ஒடுக்கப்பட்ட தேசத்தை விடுவிக்கும் முயற்சியில் சாவேஸ் மேற்கொண்ட பங்களிப்புகள் முக்கியமானவை. சோசலிசம் என்பது வானத்திலிருந்து வருவதல்ல. அது சூழலிலிருந்தே தோன்று கின்றது என்றவகையில் மக்கள் ஜனநாயகத்தை கையிலேந்தி வெனிசுலா வில் பாராளுமன்றத்தின் ஊடாக சோசலிச சமூகத்தை நோக்கி பயணித்தமை சாவேசின் முக்கிய பங்களிப்பாக கருதுகின்றேன்.

இங்கு இன்னொரு விடயம் பற்றியும் பார்க்க வேண்டியுள்ளது. நமது சூழலுக்கான மார்க்சிய பிரயோகமாக இரட்டைத் தேசியம் விளங்குகின்றது. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சம் யாதெனில், இந்திய வாழ்முறையின் சுரண்டலுக்கான ஏற்றத்தாழ்வுடைய சமூகவமைப்பினுடைய மாற்று வடிவம் சாதி என்பதை புரிந்து கொள்ளல் அவசியமாகும். அதே சந்தர்ப்பத்தில் இந்தியாவை ஆக்கிரமித்து நாட்டைக் கொள்ளையடித்த ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இவ்விடத்தில் ஏகாதி பத்தியத்திற்கு எதிரான போராட்டமும் சாதி எதிர்ப்பு போராட்டமும் பிளவு பட்ட தேசியமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதை காணலாம். இவ்விடத்தில் இன்னாரு விடயம் பற்றியும் சிந்தித்தல் அவசியம். உண்மையில் இரட்டைத் தேசிய பிளவு என்ற நடைமுறைச் செயற்பாடு சாதியச் சமூகத்திற்குரிய யதார்த்தம் என்பதைபுரிந்துக் கொள்ளல் அவசியம். இத்தகைய விடயங் களை கவனத்திலெடுத்துக் கொண்டு தான் நம் முன்னேற வேண்டியுள்ளது.

ஒருபுறமாக நசிவு தரும் அரசியல் பண்பாட்டு இயக்கங்கள் மறுபுறத்தில் அதிதீவிர வரட்டு வாதத்தில் மூழ்கி வெறும் கோசங்களின் அடிப்படையிலான செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இவர்கள் பொது மக்களுக்காக இயங்குவதை விட இரசிகர் மன்றங்களை உருவாக்குவதையே நோக்காக கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் இன்று பல அமைப்புகள் தோற்றம் பெற்ற வண்ணமே உள்ளன. அவ்வமைப்புகளின் வெளியீடுகளும் வெளிவந்த வண்ணமே உள்ளன. இவ்வாறானதோர் சூழலில் சகல ஜனநாயக மார்க்சிய சக்திகளும் ஒன்றிணைதல் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. ஒன்றிணைவது என்பது ஒரு அமைப்பு அல்லது கட்சி சார்ந்த உணர்வை மற்றக் குழுக்களின் மீது திணிப்பதல்ல, மாறாக ஒவ்வொரு அணியிலும் காணப்படக் கூடிய சமூகம் சார்ந்த கூறுகளை சாதகமாக பயன்படுத்தி ஒன்றாக செயற்பட வேண்டும் என்பதே அதன் பொருள். மாறாக வெற்றுக் கோணங்களினால் நிலை நிறுத்த முற்படுகின்ற எந்தவொரு அமைப்பும் சமூகத்திற்கு பயன்படப்போவதில்லை. அழிவையே கொண்டு வரும்.

எப்போதும் பலங்களை மாத்திரம் பேசிக் கொண்டிருப்பது பின்னடைவிற்கும் பலத்தை மாத்திரம் பேசிக் கொண்டிருப்பது விரக்திக்கும் இட்டு செல்லும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

**பரணீ - இடதுசாரிச்சிந்தனைகளை முன்னெடுத்துச் சென்றுள்ள முக்கியமான இலக்கியப் படைப்புகள் பற்றி, சற்றுக் குறிப்பிடுங்கள்?**

**லெனின் -** இந்த இடத்தில நான் உடன் ஞாபகத்திற்கு வரும் படைப்புகளையே கூறுகின்றேன். அவ்வாறு கூற முற்படு கின்ற உதாரணங்களோ படைப்புகளோ முழுமையானவை அல்ல. சில இலக்கிய போக்குகளை சுட்டிக் காட்டவே அவ்வுதாரணங்களை சொல்லுகின்றேன். ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு தேசத்திலும் அறிஞர்களும் இலக்கியவாதிகளும் சமூகச் செயற்பாட்டாளர்களும் தோன்றுகின்றார்கள். அவர்கள் தமது சிந்தனையால் செயற் பாட்டால் மனித குலத்தை மேன்மையடைய செய்திருக் கின்றார்கள். அந்தவகையில் இடதுசாரி சிந்தனைகளை இலக்கியங்களில் பிரதிபலித்தவர் என்று நாம் சிந்திக்கின்ற போது உடன் நம் கண்முன் வருபவர் மார்க்சிம் கார்க்கியும் லூசுனும் தான். புதிய தோர் உலகை படைப்பதற்கான சமூகமாற்றப் போராட்டத்தில் கோடான கோடி உழைக்கும் மக்களின் நலனில் அக்கறைக் கொண்டு உழைத்தவர்கள். அந்த உணர்வே அவர்களின் படைப்புகளில் வெளிப்பட்டது. பத்தாயிரம் பொதுக் கூட்டங்களை விட கார்க்கியின் தாய் நாவல் லட்சக்கணக்கான மக்களை உணர்வு கொண்டு எழச் செய்தது என்பார்கள். இதே மாதிரி நிக்கொலாய் ஒஸ்றோவஸ்க்கியின் வீரம் விளைந்தது என்ற நாவல் முக்கியமானது. அவ்வாறே சீன புரட்சியின் அறுவடையாக அமைந்த யங்மோ எழுதிய இளமையின் கீதம் முக்கியமாக குறித்துக் காட்டப்பட வேண்டியதொன்றாகும். கார்க்கியின் "தாய்" நாவல் ரசிய புரட்சிக்கு முன் எழுதப்பட்டதாகும். ரசிய புரட்சியை சரியான திசையில் இட்டு சென்றதில் அந்நாவலுக்கு முக்கிய இடமுண்டு. கார்க்கியின் அனுபவங்களை உள்வாங்கி அதன் வழியில் பட்டைத்தீட்டப்பட்ட அறுவடையாகவும் சில சமயங்களில் அதன் சிகரமாகவும் கூட இந்நாவல் விளங்குகின்றது. சீன கலாசார புரட்சியின் போது இந்நாவல் தடைசெய்யப்பட்ட நாவலாக இருந்தமையினால் அதிகமானோரின் கவனத்தை பெறத் தவறிவிட்டன. இந்நூல் பற்றி விரிவான ஆய்வுகள் எதுவும் மார்க்சிய விமர்சகர்களால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. நாம் சுயவிமர்சனம் செய்ய வேண்டிய அம்சங்களில் இதுவும் ஒன்று.

இதே மாதிரி கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளை பிரித்தானிய காலனித்துவம் ஆக்கிரமித்த நேரத்தில் அந்நாட்களில் விடுதலை இயக்கங்கள் தோன்றின. அந்த வகையில் கென்யாவின் சுதந்திர போராட்ட வரலாற்றில் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்த "மாவ் மாவ் இயக்கம்" என பிரித்தானியரால் அழைக்கப்பட்ட "மண் மீட்புப் படை" முக்கியமானதாகும். பல்லாயிரக் கணக்கான உயிர் தியாங்களுடனும் மீட்டெடுக்கப்பட்ட நாடு பின்வந்த உள்நாட்டு இடைத் தரகர்களால் எவ்வாறு ஏகாதிபத்திய சக்திகளுக்கு காட்டிக் கொடுக்கப்படுகின்றது என்பதை கூகி வா தியாங்கோவின் எழுத்துக்கள் பிரதிபலித்தன. இக்கட்டான சூழ்நிலையில் மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்த மாயாஜால கதை உத்தி முறைகளைப் பயன் படுத்தி தமது படைப்புகளை வெளிக் கொணர்ந்துள்ளார். ஐரோப்பிய சமூகத்தில் யதார்த்தவாதம் எவ்வாறு கலையாக்க உத்தி முறையாக விளங்கியதோ அவ்வாறே தென்னமெரிக்க ஆபிரிக்க நாடுகளில் மந்திர யதார்த்த வாதம் கலையாக்க உத்தி முறையாக விளங்கியது. இந்த மந்திர யதார்த்த கலையாக்க உத்தி முறையில் மக்களின் வாழ்வு படைப்பாக்கப்பட்டுள்ளது என்பது கவனத்தி லெடுக்க வேண்டிய விடயமாகும். கார்ஸியா மார்க்கு வெஸின் One Hundred Years of Solitude என்ற நாவல் முக்கியமானதாகும்.

அவ்வாறே இந்தியா– இலங்கை சமூகங்கள் பற்றி பார்க்கின்ற போது ஐரோப்பிய வாழ்முறையில் காணப்பட்ட வர்க்க கட்டமைப்பு அப்படியே இங்கு காணப் படவில்லை. இனக்குழு முறையின் விளைவாக தோன்றிய சாதிய முறையும் இங்கு தாக்கம் செலுத்தக் கூடியதாக இருந்தது. இவ்விடத்தில் முக்கியமானதொரு செய்தியையும் கூறவேண்டியுள்ளது. இந்தியாவில் ஏகாதி பத்திய எதிர்ப்புப் கொண்டிருந்த காங்கிஸ் காரர்கள் சாதிய விடுதலை குறித்து தமது செயற்பாடுகளை முன்னெடுக்கத் தவறிவிட்டனர். அதேநேரம் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களான அம்பேத்கர், அயோத்திதாசர் முதலானோர் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை அவசியத்தை உணர்ந்திருந்தனர் என்ற போதிலும் அவர்கள் ஆங்கிலேயருடன் கூட்டமைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கான விடுதலைப்பற்றி சிந்தித்தமை பலவீன மானதாக அமைந்தது. இருப்பினும் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான பல கூறுகளை இவர்களிட மிருந்துக் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. நான் மேலே சொன்னது போன்று இரட்டைத் தேசியத்தை முன்னிறுத்தி தேச விடுதலையையும் சாதியத்தையும் நாடி நிற்கின்ற போராட்டமானது உள்ளூர் பிற்போக்கு வாதிகளுக்கும் ஏகாதிபத்திய வாதிகளுக்கும் எதிரான போராட்டமாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்து செயற்பட்டவர் பாரதி. பாரதி தான் இரட்டை தேசிய முரண்பாட்டை இனங்கண்டு முழு விடுதலைக்கு மான கருத்தியலை முன்னிறுத்தியவன். இரட்டைத் தேசியம் முரண்பாட்டை இனங்காணல் என்பது நமது சூழலுக்கான மார்க்சிய பிரயோகமே. அந்தவகையில் முன்னோடி முயற்சிகள் என்றவகையில் பாரதியின் எழுத்துக்களை தமிழ் சூழலில் எழுந்த இடதுசாரி படைப்பு களாகவே காண்கின்றேன். பாரதிக்கு சம ஆளுமையாக திகழ்ந்த கியூபா தேசத்தின் இலக்கிய முன்னோடி ஹொஸே மார்த்தியை அன்றைய முன்னணித் தலைவர் களாக சேகுவேரா, பிடல் காஸ்ரோ இன்னும் இது போன்றவர்கள் புரிந்துக் கொண்டது போல தமிழ் சூழலில் பாரதியை நாம் இனங் கண்டோமா என்பது கேள்விதான்.


இவ்வாறே தமிழகத்தில் தோன்றிய தொ.மு.சி. ரகுநாதனின் பஞ்சும் பசியும் நாவல் முக்கியமானது. நெசவாலை தொழிலாளர்கள் பற்றியும் அவர்களது

போராட்டம் பற்றியும் குறிப்பிடுகின்றது. அதேசமயம் இந்நாவல் சினிமாத்தனமான பாத்திரங்களையும் படைப்பாக்கம் செய்துள்ளது என்ற விமர்சனத்திலும் நியாயம் இருக்கின்றது. அதே மாதிரி ஜி.கல்யாணராவின் தீண்டாத வசந்தம், நாவல் துறையில் ஒரு திருப்பு முனையாகவே கருதுகின்றேன். தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை இந்திய வாழ்நிலையில் நின்று உழைக்கும் மக்களின் கண்ணோட்டத்தில் படைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளது. தாய் நாவலில் வருகின்ற தாய் பாத்திரம் ரசிய நாட்டின் வெளிப்பாடு என்றால் தீண்டாத வசந்தம் நாவலில் வருகின்ற ரூத் இந்திய வாழ்நிலைக்குரிய பாத்திரம் என்பதை நாம் உணர வேண்டும். அந்தவகையில் இந்தியாவில் தகழி சிவசங்கரம் பிள்ளை, பிரம்சந், பா.விசாலம், ச.தமிழ்செல்வன், ஆதவன் தீட்சண்யா இவ்வாறு இலங்கையில் தமிழின் வாழ்நிலையில் இடதுசாரி சிந்தனைகளை வெளிப்படுத்திய படைப்பாளர்களாக நாம் கே.டானியல், இ.முருகையன், நீர்வை பொன்னையன், நந்தினி சேவியர், தெணியான், க.தணிகாசலம், சாருமதி இப்படியாக பலரைக் குறிப்பிடலாம். இவர்களுடைய நுண்ணிய தத்துவார்த்த வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் மக்களின் வாழ்வை படைப்பாக்கி தருவதிலும் மனித வாழ்வின் செழுமைக்கும் உரமூட்டியவர்கள். இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால் சமூகமே ஒரு மனிதனுடைய மனச்சாட்சியை யும் சிந்தனைகளையும் உருவாக்குகின்றது. ஒவ்வொரு படைப்பாளிகளும் தமது நாட்டிற்கும் சூழலுக்கும் ஏற்றவகையிலே சிந்தித்து செயலாற்றியுள்ளனர். உள்ளடக்கத்தில் மாத்திரமன்று வடிவமைப்பிலும் தன் காலம் எத்தகைய தாக்கங்களை செலுத்தியிருக்கின்றது என்பதை இந்த வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

**பரணீ - கே.டானியலின் இலக்கிய ஆளுமை குறித்த உங்களின் மனப்பதிவுகள் யாவை?**

**லெனின் -** இலங்கையில் வடக்கில் நிலவிய சாதிய அமைப்பானது தாழ்த்தப்பட்ட மக்களை பல்வேறு நிலைகளில் சுரண்டியும் ஒடுக்கியும் வந்துள்ளது. ஏகாதிபத்தியம் எப்படி தேசங்களை ஒடுக்கி உரிமையை அபகரிக்கின்றதோ அதே மாதிரி சாதிய சமூகத்தில் ஆதிக்க சாதியினர் ஒடுக்கப்பட்ட சாதியினரை ஒடுக்கியும் சுரண்டியும் வருகின்றனர். இந்தியாவில் பிராமணர்களை போன்று இலங்கையில் சைவ வேளாளர்கள் பொருளாதார ஆதிக்கம் கொண்டவர்களாக காணப்பட்டனர். அவர்கள் எவ்வளவுதான் பொருளாதார ஆதிக்கம் பெற்றிருப்பினும் சதுர் வர்ண அடிப்படையில் அவர்கள் பிராமணர்களை விட கீழானவர்களாக காணப்பட்டமையினால் இவற்றினடியாக எழுகின்ற தாழ்வு மனப்பாங்கும் அம்மக்களிடையே சாதியம் இறுக்கம் அடைவதற்கு காரணமாக இருந்தது. இவ்விடத்தில் இந்தியாவில் நிலவிய சாதிய இறுக்கத்தை விட இலங்கையின் வடபகுதியில் நிலவிய சாதிய இறுக்கம் கொடூரமானதாக தான் தோன்றுகின்றது. எங்கெல்லாம் ஒடுக்கு முறைகள் தோன்றுகின்றதோ அங்கெல்லாம் போராட்டங்களும் இயக்கங்களும் தோன்றுவது தான் வரலாற்று நியதி. தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்களும் மனிதப் பிறவிகளே என தங்கள் முஸ்டிகளை உயர்த்தி அவர்கள் செய்த கலகத்தின் வெளிப்பாடே சிறுப்பான்மை தமிழர் மகாசபையாகும். ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டி சாதியத்திற்கு எதிராக போராடத் தொடங்கினர். அவ்வாறே 60களில் தோன்றிய புதிய அரசியல் முனைப்புகளின் பின்னணியில் உருவான தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கப் போராட்டம் தாழ்த்தப்பட்ட சாதியினரை மாத்திரமல்ல ஜனநாயக நல்லெண்ணம் கொண்ட உயர்சாதியினரையும் அணித்திரட்டியிருந்தது. வெகுசன அமைப்பாக தோன்றிய இவ்வமைப்பானது சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை வர்க்க போராட்டத்தின் நோக்கில் முன்வைத்தது. இத்தகைய போராட்டங்களின் அறுவடையாகவே நான் டானியலை பார்க்கின்றேன்.

இப்போராட்டங்களை பதிவாக்குவதிலும் அதற்கான கோட்பாட்டு அடித்தளத்தை பண்பாட்டுத் தளத்தில் முன் வைப்பதற்கும் பேராசிரியர் கைலாசபதியின் விமர்சனம் எவ்வாறு முக்கிய பங்காற்றியதோ அவ்வாறே டானியலின் அப்போராட்டங்களை படைப்பாக்குவதில் டானியலின் பங்களிப்பு முக்கியமானதாகவே பார்க்கின்றேன். அவரது சிறுகதைகளும் நாவல்களும் சாதியின் கொடுமைகளை யும் அவற்றுக்கு எதிரான போராட்டங்களையும் இயன்ற வரை நடப்பிலைப் புரிந்து கொண்டு உண்மையின் பக்கம் நின்று படைப்பாக்க முனைந்திருக்கின்றார். தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கையை மாத்திரமன்றி சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட மக்கள் பாலியல் தொழிலாளர்கள், மாமா வேலைப்பார்போர் என பல தரப்பட்டோர் வாழ்க்கை முறைகளையும் அவர் படைப்பாக்கி தர தவறவில்லை. தமிழிலே நாவல் இலக்கியத்தில் தோன்றிய சிறந்த நாவலாக கானலைக் குறிப்பிடலாம். பல விமர்சனர்கள் டானியலின் ஏனைய நாவல்கள் யாவும் கானல் நாவலை எழுதுவதற்கான படிக்கற்கள் என்பர். இக் கூற்றில் எனக்கும் முழு உடன்பாடுண்டு.




அதே நேரத்தில் டானியல் பற்றி எழுந்த நியாய பூர்வமான விமர்சனங்களையும் நாம் புறக்கணித்து விட முடியாது. அதாவது 50களில் டானியல் எழுதிய

சிறுகதைகளில் சாதியத்தின் ஒடுக்குமுறைகளை சித்திரித்த அதேசமயம் சாதியம் கடந்த வர்க்க ஐக்கியத்தையும் அவரது சிறுகதைகளில் காணமுடிந்தமை அவரது படைப்பாளுமை யின் மிக முக்கியமான அம்சமாக காண முடிந்தது. ஆனால் அவரது நாவல்களில் குறிப்பாக கானலைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் வர்க்கம் கடந்த சாதிய பார்வையே பிரதானப்பட்டுள்ளது என்பது துரதிஷ்டவசமானதொன் றாகும். தாழ்த்தப்பட்டவர் ஒருவர் முதலாளியானால் அல்லது தாழ்த்தப்பட்ட முதலாளியொருவரை எந்த வர்க்கத் தினுள் அடக்குவது என்பதில் பல முரண்பட்ட கருத்துக்கள் அவரிடமிருப்பதை காணமுடிகின்றது. வர்க்கமும் சாதியும் ஒன்றென கருதிய குழப்பங்களும் அவரது நாவல்களில் காணப்படுகின்றன என்ற விமர்சனங்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை தான். அத்தோடு டானியல் மீது வைக்கப்படுகின்ற மற்றொரு விமர்சனம் உயர்சாதி ஆடவர்கள் தாழ்த்தப்பட்ட சாதி பெண்களை போகப் பொருளாக வைத்துக் கொள்வதற்கு இலக்கிய பழி வாங்கலாக உயர்சாதி பெண்களை பாலியல் சோரம் போகின்றவர்களாக காட்டியுள்ளார் என்பதாகும். அவரது அடிமைகள் நாவலில் வரும் கண்ணம்மா என்ற பாத்திரத்தை தவிர ஏனைய உயர் சாதி பாத்திரங்கள் யாவும் மேற்குறித்த அடிப்படையிலேயே படைப்பாக்கப்பட்டுள்ளன. சமூக மாற்றத்திற்காக பேனா பிடித்த புரட்சிகர எழுத்தாள ரொருவருக்கான பண்பாக இது அமையாது என்பதை நாம் கவனத்திலெடுத்தல் அவசியமாகும். இதற்கு அப்பால் ஒரு காலகட்ட போக்கில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை யையும் போராட்டங்களையும் சித்திரித்த மிக முக்கியமான படைப்பாளி என்ற வகையில் அவரது படைப்புகளில் காணப் படும் மனிதநேயம் சமூகபங்களிப்பு பலவீனங்களை கடந்து வெற்றிபெற்றிருக்கின்றது என்றே கூறத் தோன்றுகின்றது.

**பரணீ - பின்நவீனத்துவவாதிகள் சொல்லாடலினால் சாதாரண வாசகர்களைக் குழப்புகிறார்களா?**

**லெனின் -** பின் நவீனத்துவம் ஒடுக்கப்பட்ட மக்களை பல பிரிவுகளாக பிரிப்பதுடன் அவர்கள் நலன் சார்ந்த போராட்டத்தையும் கூறுபடுத்தி பல எதிரிகளையும் உருவாக்கித் தருகின்றது. இவ்வகையில் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்குள் ஐக்கியப்பட்டு பிரதான எதிரிக்கு எதிராக போராடுவதற்கு பதிலாக நேச சக்திகளுக்கிடை யிலான முரண்பாடுகளையும் எதிர்ப்பையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர். முதலாளித்துவ நாடுகளின் ஆசீர்வாதத் துடன் இத்தகைய கைங்கரியங்கள் நடந்தேறுகின்றன.

பின்நவீனத்துவத்தை நியாயப்படுத்துகின்றவர் கள் சொல்லும் காரணம் அமெரிக்காவில் பாட்டாளி வர்க்கம் இல்லை என்பதாகும். பொருளாதாரத்துறை சேவைத்துறை தகவல் தொடர்புத்துறையே இங்கு முக்கிய மானதாக இருப்பதனால் பாட்டாளிவர்க்கம் தொடர்ந்து இருப்பதற்கான சூழ்நிலையில்லை என வாதிடுகின்றனர். அத்துடன் இந்த மாற்றம் உலகமயமாதல் மூலமாக உல கெங்கும் நடைப்பெற்று வருவதால் பாட்டாளி வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கப் போராட்டத்திற்கும் இடமில்லை. இந்தப் பின்னணியில் மார்க்சியத்தை மறுக்கின்றனர். அல்லது அதனை காலவாதியான தத்துவமாக காண்கின்றனர்.

அதேநேரத்தில் தமிழில் பின்நவீனத்துவ சிந்தனையை முன்வைத்தவர்கள் அதன் அரசியல் குறித்து பேசியதாக தெரியவில்லை. பின்நவீனத்துவத்தின் சார மாக விளங்குகின்ற பெருங்கதையாடல் கூறுபடுத்தல் ஆகிய கருத்தியல்கள் உலகமயமாதல் சூழலின் ஊடான கொள்ளைச் சுரண்டலுக்கு துணையாக அமைந்துள்ளது. எல்லாப் புனிதங்களையும், மௌனங்களையும் உடைக்கும் விடுதலைக் கருவியாக பாசாங்கு செய்த இவர்கள் முன் வைத்த மறுவாசிப்பு என்ற அம்சமானது சமுதாயத்தில் மக்கள் சார்பாக காணப்பட்ட உள்ளடக்க கூறுகளை தமக்கு சாதகமான வகையில் மாற்றி யமைத்துக் கொள்வதாக அமைந்தது.

**பரணீ - பின்நவீனத்துவம் எவ்வளவு தூரம் மார்க்சிய சிந்தனைகளுடன் ஒத்துப்போகின்றன?**

**லெனின் -** முதலாளித்துவத்தின் வளர்ச்சியையொட்டி அதற்கு எதிராக தோன்றிய கோட்பாடு மார்க்சியம் என்றால் அதற்கு ஆதரவாக தோன்றிய கோட்பாடு பின்நவீனத்துவம். மார்க்சியம் மக்களையொட்டியதாக கிளைபரப்ப பின்நவீனத்துவம் மக்களை விட்டு பிரிந்து மனநோய்க்கு ஆட்படுகின்ற தத்துவமாக காணப்படு கின்றது. பின் நவீனத்துவம் உலகமயத்திற்கு பெரும் அனுசரணையாக உள்ளமையினால், அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் இது சார்ந்த புத்திஜீவிகளை ஆசீர்வதிக்கின்றன. சமூகத்தின் முழுமையான விடுதலையை மறுத்து குழுமங்களுக்கான விடுதலையே இதன் உட்கிடை. இன்றைய முதலாளித்துவத்தின் இந்த திரையை கிழித்து மக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டியது நமது கடமையாகும். பொதுவாக மக்கள் நலன் சார்ந்த கோட்பாட்டாளர்கள் இந்த நவீன கோட்பாடு களை நன்கு கற்றறிந்து அதற்கு எதிரானதோர் தத்துவப் போராட்டத்தை நடாத்த வேண்டியுள்ளது. இன்றைய நாளில் பலர் பின்நவீனத்துவத்தை கற்காமல் அதனை தீட்டாக கருதி அது குறித்த எவ்வித அக்கறையும் செலுத்தாக போக்கும், மறுபுறத்தில் பருவ காலத்து பறவைகள் போல அவ்வக் காலத்து கோட்பாடுகளை பேசுவதில் ஒரு வித திருப்தி அடையும் போக்கும் காணப்படுகின்றன. இவ்விரண்டு போக்குகளுமே நமது காலத்து தத்துவப் போராட்டத்தை சிதைத்திருக்கின்றன. எனவே காலத்தின் தேவையையும் அதன் கோட்பாடு களையும் உணர்ந்து அதற்கு எதிரான தத்துவப் போராட் டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. ந. இரவீந்திரனின் பின்நவீனத்துவமும் அழகியலும் என்ற நூல், தமிழியல் சூழலில் பின்நவீனத்துவம் ஏற்படுத்திய தாக்கம் குறித்து மார்க்சிய கண்ணோட்டத்தில் ஆராயும் முதல் நூலாகும். இவ்வாறே இதனை தொடர்ந்து வெளிவந்த பின்நவீனத் துவம் மாயைகளைக் கட்டவிழ்த்தல் இந்நூல் பல கட்டுரை யாளர்களின் தொகுப்பு. கோ. கேசவன், சி. சிவசேகரம், இ.முருகையன், என்.வேணுகோபால் போன்றோர் அக் கட்டுரைகளை எழுதியுள்ளனர். அதே மாதிரி பின்

நவீனத்துவம் பற்றி தேவ.பேரின்பன் மேற்கொண்ட ஆய்வுகளும், இத்துறைசார்ந்த முக்கிய சாதனைகளாக குறிப்பிடலாம். தமிழில் பின்நவீனத்துவம் அறிமுகப் படுத்திய பேராசிரியர் அ. மார்க்ஸ் அண்மையில் மார்க்சின் பிறந்த தினத்தை முன்னிட்டு முகப்புத்தகத்தில்(Face book) தனது தந்தை அவர் ஒரு நேர்மையான சமூக செயற்பாட்டாளர் என்பதை நான் மலேசியாவில் இருந்த காலத்தில் பல தோழர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அ.மாவே தான் மார்க்ஸ் போன்ற சமூகம் குறித்த கோட் பாட்டையும் சமூக செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்வார் என்ற நம்பிக்கையில் தனக்கு அந்தப் பெயரை வைத்ததாகவும் ஆனால் அவர் பின்நவீனத்திற்குள் மூழ்கியது மார்க்சியத்திலிருந்து விலகி நிற்பதாக இருப்ப தாகவும் எழுதியிருந்தார். இந்த விமர்சனங்கள் சுய விமர்சனங்கள் எதனை உணர்த்தி நிற்கின்றன? அதிகார வர்க்க சிந்தனையின் மேலாதிக்கம், முரண்பாடு என்பன வற்றை திசைத் திருப்புகின்றது. அதற்கும் மேலாக அதிகார வர்க்கம் எதை செய்ய முனைந்து தோல்வி யடைந்ததோ அதனையே நவீனத்துவம் என்ற பெயரில் சாத்தியமாக்க பின் நவீனத்துவம் முனைகின்றது. அந்தவகையில் மார்க்சியத்திற்கு எதிர்வினையாக தோன்றிய கோட்பாடே பின்நவீனத்துவமாகும்.

**பரணீ - இன்றைய இலக்கிய போக்குகள் ஆரோக்கியமாக உள்ளதா?**

**லெனின்** - ஒரு நசிவு தரும் அரசியல் சூழலின் பின்னணியில் இலக்கிய போக்குகளிலும் அதன் தாக்கத்தை காணக் கூடியதாக இருக்கும் என்பதை மேற்சொன்ன உதாரணங்களே இருக்கும் என நம்புகின்றேன். மக்களின் அடிப்படையான பிரச்சினைகளை திசைத்திருப்பி வரு கின்றனர். இன்னொரு புறத்தில் அதிதீவிர புரட்சியாளர்கள் லெனின் இவர்களை தான் புரட்சிகர வாய்ச் சொல் வீரர்கள் என விமர்சனத்திற்படுத்தினார். சகல விதமாக ஜனநாயக நேச சக்திகளையும் தாக்கிவருகின்றனர். இன்று இலக்கியத் தில் முனைப்புற்றுள்ள தனிமனிதவாதம், குழு இழுபறி நிலை அதனடியாக தோன்றும் விமர்சன துஷ்பிரயோகம் எல்லாம் இன்றைய இலக்கிய போக்குகளை சிதறடித்தே இருக்கின்றன.

இன்னொரு முக்கியமாக சுட்டிக்காட்ட வேண்டிய அம்சம் தான். எழுத்தாளர்களிடையே காணப்படுகின்ற தயக்கம். உதாரணத்திற்கு இலங்கையில் இனமுரண் பாட்டின் விளைவாக தோன்றிய இனமோதல் குறுந் தமிழ் பாஸிச சக்திகளாலும் பேரினவாத்தாலும் கூர்மை யடையவே செய்திருக்கின்றனர். குறுந்தமிழ் தேசியவாதம் முறியடிக்கப்பட்டு வெற்றி பெற்ற பேரினவாதம் மக்களுக்கு பொருத்தமான தீர்வு திட்டங்களை முன்னெடுக்காத நிலையில் மக்கள் மீண்டும் குறுந்தமிழ் தேசியத்தை ஆதரிக்கின்றவர்களாக காணப்படுகின்றனர். இந்நிலையில் இனமோதலின் சகல பரிமாணங்களை வெளிக் கொணர்கின்ற கட்டத்தில் நாவலே பொருத்தமான இலக்கிய வடிவமாக இருந்த போதிலும் காத்திரமான நாவல்கள் ஏதும் வந்ததாக தெரியவில்லை. இந்த சூழலில் தமிழ் தேசியத்தின் குறுகிய அரசியல் போக்குகளை விமர்சித்தால் தாங்கள் மக்களிலிருந்து அந்நியப்பட்டு போவோம் என்ற எழுத்தாளர்களின் அச்சம் நாவல் தோன்றாததற்கு பிரதான காரணமாக அமைந்திருப்ப தாக எண்ணத் தோன்றுகின்றது.

ஆனால் அதற்கு மத்தியிலும் பல ஆரோக்கிய மான இலக்கிய செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், தேசிய கலை இலக்கிய பேரவை, புதிய பண்பாட்டுத் தளம், மலையக சமூக ஆய்வு மையம், தகவம், மற்றும் மல்லிகை, ஜீவநதி, நீங்களும் எழுதலாம் போன்ற சஞ்சிகைகளை மையமாக வைத்து உருவாகி யுள்ள வாசகர் வட்டங்கள் யாவும் காத்திரமான இலக்கிய செயற்பாடுகளையே எடுத்துக்காட்டுவதாக படுகின்றது. அத்துடன் இன்று எழுதி கொண்டிருக்கின்ற மூத்த படைப்பாளிகளான நீர்வை பொன்னையன், தெணியான், தெளிவத்தைஜோசப், நந்தினி சேவியர், போன்றோருடன் இதன் அடுத்தக்கட்ட வளர்ச்சியை காட்டுகின்ற நிலையில் கே. ஆர். டேவிட், சுதாராஜ், ஷோபாசக்தி, யோ. கர்னன், முதலானோரைக் குறிப்பிடலாம். அவ்வாறே இன்று இந்தியாவில் இருக்கின்ற தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்த மட்டில் கல்யாணராவ், சின்னப்பபாரதி, மேலாண்மை பொன்னுசாமி, தமிழ்ச் செல்வன், ஆதவன் தீட்சண்யா, பழமலை, பா.வேங்கடேசன் என இப்படியாக பட்டியலை நீட்டிச் செல்லலாம். இது முழுமையான பட்டியல் இல்லை என்பதையும் இவ்விடத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அதேசமயம் மக்கள் இலக்கியம் வலுவோடு துளிர்விடுவதை இந்தப் படைப்புகள் காட்டுகின்றன.

**பரணீ - இலங்கையில் இடதுசாரிப்படைப்பாளிகளுக்கு ஆரம்ப காலங்களில் ஆதரவாக இருந்த சில விமர்சகர்கள் பின்பு இடதுசாரிச்சிந்தனைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அழகியல் வாதிகளாக தங்களை வெளிப்படுத்திக் கொண்டமை பற்றி..?**

**லெனின்** -இலங்கையில் கைலாசபதி சிவத்தம்பி போன்றவர்கள் இலக்கியம் மக்களின் வாழ்க்கை பிரச்சினைகளை எடுத்துக்காட்டுவதுடன் அது மானுட மேன்மையை வலியுறுத்த வேண்டும் என்ற பார்வை முன்னிறுத்தினர். ஏற்றத் தாழ்வான சமூகவமைப்பில் வர்க்க வேறுபாடுகளுக்கு அமையவே மக்களின் இரசனைத் தன்மைகளும் அமையும் என்பது வரலாற்று நியதி. உதாரணமாக உழைப்பை விட்டு பிரிந்து ஓய்வு நேரங்களை கொண்ட மாந்தர்களால் கர்நாடக சங்கீதம் விரும்பி ரசிக்கப்படுவது போல சாதாரண உழைக்கும் மக்களால் ரசிக்கப்படுவதில்லை. அவ்வாறே தொழிலாளர்களாலும் நகர்புற தொழிலாளர்களாலும் ரசிக்கப்படுகின்ற நாட்டார் இலக்கியம் மேல் தட்டு மாந்தர்களால் ரசிக்கப்படுவதில்லை. சில நேரங்களில் அவை நையாண்டி நிலையிலும், இழிவாகவம் பார்க்கப்படுகின்ற நிலையே காண்படுகின்றன. அந்த அடிப்படையில் பார்க்கும் போது படைப்பில் உள்ளடக்கம்

எவ்வாறு வர்க்கம் சார்ந்ததாக உள்ளதோ அப்படியே தான் அதன் உருவகமும் வர்க்கம் சார்ந்ததாக உள்ளது. அதே நேரத்தில் உள்ளடக்கம் உயிர் என்றால் உருவகம் உடல் போன்றது. இவ்விரு அம்சமும் இணைந்தே சிறந்த படைப்பு உருவாக முடியும்.

60களில் வீரியத்துடன் செயற்பட்ட மார்க்சிய விமர்சகர்கள் இலக்கியத்தில் மக்கள் நலனை நிலைநிறுத்த அழகியலின் பெயரில் முற்போக்கு இலக்கியங்களை நிராகரித்த அழகியல் வாதிகளுக்கு எதிராக பேராட வேண்டிய தேவையேற்பட்டது. இந்த இடத்தில் இன்னொரு முக்கியமான விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அதாவது 60களில் இலங்கையின் வடப்பகுதியில் தீண்டாமைக்கு எதிரான போராட்டமானது புதிய பரிமாணத்தை எட்டியிருந்தது. அப்போராட்டம் சாதியையும் தீண்டாமையையும் குறிவைத்து போராடிய போதினும் அதன் தாரக மந்திரம் சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான வர்க்கப் போராட்டம் என்ற விஞ்ஞானபூர்வமான தளத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. ஒடுக்கப்பட்ட சாதியினரை மட்டுமல்ல ஒடுக்கும் சாதியினரையும் அப்போராட்டம் உள்ளடக்கியதாக இருந்தது. வெளிப்படையாக கூறினால் அப்போராட்டம் எமது மண்ணுக்கான வர்க்கப் பேராட்டமே. அதே மாதிரி 70களில் தமிழ் இனவொடுக்கு முறைக்கான போராட்டமும் வலுப் பெற்றிருந்தது. மார்க்ஸியர்கள் அதனை வரலாற்றுச் சூழலில் வைத்துப் பார்க்க தவறிவிட்டனர் என்பது துரதிஷ்டவசமான தொருநிகழ்வாகும். அதேசமயம் தமிழ் அரசுக் கட்சியினர் சாதியப் போராட்டத்தை புறக்கணித்த போதிலும் தமிழ் இனவொடுக்கு முறைக்கு எதிரான பார்வை அவர்களிடம் இருந்தது. காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றம் அவ்வமைப்பும் பிற்போக்கு சக்திகளின் கூடாரமாக மாறியது. இந்நிலையில் பின்நாட்களில் மார்க்சியர்களின் செயற்பாடுகள் பின் தள்ளப்பட்டு பிற்போக்கான தமிழ் தேசியம் மேலோங்கிய நிலையில் அதன் தாக்கத்தை நாம் இலக்கியத்திலும் காணமுடிந்தது. இந்நிலையில் 60களின் ஆரம்பத்தில் மார்க்சியர்களதும் முற்போக்கு ஜனநாயக சக்திகளும் மேலெங்கிய நிலையில் மக்கள் சார்பான இலக்கிய கோட்பாட்டை வலியுறுத்திய மார்க்சிய விமர்சகர்கள் பின்னாட்களில் புதிய அரசியல் தளத்தில் அழகியல் வாதத்திற்குள் மூழ்க தொடங்கினர். ஆழகியலுக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான உறவை காணத்தவறியதன் விளைவாக மார்க்ஸிய முற்போக்கு தடத்தில் வந்த எம்.ஏ.நுஃமான், சித்திரலேகா மௌனகுரு, முதலானோர் அறிந்தோ அறியாமலோ மக்கள் சார்பான அழகியலை நிராகரிக்கின்றவர்களாக இருந்தனர். அதே போன்று கைலாசபதி போன்றோருடன் இணைந்து இலக்கியத்தில் சமுகவியல் போக்கை வலியுறுத்தி வந்த சிவத்தம்பி யதார்த்தம் நேரடியாக இலக்கியமாகாது. எழுதும் போது ஆழகியல் உணர்வே பிரதானமானது என்ற இலக்கிய கோட்பாட்டில் நின்று அண்மைக்கால இலங்கை படைப்பாளிகள் முதுகொடிய யதார்த்தத்தை சுமப்பதால் அப்படைப்புகள் யாவும் வெறும் வெம்பல்கள் எனக் கூறும் ஜெயமோகன் போன்ற தூய அழகியல் வாதிகளின் கருத்து முக்கியமானதென்றும் இன்றைய சிறுகதை இலக்கியத்திற்கு நம்பிக்கையொளி ஊட்டுபவராக அவரைக் காட்டுவதும் இவர்கள் அழகியல் வாதத்திற்கள் மூழ்கி விட்டதையே காட்டுகின்றன. நுஃமானின் அண்மைக்கால எழுத்துக்கள் அழகியல் பார்வையிலிருந்து விடுபட்டு சமூகவியலை நோக்கி பயணிக்கிறதையும் காட்டுகின்றன.

**பரணீ - உங்களுக்கு மனப்பதிவாயுள்ள குறிப்பான இலக்கியப் படைப்புகள் பற்றி குறிப்பிடுங்கள்?**

**லெனின் -** கார்க்கியின் தாய் நாவலை நான் பல தடவைகள் வாசித்திருக்கின்றேன். சராசரி தாய் எவ்வாறு புரட்சிகரமான ஆளுமையாக உருவாகி மனிதகுலத்திற்கான மகத்தான போரட்டத்தினை – இரசிய புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் மகத்தான பங்களிப்பை எடுத்துக் கூறுவதாக அந்நாவல் அமைந்திருந்தது. அதன் பின் என்நெஞ்சில் நிலைத்திருக்கும் நாவல் யங்மோ எழுதிய இளமையின் கீதம் என்ற நாவலாகும். இந்த நவீனம் பழைமைச் சமூகத்தை எதிர்த்துப் போரிட்ட ஒரு இளம் பெண் அறிவு ஜீவியின் கதையாகும். "தாய்" நாவலில் ஒரு சாதாரண தாய் எவ்வாறு புரட்சிகர ஆளுமைக்குள் கொண்டு வரப்பட்டாளோ, அவ்வாறே இந்நூலில் ஒரு சாதாரண பெண் புரட்சிகர ஆளுமைக்குள் கொண்டு வரப்பட்டு, மிகத் தீவிரமான கம்யூனிஸ்டாக மாறி சீன தேசத்தின் விடுதலைக்காகப் போராடுகிறாள். சீனாவின் பண்ணையடிமைத்தனத்திற்கு பலியான தனது தாய் லிண்டோவைப் போல அந்த அடிமை வாழ்க்கை முறைக்குள் மட்டும் கட்டுண்டுக் கிடக்காது, கதாநாயகியான டாவோ சிங் தனது முதல் காதலன் சந்தர்ப்பவாதி என்று தெரிந்ததும் அவனைத் துணிவாக விட்டு விலகிச் செல்கின்றாள். அந்தவகையில் ஒரு பெண்ணின் ஆளுமையையும் அழகுறச் சித்திரித்துக் காட்டப்படுவதில் இந்நாவல் வெற்றியடைகின்றது.

அவ்வாறே தீண்டாதவசந்தம் என்ற நாவல் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. தமிழர் பண்பாட்டு சூழலில் வர்க்கம் இருக்கின்றது, அதேசமயம் சாதியும் இருக்கின்றது என்ற பின்புலத்தில் உழைக்கும் மக்கள் – ஒடுக்கப்பட்டமக்கள் உலகெங்கிலும் நிகழ்த்திய போராட்டத்தின் அனுபவங்களையும் தமதாக்கி தன்வாழ் நிலையில் நின்றுக் கொண்டு இந்நாவல் எழுதப் பட்டுள்ளது. இந்நாவலை தெலுங்கிலிருந்து தமிழ் படுத்திய ஏ.ஜீ. எத்தில்ராஜுலு இடதுசாரி இயக்கத்தை பலவீனப்படுத்தாகவகையில் அந்நாவலில் காணப்பட்ட அதிதீவிர வாத இயக்க போக்குகள் இருந்த பகுதியை நீக்கி விட்டு வெளிக்கொணர்ந்தமையும் பலமான அம்சமாகும். அவ்வாறே டானியலின் எழுத்துக்களில் எனக்கு அதிக ஆர்வம் இருக்கின்றது. கானல் நாவல் குறிப்பிட்டு சொல்லக் கூடியதாகும். இது பற்றிமேலே குறிப்பிட்டிருக்கின்றேன்.

எண்ணிக்கையில் குறைவற்றிருந்தாலும் காத்திரமான சிறுகதைகளை எழுதியிருக்கும் நந்தினி சேவியரின் கதைகள் என்னை பாதித்திருக்கின்றன.

அவ்வாறே கவிதைத்துறையில் சாருமதி. மல்லிகை சி. குமார் முதலானோரின் கவிதைகள் இயல்பாகவே என்னில் ஒரு தொற்றை ஏற்படுத்தி சமூகத்தின் மீதான பற்றையும் பாசத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

சமீபத்தில் நான் வாசித்த நாவல் பி. எச். டானியல் எழுதிய எரியும் பனிக்காடு ஆகும். இந்நாவல் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் வால்பாறைப் பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கிய தமிழக கூலித் தொழிலாளர்களின் கடினமான அவல வாழ்வை சித்திரித்துக் காட்டுகின்றது. அவ்வாழ்க்கை அனுபவங்கள் எமது மலையக வாழ்க்கைக்கு முற்றுமுழுதாக பொருந்திப் போக கூடியது. இந்நாவலை வாசிக்கின்ற போது பல இடங்களில் என் கண்களிலிருந்து கண்ணீர் நிறைந்து குழமாகிக் கொண்டிருந்தது. உண்மையை சொல்லுவ தென்றால் அந்நாவலில் வருகின்ற கருப்பன் பாத்திரத் திரத்தை வாசித்த போது என்னை மறந்து அப்பாத்திர மாகவே மாறியிருந்தேன். வெவ்வேறு காலங்களில் அம்மக்கள் கடும் நோய்க்கு ஆட்பட்டு பெரும் தொகையினர் இறந்து கொண்டிருந்த பகுதியை வாசித்த மறு நாளே நான் சுகயீனமுற்றிருந்தேன். இப்படியாக என்னை அதிகமாக பாதித்த படைப்பு இந்நாவலாக தான் இருக்க முடியும். இந்நாவலை வாசித்த போது சி.வி வேலுப்பிள்ளையின் கவிதைகளை வாசித்த சக்தி பால ஐயா அதன் உந்துத லினால் எழுதிய கவிதையின் பின்வரும் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

"ஆழப்புதைந்த தேயிலைச் செடியின்
ஆடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல்
ஏழைமகனும்– ஏறி மிதித்து இகெவர்
வாழவோ தன்னுயிர் தருவன்"

இந்நாவல் சோகத்தை இசைத்தாலும் சமூக அசைவியக்கத்தை நோக்கி முன்னேற கூடிய உந்துதலையும் எனக்கு வழங்கியது என்பேன்.

# காகம் சுட்ட தேர்தல் பணியாரம்

தேர்தல் பணியாரம் சுடுவதற்காக
காகங்கள் ஊருக்குள் நுழைந்தபோது
ஊத்தைகள் பூமாலை போட்டன
துர்நாற்றம் பட்டாசு கொளுத்தியது
அழுக்கில் ஜனித்த புழுக்கள்
ஊர்வலமாய் அழைத்து வந்தன

தின்னிமாடன் போல
அரசின் அழுக்கை தின்று தின்று தின்றதால்
காகங்களின் வயிறுகள்
கஜானாக்கள் ஆகி இருந்தன.

கஜானா வயிறுகளில் தான்
தேர்தல் பணியாரங்கள் சுடப்பட்டன

பணியாரங்களின் அபூர்வ வாசனையை
காகத்தின் எச்சத்தில் குளிக்கும் காற்று
ஊரெல்லாம் எடுத்துப்போனது

ஒளியையும் ஒலியையும்
காகபகவான் சாத்தான் போல
விழுங்கியிருந்ததால்
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம் என்ற
அடிக்குறிப்புடன்
கண்ணிமைப் பொழுதெல்லாம்
இச்செய்தி மேகத்திரையில் காண்பிக்கப்பட்டது.

முதல்நாள் சுடப்பட்ட பணியாரங்களில்
முத்துமாலைகள் பிரகாசித்தன
பெண்கள் கறுப்பு நிறத்துக்கு துதி பாடினர்

இரண்டாம் நாள் சுடப்பட்ட பணியாரங்களில்
தொழிற்சாலைகள் இருந்தன
தொழிலற்ற இளைஞர்கள்
காகங்களுக்கு கொடி பிடித்தனர்

மூன்றாம் நாள் சுடப்பட்ட பணியாரங்களில்
உழவர் குடிகளுக்குகான மொழிதல்கள்
மார்கழி மழையாகி பொழிந்தன
உழவர்கள் நனைந்தனர்

நாலாவது நாள் சுடப்பட்ட பயணியாரங்களில்
வானத்தை முட்டிய சம்பள உயர்வுகள்
வெள்ளிப்பூக்களை உதிரச்செய்தன

நாலே நாலுநாளில்
ஊரே காகங்களின் காலடியில்
நாய்க்குட்டியாய் விழுந்து கிடந்தது.

வாயை சும்மா பொத்தியிருக்க முடியாத
வெண்புறா காகங்களைப் பார்த்துக் கேட்டது

"போன முறையும் சுட்ட தேர்தல் வடை
பொய்காற்றில் போனது போலவா இதுவும்?"

காக்கையார் ஏளனமாகச் சிரித்தார்
அவருடைய கபட மூளை சொன்னது

"போனமுறை நாங்கள் வடை சுடவில்லை
பாட்டிசுட்ட வடையைத்தானே தூக்கி வந்தோம்
அதையும் நரியார் பிடுங்கி விட்டாரே"

வெண்புறாவைப் பாாத்து
ஊரே கைகொட்டிச் சிரித்தது

விடியற்காலை காகங்கள் கரைந்தன
வெண்புறா வீதியில் செத்துக்கிடந்தது.

ஈழக்கவி

# நெருப்பான நிழல்

நிழலாய் இருந்தாய் நீ!
நீராய்க் குளிர்ந்தாய் நீ!
ஒளியாய்த் தெரிந்தாய் நீ!
உணர்வைப் பகிர்ந்தாய் நீ!
மழைக்குக் குடையாய் மார்கழிக்குப்
போர்வையதாய்
படுத்தும் பசிக்குணவாய்,
படுத்தெழும்பவும் பாயாய்,
நடக்க வழித்துணையாய், நம்பப் பெருநட்பாய்,
எனக்கிருந்தாய்.
கிடைத்தற் கரியதொரு கீதையாய்,
எனக்கிருந்தாய்.
இப்படியே போகும்வரைக்கும் இருப்பாய்நீ
என்றிருந்தேன்.
இப்படியே காடுவரை வருவாய்நீ
என்றிருந்தேன்.
என்னவென்ன வாக எனக்கு இதம்பொழிந்து
நின்றவையோ மாறி
நெருப்பாய் எனைக்கொழுத்த
வைத்தின்று போனாய்.
எனது பலவீனம்
அத்தனையும் அறிந்து அதிலதிலே அம்புவிட்டு
என்னை முடக்கி எனையழிக்க
இக்கணமும்
நின்று பரிகசித்தாய்.
நினக்கென்ன நான்செய்தேன்?
ஒன்றும் உரைக்காமல் உட்பகைப் பொறிமூட்டி
நேரடிப் பகைநெருப்பாய் நீயெரிந்தாய்.
அற்பமான
குற்றமா? ஆழமான குறைதானா?
வேறுபாடு
எங்கே புகைந்ததென்று
எனைக்கேட்டுத் தோற்றுவிட்டேன்!
எங்கே பிழைத்ததென்று இனிக்கேட்டு
என்ன பயன்?
எரியும் நெருப்பணைக்க
என்கண்ணீர் ஊற்றுகிறேன்.



# மழைமுத்து மாலை

மழைவிட்டுப் போன மரத்தடியில் கொட்டுகிற
துளிமுத் தெடுத்து
துளைபோட்டு ஒளிநூலால்
கோர்க்கத் தொடங்க...
குளிர் ஈரம் சிந்துகிற
யார்க்கும் கிடைக்காத புத்துணர்வு ததும்புகிற
மழைமுத்து மாலையொன்று தோன்றிற்று:
யாருக்கவ்
மழைமாலை சூட்டுவது எனுங்கேள்வி எழ
அதனை
உன்சங்குக் கழுத்துக்கு
ஒரு வைர மாலையெனச்
சூட்டுவதே பொருத்தமெனச் சொல்லி
உனைஅழைத்தேன்!
எங்கே இவ் ஏழையின் அழைப்பைப்
புறக்கணித்து
மங்கை நீ போவாயோ...மனந்தவித்தேன்
“அசடனெனப்
பொங்கி வெடிப்பாயோ” மனம்புகைந்தேன்,
நகைநகையாய்த்
தங்கம் அணியாமல் தகதகக்கும் தங்கம்நீ
புன்னகை பொழிந்து போட்டாய்
அம்மாலை ஏற்று!
மழை மாலை உன்கழுத்தில்
நிஜ வைர மாலையாச்சு.
மழை முகத்திற் பட்டுத் தெறித்த
உன் புன்னகைத்தீ
ஒளியோ... என் இரவுக்கு உதயமாகிற்று:
இயற்கையெனும்
நீயணிந் திருந்த ஒற்றைக்கல் மூக்குத்தி
விடிவெள்ளியாய் எனது
விழிக்குவழி காட்டிடுது.

த.ஜெயசீலன்

"மிக்ஸ்ராட் 30 இருந்தா பார்த்து வாங்கி வாங்க... ஜெகன் பார்மஸியில இருக்கு."

"ம்...சரி..."

முனகிய இராமலிங்க வாத்தியார், உடுத்திக் கொண்டு, தனது சைக்கிளை எடுத்தார். அப்பொழுது அவள் தொடர்ந்து சொன்னாள்:

"கவனமப்பா... அவங்கள்... அந்த ஆள் விழுங்கியள் வீதியெல்லாம் தடை போட்டிருக்கிறாங்களாம். ஸ்பீட்ப்ரேக்கர்களும் – சின்னச்சின்ன மலையா வீதியளில இருக்காம்! சைக்கிளில் போறனீங்க விழுந்திடாமப் பார்த்துப் போங்க. மெயின் றொட்டுகளால போகாமல், சின்னவீதிகளால போங்க. போனமாம் வந்தமாம் எண்டு இருக்க வேணும். மருந்து வாங்கின கையோட உடன திரும்புங்க..."

வாத்தியார் சைக்கிளை உருட்டியபடி வீதிக்கு வந்தார்.

அவரது மனைவிக்கு நீரிழிவு நோய். மாத்திரைகள் பலன் தராததால் இப்பொழுது இன்சுலினுக்கு மாறியிருந்தாள். A9 பாதை மூடியதிலிருந்து, குடாநாட்டில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு. உயிர் காக்கும்



# தடை

க.சட்டநாதன்

மருந்துகளும் அப்படி இப்படித்தான். அதுவும் இன்சுலின் மிக அருந்தலாகவே கடைகளில் கிடைத்தது. கையில் ஒரு "வயல்" மருந்து இருந்த போதும் – மேலதிகமாக இன்னொன்று என்ற மனைவியின் முன்யோசனை அவருக்குப் பிடித்திருந்தது.

கவனம் கருதி, வீதியின் இருபக்கமும் பார்வையைச் செலுத்தியவர், சைக்கிளில் ஏறி உட்கார்ந்து கொண்டார். மெதுவாக மிதந்தார். மேற்குப் பார்த்துச் சென்றவர், கோவில் வீதியால் திரும்பினார்.

அவருக்கு எதிராக தீபா வந்து கொண்டிருந்தாள்; இதழ் உடைய. மென்மையான சிரிப்புடன். பூப்பந்து உருண்டு வருவது போல இவரது அருகாக வந்தவள், ப்பிறேக் போட்டு, சைக்கிளில் இருந்து இறங்கினாள். அப்பா இல்லாத பெண். அம்மாவின் முறிவில் தான் தனது படிப்பைத் தொடர்கிறாள். அவளது கைகளில் கனமான பை; புத்தகப்பையாக இருக்க வேணும். ரியூசன் முடிந்து வீடு திரும்புகிறாள் போலும்.

"ஸேர்... சுகமா...? எனக்கு "ஓ.எல்"இல எட்டு டிஸ்ரிங்ஸன்... எல்லாம் உங்கடை கவனமும் கொடையும்..."

"தெரியும்... சர்வேஸ் சொன்னவர்..."

பெருமையும் பூரிப்பும் இழைய அவளையே பார்த்தபடி நின்றார்.

ஆறாம் வகுப்பிலிருந்து ஓ.எல் வரை ஆங்கிலமும் விஞ்ஞானமும் அவரிடம் படித்தவள். அவரது நிழலில் வளர்ந்தவள்.

அவள் மனுஷியாக மாறிக் கொண்டிருந்தாள். அவளது கண்களில் பரவி நின்ற ஒளியும் கருணையும் அவரைத் தொட்டன.

"இந்த நெருக்குவாரத்திலும் உணர்வுகள் சிதைவடையாமல் மனதில் வெண்ணெயாய் திரளும் ரசிப்புகளுடன். மனிதனாக நிமிர்வது இந்த நெகிழ்சிகளினால் தான்..."

தீபாவிடம் விடை பெற்றுக் கொண்டவர்? கோவிலில் வீதிச் சென்றியில் இருந்த ஸ்பீட்ப்ரேக்கரின்

உயரத்தைப் பார்த்துப் பயந்து, இறங்கிச் சைக்கிளை உருட்டினார்.

"ஏய்... சைக்கிளில ஏறிப்போ... போ ஐயா...!"

சென்றியில் நின்றவனின் கனிவு அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

சைக்கிளில் அவர் ஏறிக் கொள்ளவில்லை. நடந்தே சென்றியைக் கடந்தார்.

"அரசடி வீதிச் சந்தியில... பாரதி சிலைக்குப் பக்கத்தில... ஆரோ கிரனேட் வீசீற்றாங்கள். கவனம். பார்த்துப் போங்க..."

சைக்கிளில் விரைந்த பெடியனொருவன் இவருக்குச் செய்தி சொன்னான்.

மூச்சடங்கி நின்றவர், "வீட்ட திரும்புவமா...?" என நினைத்தார்.

"கோயில் வீதியாலை போறது பாதுகாப்பில்லை... நாலடிக்குகொரு ஆமிக்காரன் நிக்கிறான். அவையட வாகன அணிகளுக்குப் பாதுகாப்பாம்...! எங்களைப் பாதுகாக்க வந்ததாகச் சொல்லும் அவங்களுக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளிற அவசரம். It's really Paradoxical..."

அந்த ஆபத்திலும் – அந்த முரணை எண்ணி அவரால் மிக மெலிதாக முறுவலிக்க முடிந்தது.

கோவில் வீதி மட்டுமல்ல– கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி, பாலாலி வீதி என்று எல்லா இடங்களிலும் அவங்கள் துப்பாக்கிச் சனியனை ஏந்திய நிலையில், விசையில் விரல் அழுந்த, போவோர் வருவோரைக் குறி வைத்து நிற்பது அவருக்குத் தெரியும். அந்த வீதிகளையெல்லாம் – பாதுகாப்புக்கருதி அவர் தவிர்த்துக் கொள்ளவே விரும்பினார். ரவுணுக்குப் போவதானால் அந்த் துர்த்தேவதைகளின் அநுக்கிரகம் அவசியம் என்பது அவருக்குத் தெரியும்.

"அந்தக்காலத்தில்... இளமையில... இப்படி... இப்படியொரு நெருக்குவாரம் இருந்ததா...?"

அவர் நினைத்துப் பார்த்தார்.

"சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் ஊர் அமைதியாகத் தான் இருந்தது. தேசிய இனப் பிரச்சினை நீறடி நெருப்பாக இருந்ததென்னவோ உண்மைதான். ஆனாலும், இரத்தம் சிந்துதலும் இன அழிப்பும் இப்படி இருந்ததில்லை..."

"ஊரில, தாவடியில இருந்தபொழுது அம்மாவுக்கு மருந்தெடுக்க சுதுமலையாரிடம் கூடாரவண்டியில் போனது. பச்சைப் பசளையாய்ப் பயன்பட, வண்டில் வண்டிலாய் பூவரசங்குழை ஏத்தி ஐயாவுடன் மருதனார் மடம் சென்றது. சற்றுப் பின்னர், ஐந்தாம் வகுப்போடு பட்டணத்துக்குப் படிக்க வந்தது. நிலவில் – தவத்துடனும் சிவத்துடனும் அம்பலஅ ண்ணருடனும் சைக்கிள் மிதித்து, வின்ஸரிலும் வெலிங்டனிலும் படம் பார்க்க வந்தது. சித்திரை நிலவில் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயிலுக்குச் சப்பறம் பார்க்க மறுநாள் தேர் பார்க்க என்று அலைஞ்சது. பட்டப்படிப்பு முடிஞ்சு வேலை கிடைக்காமல் – பல கனவுகளோடை மாட்டுப் பண்ணை வச்சது. பண்ணைக்கு, சீமைப்பசுக்கள் சிலதை, இரவு வேளையில் ஊர்வரை சாய்த்து வந்தது. எல்லாமே இப்ப நடந்தது போல இருக்கு... அப்படி ஒரு காலமது... அது இனிவருமா...?

நினைவுகளில் தன்னை இழந்தவர், கைலாய பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் – சொக்கர் கடைக்கு அருகாக வந்தபோது, "இராமலிங்கம்" என அழைப்பது கேட்டு, கடைப்பக்கம் திரும்பிப்பார்த்தார்.

"செல்லத்துரை மாஸ்ரர்!", சிரித்தபடி எதிரே வந்தார்.

"பென்சன் எடுத்தாச்சா தம்பி!"

"ஓம் ஸேர்...! இந்த ஜனவரியிலதான் பேப்பர் கொடுத்தனான். கொமியூரட் வந்திட்டுது... பென்சன் அடுத்த மாதம் வரையில கைக்கு வரும்"

அவரது பதிலில் மிகுந்த மரியாதை இருந்தது.

"அவவிட பென்சனும் வரும்; அதுபோதும். அது சரி ரீச்சர் சுகமாக இருக்கிறாவா...?"

"ஏதோ வருத்தங்களோட தட்டு மறிச்சபடி சுகமாக இருக்கிறா. இப்ப, அவவுக்கு மருந்தெடுக்கத் தான் ரவுணுக்குப் போறன்."

"பார்த்துப் போம்... றோட்டெல்லாம் அவங்கட ஆட்சி கவனம்."

"ம்" கொட்டியவர் சைக்கிளை அழுத்தி மிதித்தார். சைக்கிள் சிறிது வேகம் கொண்டது. நாவலர் வீதியில் திரும்பியவர், நேராகச் சென்றார். ஆனைப் பந்தி உபதபாற் கந்தோரடியில் அவரது சைக்கிள் தானாக நின்றது. எதிரே சந்திரா. அவரது அருமைத் தங்கை. அவர் பார்த்திருக்க வளர்ந்த பெண். அவள் அவரைவிட பத்துவயது இளையவள். ஐயாவும் அம்மாவும் அவளைப் பொத்திப் பொத்தி வளர்த்தார்கள். பசுந்தளிராக இருந்தவள் – இளந்தருவாகி, வீச்சங் காட்டிய போது...

பேராதனைப் பல்கலைக்கழகம். சங்கமித்த ஹோல். சிவதாசன். அவன் மீதான பிரேமை என அவளது உலகம் விரிவு கொள்ள... ஐயா அவரது இயல்புகளுக்கு ஏற்ப அவதிப்படாமல் இருந்தார். அம்மா தான் அந்தரப்பட்டாள். அவளுக்குத் தாவடிப் பெருமை. "சாதி சனத்தை விட்டிட்டு ஏன் இப்படி... இப்படி..." என்று புலம்பினாள். அவள் உரசி உரசிப் பார்த்து "சிவதாசன் அப்படி இப்படித்தான்... சொட்டு மாற்றுக்குறைவு... அத்தியடியில இருந்தாலும் அவனது அடியூற்றென்னவோ ஊர் அம்மன் கோயிலடி தான்..." எனப் புறுபுறுத்தாள்.


இது விஷயத்தில் சந்திரா காட்டிய தீரமும்

தீவிரமும் அம்மாவை அசரவைத்தன. அம்மா எதுவும் பேசாமல் ஒதுங்கிக் கொண்டாள். அதைத் தவிர வேறு எதையும் அவளால் அப்பொழுது செய்ய முடியவில்லை.

ஐயாவின் இஷ்ட தெய்வமான இலந்தை வனப்பிள்ளையார் கோவிலில் தான் அவர்களது திருமணம் நடந்தது. ஊரே திரண்டு வந்து அவர்களை வாழ்த்தியது. ஐயா மிகுந்த சந்தோஷப்பட்டார். அம்மாவும் மனக்கிலேசம் நீங்கிய நிலையில் ஆறுதல் அடைந்த மாதிரி இருந்தது.

சந்திரா, சிவதாசனது தாம்பத்தியம் ஆறேழுவருஷம் தான் நிலைத்தது. அந்தக் குறுகிய கால அவகாசத்தில், காதலின் அர்த்தத்தையும் ஆழத்தையும் அவர்களால் அறிந்து அநுபவிக்க முடிந்தது. அதுமட்டுமல்ல, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள, அநுசரித்து உதவ, தீர்மானம் எதுவாயினும் இணைந்து எடுக்க அந்த வாழ்வு அவர்களுக்குப் பெரிதும் உதவியது.

ஒத்த தடத்தில் இசைவு கொண்ட, பட்சமான அந்த வாழ்வு, சடுதியாக முடிவடைந்த போது, சந்திரா மிகுந்த தளர்ச்சியடைந்தாள். இராமலிங்க வாத்தியாரையும் அது மிகவும் பாதித்தது.



நாவாந்துறைப் பக்கம் மீன் வாங்கவெனப் போன சிவதாசன் வீட்டுக்குச் சடலமாய்த் தான் வந்தான். படையினருக்கும் போரளிகளுக்கு மிடையிலே ஏற்பட்ட துப்பாக்கிச் சமரில் அவனது உயிர் காவு கொள்ளப் பட்டு விட்டது. செய்தி அறிந்து ஓடி வந்த வாத்தியார், அவனது நெற்றிப் பொட்டில் இடது மார்பிலும் சூட்டுக்காயங்களைக் கண்டு பதறிப்போனார்.

மரணவீட்டின் – அடி ஆதாரம் அழிந்து, அரை மயக்கத்தில் கிடந்த சந்திராவுக்கு, அவரும் அவரது மனைவி ரதியும் உடனிருந்து உதவினார்கள். ஆறுதல் அளித்தார்கள்.

சிவதாசன் காலமான போது, கையில் ஒன்றும் வயிற்றிலொன்றும் என அலமந்து மறுகிய அவளுக்கு, அண்ணரும், அண்ணியும் தான் எல்லாமாக இருந்தார்கள்

சிறுகச் சிறுக மனசு தேறிய நிலையில், பிள்ளைகளுக்காக வாழத் தொடங்கினாள். சிவதாசன் வசதியான குடும்பத்துப் பிள்ளை ஒரே வாரிசு. அவனது சொத்து சுகமும் அவளது ஆசிரியத் தொழிலும் அவளை ஓரளவு சொந்தக்காலில் நிற்க உதவின. எல்லாவற்றுக்கும் அண்ணை, அண்ணி என்று ஓட வேண்டிய நிர்ப்பந்தம் காலப் போக்கில் அவளுக்கு இல்லாமல் போனது. அது அவளுக்கு ஓரளவு ஆறுதலாய் இருந்தது.

" அண்ணை... ஒரு நிமிஷம்" கூறியவள் , அவர் அருகாக வந்தாள்.

பூசியது போன்ற உடல்வாகு. பாந்தமுடன் பார்க்கும் அந்தக் கண்களில் சுரந்து நிற்கும் கருணை. பரிவு. அவள் சிரிக்கும் பொழுது தெரிந்த பல்லீறுகளின் ஆரோக்கியம் என்று எல்லமே அவருக்கு மகிழ்ச்சியைத்தந்தன. "பிள்ளை மனசு தேறீட்டாள். எல்லாம் அந்த நல்லூரான் அருள்... வதங்கி வத்தலாகிக்கிடந்தவளிலை ஒரு உயிர்ப்பும் தெளிவும் கூடியிருக்கிறது..."

அன்புடன் அவளைப் பார்த்தபடி கேட்டார்:

"என்ன... என்னாச்சி...?"

"சுதன் ஸ்கொலஸிப் பாஸ் பண்ணாததாலை நல்ல பள்ளிக்கூடம் கிடைக்கேல்லை அண்ணை...! மடத்துப் பள்ளிக்கூடத்திலைதான் மட்டையடிக்கிறான்."

"இந்து அதிபரோடை கதைச்சனான். அவனுக்கு வாற தையிலை இடம் கிடைக்கும். இனி அவன் ஏழாம் வகுப்பு... அது சரி, பெரியவன் சதீஸ் இந்துவிலை எட்டுத்தான படிக்கிறான்."

"ஓம்... ஓம்..."

"அண்ணிக்கு மருந்தெடுக்க ரவுணுக்குப் போறன். வரேக்க வீட்டுப் பக்கம் வாறன்."

"அண்ணி எப்பிடி இருக்கிறா...? நானும் அங்கால வந்து ஒரு கிழமையாகுது... வரவேணும். பிள்ளையள், பள்ளிக்கூடம் எண்டு அடிபடுறதில நேரம் மட்டுமட்டாய் போயிடுது..."

"நேரமுள்ள போது வாவன் பிள்ளை... அப்ப நான் வரட்டா..."

"ம்..."

அவளிடம் விடைபெற்றவர், பருத்தித்துறை வீதியால் திரும்பினார். பலாலி வீதியைத் தொட்டு, ஆரியகுளச் சந்தியில், ஸ்ரான்லி வீதிப்பக்கம் திரும்பும் உத்தேசம் அவருக்கு.

சிறாம்பியடிச் சந்தியில் ஆமி குவிந்து கிடந்தது.

அவரது மனதில் பயப்பிராந்தி. லேசாக உடல் பதறுவது போன்ற உணர்வு. மனதைத் திடப்படுத்திபடி, காயத்திரி மந்திர முணுமுணுப்போடு, சைக்கிளை மெதுவாகச் செலுத்தினார். வின்ஸா ரியூசன் சென்ரர், வெலிங்டன் சந்தி எனக் கடந்தவர் – முன்னர் லிடோத் தியேட்டர் இருந்த இடத்தை அடைந்த போது:

"ஏய்...! நில்லு.. நில்லுடா... எங்க போறது...? இதில போக இல்ல... திரும்பு... திரும்புடா...!"

மரியாதை ஏதுமில்லாத காட்டுக்கத்தல்.

"ரவுணுக்கு..."

இராமலிங்கத்தாரின் பலவீனமான குரல்.

சைக்கிளில் இருந்து இறங்கிய இராமலிங் கத்தார், தெருவோரமாக எக்ஸ்போ எயருக்கு முன்பாக இருந்த இடைவெளியால், கஸ்தூரியார் வீதிப்பக்கம் நொழுந்தப் பார்த்தார்.

அவரது முயற்சியை தூரத்திலிருந்து பார்த்த அவரை ஏற்கனவே தடுத்த அதிமேதாவி பாய்ந்து வந்து, அவரையும் அவரது சைக்கிளையும் தனது சப்பாத்துக் கால்களால் உதைத்து தள்ளினான். அவனது கண்களில் படர்ந்த குரோதமும் பகைமை உணர்வும் அவரை நிலைதளர வைத்தன. அவர் கால் இடற விழுந்தார்.

கரங்களில் ஏற்பட்ட சிராய்ப்பைத் துடைத்தபடி எழுந்தவர், "அருந்தப்பு மண்டை கிண்டை உடைந்திருந் தால்..." என அனுங்கினார்.

தெரு நாய் போல உதைபட்டு. அடிபட்டது அவருக்கு அவமானமாயிருந்தது. சுய வெறுப்பு மேலிட, வெட்கப்பட்டவராய்த் தனது உடலைக் குறுக்கிக் கொண்டார். அப்பொழுது அவரை நெருங்கி வந்த இன்னொரு சிப்பாய் அவரது சைக்கிளை எடுத்துத் தந்தபடி, அவருடன் ஆதரவாகப் பேசினான்:

"ஐயா எங்க வேலை பாக்கிறது..."

அந்த சமயத்தில் அவனது குசலமும் விசாரிப்பும் பொருத்தமில்லாமல் இருந்த போதும் – ஏதோ காரணம் பற்றியே அவன் அவ்வாறு கேட்கிறான் என அவர் நினைத்தக் கொண்டார்.

"வாத்தியார். இப்ப பென்சன்."

"ரீச்சர்...? எங்க அக்காவும் ரீச்சர்... அவ அம்பாறையில இருக்கு ஐயா..." சொற்களை விழுங்கி விழுங்கிப் பேசியவனது முகத்தில் ஒரு வகைப் பெருமிதமும் ஒளியின் தள்தளப்பும்.

ஆச்சரியத்துடன் அவனை அவர் பார்த்தார்.

"அந்த ஆள் கெட்டது. பொல்லாதது. வில்லங்கம் செய்யும். திரும்பிப் போ... போ ஐயா...!"

அவன் கூறியதையே, அவர் அருகாக வந்த இளைஞனும் கூறினான்.

சைக்கிளை உருட்டியபடி இவர் திரும்பி ஸ்ரான்லி வீதி வழி நடந்தார். ஏதேதோ நினைவுகளின் சடைப்பு அவரது மனதை அலைக்கழித்தது.

தளர்ச்சியடைந்தது போல "பாவ்லா" காட்டும் சாதி உணர்வு. பழமை பேணும் சமய நம்பிக்கைகளின் பிரதி கூலம். சகமனிதனை நேசிப்புடன் நிமிர்ந்து பார்க்கத் தெரியாத நலிவுற்ற மனிதம். இரத்தமுள்ள வரை ஒட்ட உறிஞ்சும் வணிக சமூக நடத்தை. பிஞ்சிலே பழுத்துப் புரையோடிய புண்ணாய் நொதிப்புக் காட்டும் விடலைகளின் மனச்சிதைவு என்று இந்த மண்ணில் எத்தனை தொந்தரவுகள்.

"இவை போதாதென்று. இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாக இனங்களுக்கிடையிலான பகைமையும் முரணும் சொல்லி மாளாத துன்பமாக, நீளும் துயரமாக நம்மை வருத்துகிறதே..."

"சனங்களுக்கு படையினரின் கெடுபிடி பழக்கமாய்ப் போன போதும் – இந்தக் நெருக்குவாரம் உச்சத்தைத் தொட்ட தென்னவோ இரண்டொரு வருஷ மாகத்தான். விடுதலை, சுதந்திரம் என்பதெல்லாம் கனவா...? கானலா... கண்ணி கண்ணியாய் விழுந்து நம்மை இறுக்கும் இவ்விலங்குகள் உடை படாமலே போய்விடுமா...?"

மனம் பேதலித்தவராய், கன்னாதிட்டி வீதி வழி வந்தவர். அருளின் அக்கடெமி, காளிகோயில் எனக் கடந்து, கஸ்தூரியார் வீதியில் இடது கைபார்த்துத் திரும்பினார்.

எங்கு, எப்பொழுது சைக்கிளில் ஏறினார் என்பது அவரது ஞாபகத்துக்கு வரவில்லை.

பட்டணம் சன நெரிசல் இல்லாமல் இருந்தது. "ஏன், எங்கேன் குண்டு கிண்டு வெடிச்சுதோ...? கிரேனேட் ஏதவது வீசியிருப் பாங்களோ...?"

பயத்துடன் ஆஸ்பத்திரி வீதியில் மிதந்தார். ஒரு சில கடைகளைத்தவிர, அனேகமாக எல்லாக் கடைகளும் பூட்டிக் கிடந்தன. ஜெகன் பார்மஸியும் பூட்டிக் கிடந்தது.

பட்டணம் பம்மிப்போய் இருந்தது. அந்த அசாதாரண நிலைமை அவருக்குப் பீதியூட்டியது. முகத்திலும் கழுத்தோரத்திலும் முத்துமுத்தாக அரும்பிய வியர்வைத்துளிகளைத் துடைத்தவர், "மருந்துக்கு இன்னுமொரு முறை இந்த நரலுக்கை வரேலுமா...?" என நினைத்தவர், எரிச்சலுடன் சைக்கிளைத் திருப்பினார்.

அப்பொழுது அந்தப் பாரிய குண்டுச்சத்தம் கேட்டது.

"இதென்ன கிளே மோரா...? வடக்கா

லயா... கிழக்காலயா...? எங்கை கேக்குது...? நல்லூரடி... கல்வியங் காடு...?"



அவரது உடல் வெடவெடத்தது. கால்களில் லேசான உதறல் மனசைத் திடப்படுத்திக் கொண்டு சைக்கிளில் தாவி ஏறினார்.

"பலாலி வீதி கடந்தால் தான் வீடு போய்ச்சேர்ந்த மாதிரி... இராணுவ வாகன அணி, முகமாலையில வெளிக் கிட்டாலே, இங்க யாழ்ப் பாணத்தில இந்தத் தொடை நடுங்கியள் – மரக் குற்றி களையும், முள்ளுக் கம்பி களையும் போட்டு பலாலிவீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி என அவற்றைத் தொட்டுச் செல்லும் குச்சொழுங்கை களையும் குறுக்கு வீதிகளையும் மறிச்சுப் போடிறாங்கள். இந்த அபத்த நாடகம் எப்பதான் முடியுமோ...? எதுக்கும் கந்தர் மடச்சந்தியால போறது தான் லேசு..."

அழுத்தமான நினைவுகளோடு கஸ்தூரியார் வீதியால் வந்தவர், அரசடி வீதியில் திரும்பினார். கந்தர் மடச்சந்தியில் தடை ஏதும் போடாததால், சுலபமாக அவரால் அதைக்கடக்க முடிந்தது.

பாரதிநிலையடி, நல்லூர் மேற்கு வீதி என வந்தவர், துர்க்கா மணி மண்டபத்தக்கு முன்பாக வந்த போது, வசீகரமான சிரிப்புடன் – தனது ரீக்கடையி லிருந்து வெளியே வந்த ஈசன் தடை சொன்னான்.

"சட்டநாதர் வீதியல தான் கிளேமோர் வெடிச்சதாம்... மேற்படியானில பத்துப்பன்ரெண்டு முடிஞ்சுதாம்... அதனாலை வீடு பூந்து பெண் புரசுகள், பிள்ளைகளெண்டு பாராமல் சுட்டுத் தள்ளியிருக் கிறாங்களாம்..."

"முருகா", என தலைக்கு மேலாகக் கரம் குவித்துக் கூவியவர்: "சங்கிலியன் வீதிச் சென்றி வரை போய்ப் பாப்பமே..." என நினைத்துக் கொண்டார்.

சென்றியில், ஆமி ட்றக்குகளிலும் கவச வாகனங்களிலும் வந்து குவிந்து கொண்டிருந்தது.

இவரைக் கண்ட படையினர் துப்பாக்கிச் சனியனை கரங்களில் ஏந்தியபடி ஓடிவந்தார்கள்.

"இருபால... கல்வியங்காடு எல்லாம் போக இல்ல... நில்லு... அதெல்லாம் ஹை செக்கியூரிட்டி ஸோன்; இப்ப இருந்து. என்ன...? விளங்க இல்ல... உயர் பாதுகாப்பு வலயம். போகாத... திரும்பு... திரும்புடா... அங்க எல்லாம் ஆள் இருக்க இல்ல..."

பேசியதென்னவோ சாதாரண சிப்பாய்தான். ஆனாலும் அவனது பேச்சிலிருந்த மிடுக்கும் தோரணையும்...

"அட இங்கு தடி எடுத்தவனெல்லாம் தண்டல் காரனா...?

அவர் அசந்து போய் நின்றார்.

திடீரென அவருக்கு, அவரது மனைவியின் ஞாபகம் வந்தது.

"ரதி எங்க போயிருப்பாள். பாவம் அவளுக்குக் காலுமேலாது... பக்கத்து வீட்டில் பிள்ளைக்கு பிள்ளையாயிருக்கும் பாஸ்கரன், லட்சுமி, அந்தச் சின்னஞ்சிறு தவ்வல் தாரணி எல்லாரும் எங்க போயிருப்பார்கள்... கொண்டலடியான் தான் அவர் களைக் காப்பாற்ற வேணும்...."

திகைத்துப் போன அவருக்கு எங்கு போவதென்று தெரியவில்லை. தளர்ந்து மெதுவாக நடந்தார்.

அவருக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. தொகையாக வேர்த்தது. சைக்கிளை வீதியின் அருகாக விட்டவர். சற்று ஒதுங்கித் தரையில் உட்கார்ந்து கொண்டார்.

அவருக்கு அழவேண்டும் போலிருந்தது. மனதை அழுத்தும் துயரமனைத்தையும் துடைத்து எறிந்து விடுவது போல. அவர் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினார்.

**-படைப்பு 2007-**

## சொல்லவேண்டிய கதைகள் 6

# ஊருக்குப்புதுசு

முருகபூபதி



இயற்கைக்கு இரக்கமே இல்லையா என்று நினைக்கத்தோன்றுகிறது. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பன பஞ்சபூதங்கள் என்கிறார்கள். சர்வதேசப்புகழ்பெற்ற இந்திய திரைப்பட இயக்குநர் தீபா மேத்தா Earth, Fire, Water ஆகிய படங்களை எடுத்தார். அதனால் பல வேதனைகளையும் சோதனை களையும் சந்தித்தார் அதனால்தானோ என்னவோ, அவர் காற்று, ஆகாயம் தொடர்பாக இன்னமும் படம் எடுக்கவில்லையோ என்று யோசிக்கவைக்கிறது.

இயற்கையை தெய்வமாக வழிபடும் மக்கள் அன்றும் இருந்தார்கள். இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனால் இயற்கையும் அதனைப்படைத்த கடவுளைப் போன்று மக்களை சோதனைக்கும் வேதனைக்கும் தள்ளிக்கொண்டுதான் இருக்கிறது.

இயற்கையை வழிபட்ட இலட்சக்கணக்கான ருஷ்ய மக்களை ஜார் மன்னன் நாடுகடத்த முற்பட்ட போது அவர்கள் கனடாவில் கியூபெக் மாநிலத்துக்கு கப்பலில் சென்றார்கள். அவர்களின் போக்குவரத்து செலவுக்காக லியோ டோல்ஸ்ரோய் புத்துயிர்ப்பு நாவலை எழுதி வெளியிட்டு அதில் கிடைத்த பணத்தைக்கொடுத்தாராம்.

இயற்கையை வணங்கினாலும் தண்டனை. இயற்கையும் தண்டனைதான்.

எதிர்பாரதவிதமாக கடந்த மாதம் (மே 2013) மீண்டும் சென்னைக்கு வரநேர்ந்தது. கடந்த பெப்ரவரி மாதம்தான் இங்கு வந்து திரும்பியிருந்தேன். அந்தக் களைப்பு நீங்குமுன்பே இந்த எதிர்பாராத பயணம். தமிழ கத்தை சூரியபகவான் இரக்கமின்றி சுட்டெரிக்கின்றார். ஆனால் மதுரையை எரித்த கண்ணகிபோன்று சென்னையை அவர் எரிக்கவில்லை என்பது மாத்திரமே ஆறுதல்.

கத்திரி வெய்யில் என்று வர்ணிக்கப்படும் இந்த கோடைகாலத்தில் பாடசாலைகளுக்கு விடுமுறை. அவுஸ்திரேலியாவில் குளிர்காலம் தொடங்கிவிட்டது. அந்தக்குளிரின் கொடுமையிலிருந்து தப்பிவந்து வெய்யிலின் கொடுமைக்குள் சிக்கியவாறு இதனை பதிவுசெய்கின்றேன்.

இங்கு மின்வெட்டும் வந்து மக்களை சோதனைக்குள்ளாக்குகிறது. இயற்கையை மனிதன் வஞ்சித்து சூழலை கெடுத்தான். இயற்கை பழிக்குப்பழி வாங்குகிறது. பருவகால மழைபொய்த்துவிட்டால் விவசாயிகள் வாழ்வும் பொய்த்துவிடுகிறது. வரட்சி யினால் நிவராண உதவி வழங்கப்படுவதிலும் அரசு களுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே ஒத்த கருத்து இல்லை. பாதிக்கப்பட்ட ஏழை விவசாயி தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்களும் தொடர்கின்றன.

எனது அக்கா மகனின் திருமணத்திற்காக வந்த இந்தப்பயணத்தில் கத்தரிவெய்யிலின் சோதனைக் குள்ளாகியிருந்தபோது குடும்பத்தினரும் உறவினர் களும் மற்றுமொரு சோதனைக்கும் உள்ளாக்கினார்கள்.

சென்னையில் இடம், வலம் தெரியாத அவர்கள் தங்கள் அனைவரையும் பாண்டிபஜாருக்கு மணமக்களுக்கும் தமக்கும் தேவைப்பட்ட உடு புடவைகள் வாங்குவதற்கு அழைத்துச்சென்றார்கள்.

திருமணவைபவங்கள், பிறந்தநாள் மற்றும் விருந்தினர் ஒன்றுகூடல்கள், மரணச்சடங்குகள். குடும்ப நண்பர்களின் வீடுகளுக்கான விஜயம், ஆலய தரிசனங்கள். இலக்கிய நிகழ்வுகள் முதலானவற்றுக்கு மாத்திரமே மனைவியுடன் இணைந்துகொள்வேன். முடிந்த வரையில் தவிர்ப்பது மனைவியுடனான ஷொப்பிங். அதற்கு மாத்திரம் எனக்கு பொறுமை இல்லை. இந்தத் துன்பத்தை ஒருநாள் கனடாவில் வதியும் இலக்கிய நண்பர் அ.முத்துலிங்கத்திடம் அழாக் குறையாகச் சொன்னேன். அவரும் இத்தகைய துன்பங்களுக்கு ஆளாகியிருக்கவேண்டும். அவர் தனது அனுபவத்தைப் பகிர்ந்தார்.

மனைவியுடன் ஷொப்பிங் புறப்படும்பொழுது, குறிப்பிட்ட ஷொப்பிங்சென்டருக்குள் நுழைந்த மறு கணம் அவர் அந்தக்கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள ஏதாவது ஒரு தியேட்டருக்குள் நுழைந்துவிடுவாராம். திரைப்படம் சுமார் இரண்டரை மணிநேரம் ஓடும். அந்த நேரம் மனைவிக்கு ஷொப்பிங் செய்வதற்கு போதுமானது என்பது அவரது நம்பிக்கையாம்.

நானும் அதனை பின்பற்றத்தொடங்கினேன். அடிக்கடி மனைவி ஷொப்பிங் புறப்பட்டால் தியேட்டர்

காரனும் அடிக்கடி படங்களை எனக்காக மாற்றவா முடியும். அதனால் கையோடு ஒரு நூலையும் எடுத்துச் செல்வேன். சுமார் நூறு பக்கங்கள் முடிவடைதற்குள் மனைவி வந்துவிட்டால் எனக்கு வாசிப்பு அனுபவத்தில் சிறு நட்டம் ஏற்பட்டாலும் பொருளாதாரத்தில் ஏற்படும் நட்டம் குறைவாகத்தான் இருக்கும்.

இப்படி சிந்திக்கும் எனக்கு, அன்று சென்னை பாண்டிபஜாருக்குள் நுழைந்தபோது தனுஷ் – நயன்தாரா நடித்த யாரடி நீ மோகினி படம்தான் நினைவுக்கு வந்தது. அதில் தனுஷ், நயன்தாரா குடும்பத்தினர் அனைவரையும் கிராமத்திலிருந்து ஒரு வாகனத்தில் அழைத்துக்கொண்டு பட்டிணத்துக்கு உடுபுடவைகள் எடுப்பதற்கு செல்லுவார்.

அங்கே அவருக்கு முன்பே மனைவி மக்களுடன் புடவைகள் வாங்க வந்தவர்கள் பாய் தலையணைகளுடன் காட்சிதருவார்கள். ஒருவர் பல்துலக்கிக் கொண்டு நேற்றிலிருந்து இங்குதானய்யா நிக்கிறேன் என்று மூக்கால் அழுவார். நான் மிகவும் ரசித்த காட்சி.

அந்த நிலைமை இங்கு எனக்கும் ஆகிவிடக் கூடாது என்று நிபந்தனை விதித்துவிட்டு அவர்கள் அனைவரையும் இங்கு பிரபலமான குமரன் சில்க்ஸ் புடவைக்கடைக்குள் அனுப்பிவிட்டு வெளியே அவர்களது உடமைகளுக்கு காவல் இருந்தேன்.

அவர்கள் வெளியே வருவதற்கு பல மணி நேரங்கள் ஆகும் என்பது எனக்கு நிச்சயமாகத்தெரியும். வெளிவிறாந்தாவில் ஆசனங்கள் இருந்தன. கொளுத்தும் வெய்யிலின் தாகம் தணிக்க கைவசம் ஒரு போத்தலில் தண்ணீரும் வைத்துக்கொண்டேன். அது தீர்வதற்குள் உள்ளே சென்றவர்கள் திரும்பிவிட வேண்டும் என்பதும் எனது பிரார்த்தனை.

அங்கு பல காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருந்தன. தினமும் அரங்கேறும் காட்சிகள்தான். ஊருக்குப்புதியவனான எனக்கு அக்காட்சிகள் புதுமையானவை. புதிரானவை.

சுட்டெரிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் அலைமோதிக்கொண்டிருக்கிறார்கள். வாகனங்கள் நெடுஞ்சாலையில் எதிரும் புதிருமாக வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

அந்த பிரமாண்டமான, வண்ணவண்ண சாரிகளின் புகழ்பெற்ற மாளிகையின் வாசலில் திருஷ்டிப் பூசணிக்காய்கள் சிதறிய அடையாளம் தெரிந்தது. நடைபாதை வியாபாரிகளும் சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள்.

தெருவுக்கு எதிர்முனையில் வண்ணக்குடைகளுக்குள் அமர்ந்தவாறு சிலர், ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவரவர் கைகளில் வண்ண ஓவியங்கள் வரைகிறார்கள். பச்சை குத்திய காலம் கிராமங்களில் தொடருகிறது. பெருநகரங்களில் நாகரீகம் மாறுகின்றமையால் கைகளில் படம் வரைகிறார்கள். இப்படி பல முழுநேரத்தொழில்கள் நடைபதையோரங்களில் வெவ்வேறு வடிவங்களில் தினம் தினம் அரங்கேருகின்றன.

குமரன் சில்க்ஸ் வாசலுக்கு உள்ளிருந்து ஒருவர் காலில் பாதணிகள் இன்றி வருகிறார். அவர் கரத்தில் விகாரமான முகம் வரையப்பட்ட ஒரு திருஷ்டிப்பூசனிக்காய். அதன் மீது ஒரு சூடம் கொளுத்தப்பட்டிருக்கிறது. அந்த நபரின் மற்றக் கரத்தில் ஒரு எலுமிச்சம்பழம்.

அவருடன் மற்றும் ஒருவர் கையிலே ஒரு எவர்சில்வர் செம்பில் தண்ணீருடன் வருகிறார். வாசலில் தெளிக்கிறார். பூசணிக்காய் நிலத்தில் அடித்து சிதறப்படுகிறது. எலுமிச்சம்பழத்தை காலின் கீழே வைத்து நசுக்கி எடுத்து சிதறிய பூசணிக்காயின் மீது ரசத்தை தெளிக்கிறார்கள். பின்னர் அனைத்தையும் எடுத்து ஒரு உரப்பையில் போட்டு திணிக்கிறார்கள். அந்தப் பொதியை வாசல் ஓரமாக வைக்கிறார்கள். அந்தக் கடையில் அதற்காகவே நியமிக்கப்பட்ட பணியாளர்களோ என்றும் யோசிக்கவைத்தன அவர்களது கடமைகள்.

"என்ன நடக்கிறது?" அருகிலிருந்த ஒருவரிடம் கேட்டேன்.

" திருஷ்டி கழிக்கிறார்கள்" என்றார்.

" அது என்ன திருஷ்டி?"

"இந்தக்கடையில் ஒருநாளைக்கு ஆயிரக் கணக்கான மக்கள் வருகிறார்கள். இலட்சக்கணக்கில் பணம் புரளும் இடம். யாரும் பார்த்து கண்பட்டு விட்டால் வியாபாரத்துக்கு திருஷ்டி வந்து, நட்டம் வரும் என்பது நம்பிக்கை. அதனால் பூசிணிக்காயை சிதற அடித்து திருஷ்டி கழிக்கிறார்கள். காலம் காலமாக இந்த நம்பிக்கை இங்கே தொடருகிறது." என்று சொல்லிவிட்டு என்னை ஏற இறங்கப்பார்த்தார்.

அந்தப்பார்வை "என்ன ஊருக்குப்புதுசா?" என்று கேட்பதுபோலிருந்தது.

உணவுக்குத்தேவைப்படும் பூசணிக்காயும் எலுமிச்சம் பழமும் இப்படி தெருவிலே எவருக்கும் பிரயோசனமின்றி வீணடிக்கப்படும் அதேவேளையில், அந்த சுட்டெரிக்கும் வெய்யிலில் கந்தல் சேலையுடன் ஏழைப்பெண்கள் கைகளில் குழந்தைகளை ஏந்தியவாறு பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார்கள். ஒரு குழந்தை வெய்யிலில் வாடிவதங்கி தாயின் கரத்தில் தலை கவிழ்ந்திருந்தது பார்க்கக்கொடுமையாக இருந்தது.

அருகே அழைத்து பணம் கொடுத்து "குழந்தைக்கு ஒரு தொப்பியாவது வாங்கிக் கொடம்மா" என்றேன். அவள் கையெடுத்துக்கும்பிட்டு பெற்றுக் கொண்டாள்.

அடுத்த கணம் இன்னுமொரு பெண் அதே கோலத்துடன் என்முன்னே தோன்றினாள். அவள்

கரத்திலும் ஒரு குழந்தை. அந்தக்குழந்தையும் வெய்யிலில் வாடி வதங்கியிருந்தது. அவளுக்கும் பணம் கொடுத்தேன்.

அவளும் என்னை ஏறிட்டுப்பார்த்தாள்.

அந்த முகமும் " என்ன...ஊருக்குப்புதுசா...?" என்று கேட்பதுபோலிருந்தது.

சுமார் ஒரு மணிநேரமாக நான் அங்கிருந்து பல காட்சிகளை தரிசித்தேன். அந்த நேர இடைவெளிக்குள் இரண்டு பூசணிக்காய்கள் தரையில் சிதறிவிட்டன. ஒரு விலையுயர்ந்த காரில் எவர்சில்வர் கெரியர்கள் பலவற்றில் மதிய உணவு வந்திறங்கியது. அவை அந்த புடவை மாளிகையின் உரிமையாளர்களுக்கும் நிருவாகிகளுக்கும்தான் என்பது புரிந்தது.

அப்போது நண்பர் ஜெயமோகனின் கதை வசனத்தில் வெளியான அங்காடித்தெரு திரைப்படம் நினைவுக்கு வந்தது.

நடைபாதை வியாபாரி ஒருவரிடம் சென்று, "நீங்கள் எல்லாம் திருஷ்டிபூசனிக்காய் உடைப்பதில்லையா?" எனக்கேட்டேன்.

"என்ன சார் சொல்றீங்க...எங்களுக்கு அந்தக் கடைமாதிரி இலட்சக்கணக்கிலா பணம் புரளுது. அஞ்சுக்கும் பத்துக்கும் இந்த வெய்யில்ல வெந்து ஓட்டிக் கொண்டிருக்கிறோம். அங்கே குளிர்சாதன வசதி இருக்குது. இங்கே வானமே கூரை. வெய்யிலே வாழ்க்கை." என்று சொல்லிவிட்டு என்னை ஏறிட்டுப்பார்த்தார்.

அந்தப்பார்வையும் "என்ன... ஊருக்குப் புதுசா...?" என்று கேட்பது போலிருந்தது.

குமரன் சில்க்ஸில் புடவைகள் வாங்கச் சென்ற உறவினர்களிடம் நான் அந்த ஒரு மணி நேரமாக கண்ட காட்சிகளைச்சொன்னேன்.

அதில் ஒருவர் சொன்ன தகவல் என்னை பெரிய அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"அந்த ஏழைத்தாய்மாரின் கரத்தில் இருந்த குழந்தைகள் பெரும்பாலும் வாடகைக்கு எடுக்கப்பட்ட குழந்தைகளாகத்தான் இருக்கும்"

"எப்படியோ குழந்தைகள் குழந்தைகள்தான். உலகத்தில் நல்லவைகள் யாவும் குழந்தைகளுக்குத் தான் என்று மேதை லெனின் சொல்லியிருக்கிறார். ஆனால் குழந்தைகளை வெய்யிலில் வாட்டி வருவாய் தேடுபவர்களை இங்கு பார்க்கின்றேன். ஒரு அம்மா முதலமைச்சராக இருக்கும் ஒரு மாநிலத்தில் அம்மாமார் இப்படி குழந்தைகளை வெய்யிலில் வாட்டிக் கொண்டிருப்பது கொடுமையானது." என்றேன்.

"நீங்க ஊருக்குப்புதுசு...அதனால்தான் இப்படி பேசுகிறீர்கள்." என்றார் அந்த உறவினர்.

---

# நகல்களின் நர்த்தனம்!



மகத்துவங்களின்
நதி மூலங்கள் பல
மண்மூடிப் புதைந்து போய்
இயற்கை எய்து விடும்
அவலங்கள் இப்போது!

சந்தர்ப்பங்கள் சடுதியாக
சந்தித்து விடுவதால் மட்டும்
மாணிக்கப் பரல்கள் சில
மணிமுடிகளில் மின்னும்
மகத்துவத்தை
தமதாக்கிக் கொள்கின்றன!

விளம்பரங்களும்
விலை பேசும் வீரியங்களும்
விஷ்வரூப தரிசனங்களும்
காகிதப் பூக்களுக்கும்
கலகலத்துப்போன
சருகுகளுக்கும்
வலிந்து கைகூடுவதால்
அசல்களாக முகங்காட்டி
அசத்துகின்றன
அரங்குகளில்!
நிர்ப்பந்தங்களின் பேரால்
கோட்டான்களின்
அலறல்களை
குயில்களின் கானமாய்
அங்கீகரித்து இரசித்து
கைதட்டி ஆரவாரித்து
சீழ்க்கை அடித்து
ஒரு சுரணையற்ற
ஜென்மங்களாய் நாம்!

**ஷெல்லிதாசன்**



# இப்பிறவியில் சாத்தியமே இல்லை

ராதா


அந்த தனியார் மருத்துவமனையின் முன்னா லிருந்த தேவாலய மணி காலை 6 மணிக்கு அடித்ததும் பாதிரியார் இவ்வாறு ஜெபிக்கத் தொடங்கினார்.

"பிதாவே, உலகம் முழுவதிலுமுள் ள குழந்தைகளுக்காக வேண்டுகிறேன். அவர்கள் மீது உமது பாதுகாப்பின் கரம் இருப்பதாக!"

மருத்துவமனையின் அறையினுள் போடப் பட்டிருந்த கட்டிலில் படுத்திருந்த அவள் இதைக் கேட்ட தும் ஒரு கையை ஊன்றி மெதுவாக எழுந்து கொண்டு, அணிந்திருந்த நைற்றியைச் சரி செய்தவாறு பக்கத்தி லிருந்த றிமோட்டை எடுத்து ரீவி ஐ ஒன் செய்தாள்.

உங்கள் குழந்தைகளை நாள் முழுக்கப் புத்துணர்ச்சியுடன் பேணுவதற்கு "ஜோன்சன் பேபி" உற்பத்திகளை உபயோகியுங்கள். பள பளக்கும் பளிச் சென்ற உங்கள் குழந்தையின் கன்னங்களிட்கு ஜோன்சன் பேபி சோப். அந்த அட்வற்ரைஸ்மென்ட் இல் அந்தக் குழந்தை தவழ்ந்து, எழுந்து விழுந்தது. ரவி வர்மாவின் ஓவியக் குழந்தை ஒன்று திரையில் உயிர் பெற்றது. ஓ! இந்தக் குழந்தையா?எனக்கும் அவருக்கும் தை மாதத்தில் கலியாணம் நடந்து மூன்று மாதத்தில் நான் வாந்தி எடுக்க, எட்டு மாதத்தில் தங்கத்தில் வளைகாப்பிட, தலைத் தீபாவளியோடு இது போல் தான் என்னுடைய குழந்தையும் பிறக்கும். நான் அவளிற்கு ஜோன்சன் பேபி சோப்பை மேனி பூராகவும் பூசி, மெலிதான சூடானநீரில் குளிப்பாட்டி, ரவலால் துடைத்து, ஜோன்சன் ஓடிக்கொலோன் பூசும் போது அந்த வாசனை இருக்கிறதே என்ன! சுகந்தம்? என் அன்பான கணவர் வேலை விட்டு வீடு வரும் போது நான் குழந்தையுடன் ஓடிச் சென்று கார்க் கதவைத் திறந்துவிட அவர் குழந்தையை வாங்கி உச்சி மோந்து வாசனை யால் மயங்கி என்னையும் முத்தமிட்டு இப்படி ஒரு மனைவி வாய்த்ததிற்குக் கடவுளுக்கு நன்றி கூற என்ன இன்பம்?. இது அல்லவா மணவாழ்க்கை என அவள் மனம் நினைக்கையில் அவளுடைய தற்காலக் காதலனும், எதிர்காலக் கணவனுமாகிய அவன் அவளுடைய பாட்டியுடன் கதவைத் திறந்து கொண்டு வந்து இண்டைக்கு 7 மணிக்கு டொக்டர் வாற என்றவர் எல்லா றிப்போட்டும் வந்திருமாம் என அவளின் தலையை வருடியவாறு அருகில் அமர்ந்தான். "றிப்போட்டைக் கொண்டுபோய் மூலையிலைபோடு தம்பி. உங்கட ஆறு வருஷக் காதல் கல்யாணத்தில் நிறைவேற வேண்டுமென்று நான் நேற்றுத்தான் அரசடிப் பிள்ளையாருக்கு நேர்த்தி வைச்சனான். பூவும் கட்டிப் பார்த்தனான். வெள்ளைப் பூத்தான் வந்தது. இவளுக்கு இராகு ஐந்தாம் இடத்தில் இருப்பதால் புத்திரசேதம் வருமாம் அதற்கும் இராகு தோஷ நிவர்த்தி நாகம்பாள் கோயிலுக்கு செய்ய வேண்டும்.

பேரன் நேற்று ராத்திரி ரெலிபோனிலை



தானும் அமெரிக்காவிலிருந்து கல்யாணத்துக்கு வாறஎண்டு சொன்னவன். இனி என்ன? உங்களுக்குக் கல்யாண வைபோகம் தான். நான் உங்களுடைய கல்யாணத்தைப் பார்த்த பின் கண்ணை மூட வேணும்" எனக் குட்டிப்பிரசங்க மொன்றை நடாத்தி முடித்தாள் பாட்டி. "ஓம்! பாட்டி எல்லாம் பிள்ளையார் செயல்தான்" என்றவன் அழைப்புமணி அடித்ததும் ஓடிச் சென்று கதவைத் திறந்தான். வானளாவிய உயரமும் வழுக்கைத் தலையுமான பிரபல பெண் நோயியல் மகப்பேற்று வைத்தியநிபுணர் "மோனிங்" என்று கொண்டே சுழல் நாற்காலியில் அமர்ந்தார்.

கையில் கொண்டு வந்த றிப்போட்டுகளை மேசையில் போட்டவர் அவனை நோக்கினார். அவனும் அவரை நோக்கினான் "வெயிற் போ சம்ரைம்"என்றவர், மீண்டும் அவளின் கைநாடியைப் பார்த்து, ஸ்ரெதஸ்கோப்பை வைத்து, மார்பு முதுகைப் பரிசோதித்து, நாக்கை நீட்டச் சொல்லி கண்களைப் பார்த்த டொக்டர் பெஞ்சில் படுக்க வைத்து ஸ்கீரீனை இழுத்து விட்டு கால்களைப் பிரித்துப் பரிசோதித்து நாற்றத்தையும் சகித்துக் கொண்டு ஸ்கான் செய்தபின் ஸ்கீரீனை நீக்கியவாறு "தம்பி" என்றார்.

"யெஸ் என்றவன் "டொக்டர் இலட்சம் என்ன? கோடி கொடுக்கிறன் குணமாக்கி விடுங்க" என்று கோடி காட்டினான்.

"காவ் யுவ ஸீற்"என்றவர் "நான் எல்லாவித சிகிச்சை முறைகளையும் செய்து பார்த்து விட்டன். ஆனால் குருதிப் பெருக்கு நிற்பது போல தெரியவில்லை. நீங்கள் பலமுறை திருமணத்துக்கு முன் செய்து கொண்ட கருச் சிதைவுகளால் அவவுடைய கருப்பை மிகவும் பலவீனமாகிவிட்டது. கருச்சிதைவிற்குப் பயன்படுத்திய பலரகமான ஆயுதங்கள் கருப்பையில் ஆறாத ரணங்களை ஆக்கி விட்டன. அதுமட்டுமன்றி நீங்கள் பாவித்த கற்பத்தடை மாத்திரை களாலும் குருதிப் பெருக்கு அதிகரித்துள்ளது. இப்போதுள்ள சூழ்நிலையில் "அஸ் ஏ டொக்டர்" அவவுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும். கருப்பையை முழுமையாக நீக்க வேண்டியது தான் ஒரே வழி. வெரிசொறி" எனச் சுழல் நாற்காலியில் சாய்ந்தார். இதைக் கேட்ட மாத்திரத்தில் அந்த அறையின் சுவர்களெல்லாம் ஒருமுறை சுழன்று நொருங்குவது போலவும் அந்த சுவர்களின் இடிபாடுகளில் அகப்பட்டுப் கொண்ட பாட்டியின் கல்யாணக் கனவுகள் எல்லாம் சிதைந்து போவது போலவும் உணர்ந்த பாட்டி அமர்ந்திருந்த கதிரையில் சாய்ந்து விழ அவசரமாக ஓடிவந்த நேர்ஸ் பாட்டியை அணைத்தவாறு அடுத்த அறையில் "அட்மிட்" பண்ண கட்டிலில் படுத்திருந்த அவள் தனது கற்பனைக் குழந்தைக்கு நிஜத்தில் எப்போதும் உயிர் கொடுக்க முடியாதவளாய் அவன் இனியும், இப்பொழுதாகிலும் தலையை வருடுவானா? வாழ்க்கைத் துணையாக வருவானா? எனும் அவநம்பிக்கையில் கண்ணீர் கரைபுரள அந்தக் கட்டிலில் மீண்டும் விழுந்தாள். அவனோ குற்றவுணர்வு மேலிட கண்ணீரால் தரையை நனைத்தான் இந்தச் சாபம்பெண்ணினத்திற்கு மட்டும் தானே. விமோசனம் தான் என்ன? சட்டையில் கிழிசல் விழுந்தால் தைத்துவிடலாம் வாழ்க்கையில் கிழிசல் விழுந்தால் ஒட்டைதான் மிஞ்சும்.

# நான் தோற்பேனா?

மீண்டும்
அந்த அழகிய தவறு
அரங்கேற்றமாவதைப் போல ஓர்
அவஸ்தையை உணர்கிறது
அனுபவப்பட்ட என் மனசு

சிலிர்க்க வைக்கும்
தென்றல் ஒன்று
எனைத் தீண்ட வருவதாய் எண்ணி
என் இராத் தூக்கம் தொலைந்ததை
உணர்கிறது என் உள் மனசு

என்னை தினமும்
ஆட்டிக் படைக்கின்ற
என்னுள் ஒடிக் கொண்டிருக்கும்
சாத்தானிய எண்ணத்தை
ஆன்மீக விலங்கிட்டு
அடக்கி வைத்ததாய் நினைத்திருந்தேன்

இருந்தும்,
வளைவுகளில் நீ
மறைகின்ற தருணத்தில்
உன் உதட்டோரம் ஒற்றைப்புன்னகையை
உதிர்த்து விட்டுப் போவதை
பலநூறு அர்த்தங்களாக்கு
அதே அனுபவப்பட்ட என் மனசு

வேண்டாம்
எது நடக்க கூடாதோ
அது நடக்காமலே இருக்கட்டுமென்று
ஆலோசனை கேட்க
என் அறிவினைத் தேடினேன்
அது,
தொண்ணூறுகளில்
தொலைந்து போனவர்களின்
பட்டியலுக்குள்
பதுங்கியிருப்பதாக
பார்த்தவர்கள் சொல்கிறார்கள்
அதனால் நான்
தோற்றுத்தான் போவேனோ?

**- யாழ் சிட்டு**

திரவியம் சர்வேசன்

# இரவல் புடவையில் இது நல்ல கொய்யகமா?

நம் நாட்டில் கிடைக்கின்ற இலவச உயர் கல்வியை நினைத்து அளவற்ற மகிழ்ச்சி. இல்லா விட்டால் நாம் எங்கு உயர் கல்வி கற்றிருப்போம்? அல்லது அந்த மஞ்சள் கடதாசி எங்கு எங்களிற்குக் கிடைத்திருக்கும்? அதனை வைத்துத்தானே எத்தனையோ விடயங்களை செய்கிறோம். இது யாருமே மறுக்க முடியாத உண்மை.

இலவசக் கல்வி கிடைத்தும் பல்கலைக்கழகப் படிப்பில் ஏற்படும் மாதாந்த இதர செலவினங்களைத் தம் குடும்பத்தினால் செய்ய முடியாது என்று கருதி, தமது உயர் கல்வியைத் தொடர்ந்து முயற்சிக்காத எத்தனையோ மாணவர்களைக் கண்டிருக்கின்றோம், அவர்களிடம் நல்ல திறமைகள் இருந்தும் கூட. அவர்களிற்காக மனம் வருந்த முடிந்ததே தவிர வேறொன்றும் செய்துவிட முடியவில்லை!

ஏதாவது ஒன்றைப் பற்றிப் பெருமைப்படுவ தாயின் வீட்டிற்குள் இருந்து பெருமை படுவதுதான் சிறந்தது போலுள்ளது. சில வேளைகளில் வெளியே வந்து பார்க்கும் போதுதான் சந்தேகம் கிளம்புகிறது, எமது பெருமை எந்தளவிற்கு உண்மை என்று.

இப்படித்தான் எமது இலவச உயர் கல்வி பற்றிய பெருமையும் ஒரு தடவை என் மனதில் சின்னா பின்னமாகியது.

எமது இலவச உயர் கல்வி பற்றி எமக்கு எப்போதும் ஒரு பெருமிதம். அத்தோடு அப்பெரு மிதத்தை மற்றவருடன் பகிர்ந்து கொண்டே இருப்பதில் ஒரு ஆனந்தம்.

அண்மையில் அது பற்றி இங்கு கனடாவில் ஒருமுறை பிதற்றிக் கொண்டிருக்கும் போது, ஒரு கனேடிய ஆங்கிலேயன் சொன்னான் “அப்ப, நீங்கள் எங்களின் பணத்தில்தான் படிக்கின்றீர்கள்!" என்று.

சடாரென்று எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஒரு விஷயம் திடீரென மின்னியது. நல்ல காலம், அன்று அவனுடன் அது பற்றி வாதாடாமல் பேச்சை வேறு திசையில் திருப்பப்பட்டது. இப்படிப் பேச்சைத் திருப்புதற் காக என்றுதானே நம்மைச் சுற்றி எத்தனையோ விசயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நன்றி, அந்த சுவாரஸ்யமான விசயங்களுக்கு!.

ஆனால், அந்த கனேடிய ஆங்கிலேயன் சொன்னது மனதை அரித்துக்கொண்டே இருந்தது. அதுபற்றி ஆராயலாம் என்றால், பொருளாதார அறிவு தன்நிறைவு காணவில்லை. தெரிந்த எண்கணித அறிவைப் பாவித்து யோசித்துப் பார்த்ததில், அவன் சொல்வது உண்மைதான் போல உள்ளது. எமக்கு இலவசக் கல்வி கிடைக்க அங்கு என்ன செல்வம் கொட்டியா கிடக்கின்றது? அல்லது உற்பத்தி தன்னிறைவு தான் அடைந்திருக்கின்றதா? அல்லது பெரும் பணப் புழக்கம் உள்ளவர்கள் என்ன வாய்மை தவறாது வரியா கட்டுகிறார்கள்? எல்லோரும் தத்தமது பணப் பைகள், தம் பரம்பரைக்கும் நிறைந்திருக்க அல்லவா வழி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

அதே நேரம் ஒரு பட்டதாரியை உருவாக்கு வதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும் கணித்துப் பார்க்க முடிகிறது.

எமது நாட்டில் எத்தனை பல்கலைகழகங்கள் உள்ளன? எத்தனை பீடங்கள் உள்ளன? ஒவ்வொரு வருடமும் எத்தனை பட்டதாரிகள் அத்தனை பல்கலைக் கழகங்களிருந்து வெளியேறுகிறார்கள்? இவற்றை யெல்லாம் வைத்துக் கணக்கு பார்க்கத் தலை சுற்றுகின்றது.

இது கல்விக்கு மட்டும். இப்படி இன்னும் வெவ்வேறு துறைகளும் இருகின்றன. இவற்றை யெல்லாம் சரி செய்வதற்கு எம்மிடம் வருமானம் இல்லையென்பது வெளிப்படை. அப்படி என்றால், இவற்றைச் சரி செய்ய ஏதோ நடைபெறுகின்றது! அது தான் இந்தக் கனேடிய ஆங்கிலேயன் சொன்னதோ?

ம்ம்ம்.... நாம் என்ன செய்வது....! அங்கு, MBBS முடித்தவர்களைத் தவிர வேறு எந்த பட்டதாரிக்கும் உடனடி வேலை வாய்ப்புக் கிடைக்குமா என்பதே கேள்விக்குறிதான். இது இப்படியிருக்க, ஒரு மாணவன் தனது பட்டப்படிப்பிற்கு எப்படிக் கடனுதவி பெற்றுப் படிப்பது? அல்லது ஏதாவது நிறுவனம்தான் கடனுதவி செய்ய முன்வருமா? அல்லது வேலை செய்து கொண்டே படிக்கலாம் என்றால், அது எப்படி சாத்தியம், படித்து முடித்தவர்களிற்கே வேலை இல்லை என்கின்ற போது? பிரச்சினைதான்!

இதனை அறிந்துதான் என்னவோ உயர் கல்வியை இலவசமாக வைத்துள்ளார்களோ? ஆகவே இலவசக் கல்விதான் அங்கு சரிவருமோ? சுய விருப்பங்கள் கருதி, இலவசக் கல்விதான் அங்கு சிறந்தது என்ற நியாயத்தின் பக்கத்திற்கு மனம் தன்பாட்டில் சாய்கிறது.


அந்தக் கனேடியன் சொன்னதை உதாசீனம் செய்தாயிற்று.

ஆனால், எமது இலவசக் கல்வி பற்றிக் கூவித் திரிவதற்கும் முற்றுப்புள்ளி வைத்தாயிற்று!

## அந்தனி ஜீவாவின் அரை நூற்றாண்டு அனுபவங்கள்

# ஒரு வானம்பாடியின் கதை

16



அந்தனி ஜீவா

சென்னைப் பல்கலைக்கழகத்தழிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வி.அரசு தலைமையில் பேராசிரியர் சண்முகதாஸ் "மலேசிய இலக்கியம்" பற்றிப் பேசினார். அவரு உரைக்கு பின்னர் "மலையக இலக்கியம்" என்ற தலைப்பில் எனது உரை இடம்பெற்றது.

யாரை நான் சந்தித்து உரையாட வேண்டும் என்று நீண்ட நாட்களாக நினைவுகளில் பதிந்திருந்த நாவலாசிரியர் கு.சின்னப்பபாரதி வருகை தந்திருந்தார். அவரை எனக்கு வீ.அரசு அறிமுகப்படுத்தி வைத்தார். அவருடன் சிறிது நேரம் உரையாடியதன் பின்னர் விடுதிக்கு திரும்பிய பொழுது நண்பரும், நாடக பேராசிரியருமான கே.ஏ.குணசேகரன் என்னை சந்திக்க, பாண்டிச்சேரியிலிருந்து காரில் வந்து காத்துக் கொண்டிருந்தார். எனக்காக "தப்பு" இசைக்கருவியைக் கொண்டு வந்திருந்தார். அவருடன் வள்ளுவர் கோட்டம் அருகிலுள்ள அரங்கு ஒன்றில் நடைபெறும் நாட்டுப் புறக்கலை நிகழ்ச்சியை பார்த்தோம். வரும் வழியில் இரவு உணவை முடித்து கொண்டு திரும்பி வந்தோம். என்னை விடுதிக்கு அழைத்து வந்து விட்டு சென்றார்.

மறுநாள் காலை விருந்தினர் விடுதியில் "தினமணி" பத்திரிகையைப் பார்த்தபொழுது என் விழிகள் வியப்பால் விரிந்தன. தினமணியின் முன் பக்கத்தில் முக்கிய செய்தியாக "எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு ஞான பீடவிருது" என படத்துடன் செய்தி வெளியாகியிருந்தது. உடனே எழுத்தாளர் ஜெயகாந்தனுடன் தொடர்பு கொண்டு இலங்கை எழுத்தாளர்கள் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்தேன். "எப்பொழுது இலங்கை திரும்புகிறீர்கள் என்று கேட்டு விட்டு தன்னை சந்திக்காமல் போக கூடாது என்ற அன்புக் கட்டளையும் போட்டு விட்டார். அன்றுதான் சென்னைப் பல்கலைக் கழக மானிடவியல் பிரிவின் கருத்தரங்கின் ஆரம்பநாள்.

காலை 9.30க்கு பல்கலைக்கழக மானிடவியல் பிரிவிலிருந்து வண்டி வந்து என்னை கருத்தரங்கு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றது. கருத்தரங்கு நடைபெறும் மண்டப வாயிலில் பட்டதாரி மாணவர்கள் எங்களுக்கு ரோஜாப்பூ கொடுத்து வரவேற்றனர். மண்டபத்தில் உள்ளே நுழைந்ததும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சி பிரிவுத் தலைவர் பேராசிரியர் சுதர்சன் செனிவிரத்ன அன்போடு வரவேற்றார். எனக்கு நன்கு அறிமுகமான பேராசிரியர் சூரிய நாராயணனும் அங்கிருந்தார்.

கருத்தரங்கு ஆரம்பமாவதற்கு முன்னர் பல்கலைக்கழக துணைவேந்தர் தியாகராஜன் கருத்தரங்கில் கட்டுரை படிக்க வந்திருந்தவர்களுக்கு தேநீர் விருந்தளித்து நலம் விசாரித்தார். கருத்தரங்கு 10.45க்கு ஆரம்பமானது. மானிடவியல் பிரிவுத் தலைவர் பேராசிரியர் சுதர்சன் தொடக்கி வைக்க, துணை வேந்தர் தியாகராஜன் தலைமை உரை நிகழ்த்த முன்னர் இலங்கை இந்தியத் தூதுவராக இருந்த தோமஸ் ஏப்ரஹாம் சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கில் இலங்கையிலிருந்து பேராசிரியர் சுதர்சன் செனிவிரத்ன, சமூகவியல் பேராசிரியர் காளிங்க டியுடர் சில்வா, பேராசிரியர் விஜத நாணயக்கார, தொழில் அமைச்சின் ஆலோசகர் கலாநிதி சரத் சூரசேன, நான் உட்பட ஐந்து பேர் கலந்து கொண்டோம். கருத்தரங்கு பார்வையாளராக எழுத்தாளர் செ.கணேசலிங்கன் வருகை தந்திருந்தார். அவர் இலங்கை நண்பர்களை அன்போடு விசாரித்தார். முன்பு "டைம்ஸ்" பத்திரிகையில் பணியாற்றிய திரு.முத்தையாவும் கட்டுரை படிக்க வந்திருந்தார்.

மாலை மூன்று மணியளவில் "பெருந் தோட்டத்துறை வரலாறு அங்கு முகிழ்த்த தமிழ் படைப்புகளும்" என்ற தலைப்பில் எனது ஆங்கில கட்டுரையைப் படித்தேன். கருத்தரங்கில் பார்வை யாளராகவும் முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப்ஹக்கீம் கலந்து கொண்டார். கருத்தரங்கின் முழு நாளும் பங்கு பற்றினார். இலங்கை தூதுவர் சுமித் நாகந்தால முதல் நாள் இரவு ஹோட்ட பிரிஸில் இரவு விருந்தளித்தார்.

மறுநாள் காலை சுழற்பந்து வீச்சாளர் முரளி தரனின் திருமணத்திற்கு செல்வதற்காக நண்பர் கலை

மாமணி வி.கே.டி.பாலனை எதிர்பார்த்து கொண்டிருந்தேன். அப்பொழுது உலகமறிந்த ஊடகவியலாளரும், இலங்கையில் ஒரு காலகட்டத்தில் வானொலியிலும், மேடையிலும் சாதனைபடைத்த நடிகர் சாத்தான் குளம் அப்துல் ஜபார் இங்கு வந்தார். அப்துல் ஜபார் ஏற்கனவே எனக்கு நன்கு அறிமுகமானவர். அவர் என்னிடம் வி.கே.டி.பாலன் அழைத்து வரச் சொன்னதாகவும், போகும் வழியில் அவரையும் அழைத்துக் கொண்டு போகலாம் என்றார்.

இருவரும் பழைய சம்பவங்களை பேசிக் கொண்டு காரில் சென்றோம். போகும் வழியில் பாலனும் எங்களுடன் இணைந்து கொண்டார். திருமண மண்டபத்தில் ஜனத்திரள் மணமக்களை வாழ்த்த நீண்ட வரிசை. நாங்கள் மூவரும் ஆறுதலாக வாழ்த்தலாம் என்று ஆசனங்களில் அமர்ந்தோம். சிறிது நேரத்தில் எங்களை நோக்கி ஒருவர் வந்தார். எங்கள் அனைவருக்கும் நன்கு அறிமுகமானவர். அவர்தான் கல்கண்டு ஆசிரியர் லேனா.தமிழ்வாணன். அவர் அன்போடு நலம் விசாரித்தார். பின்னர் மேடையிலிருந்த முரளியின் தந்தையார் என்னைப் பார்த்து விட்டார். மேடையிலிருந்து இறங்கி வந்தார். அவரே எங்களை மண மக்களிடம் அழைத்துச் சென்றார் .மூவரும் மணம்களை வாழ்த்தினோம். வாழ்த்திய பின்னர் மேடையிலிருந்து இறங்கி வரும் பொழுது கண்டியிலிருந்து வந்திருந்த பிரபல தொழிலதிபர் இலக்கிய ஆர்வலர் ஸ்ரீலங்காசிகாமணி நாகலிங்கம் இரத்தினசபாபதி அவரது மைந்தன் மோகன், துணைவியார். அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது ஒருவர் தோளை தட்டினார் திரும்பி பார்த்த பொழுது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராஜரட்ணம். அவருடன் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு இரண்டாம் நாள் கருத்தரங்கில் கலந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தில் விடைபெற்றோம்.


மாலை கருத்தரங்கு நிறைவுபெற்று விருந்தினர் விடுதிக்கு வந்தேன். பேராசிரியர் நா.சுப்பிரமணியம், பேராசிரியர் சண்முகதாசுடன் உரையாடிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அன்போடு வரவேற்று "உங்களைப் பார்க்கத் தான் காத்திருக்கிறேன்" என்றார். அவருடைய விமர்சனக்கட்டுரைகள் அடங்கிய இரண்டு நூல்களை தந்தார். அவரோடு உரையாடிக் கொண்டிருந்த பொழுது கவிஞர் இன்குலாபும், பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளர் அண்ணாத் துரையும் என்னை சந்திக்க வந்திருந்தார்கள். அவர்களுடனும் மலையக இலக்கியம் சம்பந்தமாக உரையாடியதன் பின்னர் விரிவுரையாளர் அண்ணாத் துரையுடன் ஷோபசக்தியின் "ம்" நாவல் விமர்சனக் கூட்டத்திற்கு சென்றேன். அதனை அ.மார்க்ஸ் ஏற்பாடு செய்திருந்தார். நீண்ட நாட்களுக்குப் பின்னர் அவரை சந்திக்கிறேன். மிகுந்த அன்புடன் உரையாடினார். சிறிது நேரத்தில் எழுத்தாளார் பிரபஞ்சன் அங்கு வந்தார். பழைய நட்பை புதுப்பித்துக் கொண்டோம். பிரான்ஸ் புஸ்பராஜாவும் வந்திருந்தார். அ.மார்க்ஸின் உரையைக் கேட்டு விட்டு விடுதிக்கு திரும்பினேன்.

மறுநாள் 23.03.2005 காலை வீதி நாடக கலைஞர் பிரளயன் வந்திருந்தார். அவர் சில மாதங்களுக்கு முன் இலங்கை வந்து நான் பொறுப்பாக இருந்த மலையக கலைஞர்களின் "வெளிச்சம்" வீதி நாடகக்குழுவுக்கு இரண்டு வார காலம் பயிற்சி அளித்தவர். அவருடன் வீதி நாடக முயற்சிகளை பற்றி பேசினோம். அவர் விடைபெற்று சென்றதும் எழுத்தாளர் ஜெயகாந்தனோடு தொடர்பு கொண்டு 12 மணியளவில் அவரை சந்திக்க வருவதாக தொலைபேசி மூலம் அறிவித்தேன். பதினொரு மணியளவில் கலைமாமணி வி.கே.டி.பாலன் அவரத காரில் வந்து ஜெயகாந்தனைப்பார்ப்பதற்கு அழைத்துச் சென்றார். எழுத்தாளர் ஜெயகாந்தனை அவரது கே.கே.நகர் இல்லத்தில் சந்தித்தோம். எழுத்தாளர் ஜெயகாந்தனோடு உரையாடுவதே ஒரு சுகானுபவமாகும். அவரது ஞான குருவான பாரதி பாடல்களை அவர் சொல்லும் போது கேட்பதற்கு இனிமையாக இருக்கும்.

நாங்கள் அவருடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுது நடிகர் சிவகுமார் அவரை வாழ்த்துவதற்கு வந்தார். எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு பொன்னாடை போர்த்தி அவர் வரைந்த தஞ்ஞாவூர் பொற் கோவில் ஓவியத்தை வழங்கினார். சிறிது நேரத்தில் அவர் விடைபெற்று சென்ற பின்னர் மீண்டும் எங்கள் உரை யாடல் தொடர்ந்தது. எழுத்தாளர் ஜெயகாந்தனுடன் சுமார் ஒரு மணிநேரம் உரையாடியதன் பின்னர் பல்கலைகழக விடுதிக்கு திரும்பினேன். மாலை எழுத்தாளர் பா.செயப்பிரகாசம் வந்திருந்தார். அவருடன் ஓவியர் ட்ரஸ்கி மருது அவர்களை பார்க்க புறப்பட்டு சென்றோம். அவரை எனக்கு "தமிழ் இனி" இலக்கியவிழாவில் நம்மவரான கே.எஸ்.சிவகுமாரன் அறிமுகப்படுத்தினார். பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மானுடத்தின் ஒன்று கூடலுக்கு அவர் வந்திருந்த பொழுது, நீண்ட நேரம் அவருடன் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. ஓவியர் மருதுவின் இல்லம் சென்ற பொழுது அவரும் அவரது துணைவியாரும் அன்புடன் வரவேற்று உபசரித்தனர். அவரிம் விடைபெற்று பல்கலைக்கழக விடுதிக்கு திரும்பினேன். மறுநாள் எயார் லங்கா மூலம் நாடு திரும்பினேன். அந்த ஏழு நாட்களும் மறக்க முடியாத இனிய நினைவுகள் நெஞ்சில் நிறைந்திருந்தன. அந்த இலக்கிய பயணத்தின் மூலம் எனக்க கிடைத்த மிக பெரிய பரிசு நாவலாசிரியர் கு.சின்னப்பபாரதியின் நட்பு. அன்றிலிருந்து இன்றுவரை அந்த நட்பு தொடர்கிறது. அடிக்கடி மடல் மூலம் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வார்.

இலங்கையில் நடைபெற்ற உலகத்தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் தமிழக எழுத்தாளர்களின் எதிர்ப்புக்கும் மத்தியிலும் துணிவாக கலந்து கொண்டார். அது மாத்திரமல்ல... யாழ்ப்பாணம் சென்று அந்த மண்ணின் மக்களை சந்திக்க வேண்டும் என்றார்.

– தொடரும்



# யாருக்கு நன்றி சொல்வோம்??

ஆசை எட்வேட்

வயதாகத்தான் மனித மனம் தெய்வத்தைக் கூடுதலாகத் தேடும்! எனக்கும் அந்தக்குணம் மெள்ள மெள்ள வந்து விட்டது! எனது மச்சான் அருளப்பன் என்று பெயர். எனைக் கண்டால் காணும், கோவில் கதைத்தான் கதைப்பான்! அவன் இளமையில் இருந்தே பக்திமான்! பூசை முடிந்தாலும் விரைந்து வெளியேறமாட்டான்! உள்ள சுருவங்களை எல்லாம் தொட்டு கும்பிட்டு மெழுகு வர்த்தி கொளுத்தி செபித்து விட்டுத்தான் மீள்வான்!

இந்தளவு பித்து எனக்கில்லை! "வனத்தந்தோனியார் கோவிலில் கொடியேறிற்று போவோமா?"... "பாலையூற்றுக் கோவிலிலே பெருநாள், நாளைக்கு வருகிறாயா?"... என்று இப்படியே ஒவ்வொரு கோயிலைச் சாட்டி அழைப்பிதழ் விடுவான்! நானும் இவற்றில் அவ்வளவு ஈடுபாடு இல்லாவிட்டாலும் திருத்தலங்களுக்கெல்லாம் கூடிச் செல்வேன்!

இருவரும் சேர்ந்தால் பழைய கதைகளை – இளமைக்கால நிகழ்வுகளை மீட்டிப் பார்ப்பதில் உரையாடுவதில் ஒரு தனி இன்பம்!

அன்று தொலைபேசியில் பேசினான்: "மச்சான், இருதயநேசன்! மட்டக்களப்பில அன்னம்மாள் கோவில்ல பெருநாள் துவங்கிற்றுது. கடைசி திருநாள் வாற ஞாயிற்றுக்கிழமை, நான் போகப் போறன் நீயும் வாறியா? வருவாய் தானே!"

கெஞ்சலாகக் கேட்டான்! எனக்கு அந்தக் கோவிலைப் பற்றி அவ்வளவு விளக்கமில்லாமல் இருந்தது! "மட்டக்களப்பில எங்கு இருக்கு? அந்தக் கோவில்ல அப்பிடி என்ன இருக்கு! "அட வெறும் பேயன் மாதிரிக் கதைக்கிறியேடா! அன்னம்மாள் கோயில சின்னச் சந்தனமாதா கோயில் எண்டும் சொல்லுவாங்கள் அங்க எங்கட சொந்தக்காரர்ர இடத்தில இருந்து கொஞ்சத்தூரம் போக வரும்! அந்த இடத்த வீச்சுக் கல்முனை எண்டு சொல்லுறது. நல்ல புதுமையான மாதா மச்சான்! வெளியூர்களில இருந்தும் நிறையச் சனம் வரும்! நீ ஒருக்கா எண்டாலும் வந்து பாரண்டா! என்ன சொல்லுறாய்?" அவன் மீண்டும் கெஞ்சினான். இல்லை வற்புறுத்தினான்! நான் சரி வருகிறேன் என்று பதிலுறுத்தேன்! அவன் மகிழ்ச்சியில் சிரித்தான்! "வெள்ளிக்கிழமை ஆறரை மணிக்கு றெயில்வே இஸ்டேசனுக்கு வா சேர்ந்து போகலாம்"

நாங்கள் இளமையில் பழகியது போல இப்பவும் போடா வாடா என்று கதைப்பதுதான் பழக்கம்! திருகோணமலையில் இருந்து புறப்பட்டு சனிக்கிழமை விடியற்காலை மட்டுமாநகரை மட்டிலா மகிழ்ச்சியுடன் வந்து சேர்ந்தோம்! மச்சான் அருளப்பனுக்கு மட்டக் களப்பு அத்துப்படி. ஏனென்றால் அவன் பிறந்து வளர்ந்த இடம் அது!

இளமைக்காலத்தில் இரண்டொருமுறை என்னை அழைத்துச் சென்றிருக்கிறான். ஞாபகமிருக்கிறது. அங்கு அப்போது அனுபவித்த விருந்தோம்பலின் இனிமையை, இப்போது நினைத்தாலும் இனிக்கும்!

அந்தத் தனித்துவ பண்பு இப்போதும் இருக்குமா? சேரநல்நாட்டு இளம் பெண்கள் போல் அழகு சேர இருந்த பெண்கள் இப்பவும் இருப்பாரோ...! என்று பல இனிய நினைவுகளில் களித்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தேன்.

பாலத்தடி வந்ததும் ஒரு ஞாபகம் வந்தது. "மச்சான், மீன்பாடும் தேன்நாடு எண்டு சொல்லு வாங்களே, மீன்பாடுவது உண்மையா? உன் காதால் கேட்டிருக்கிறாயா?!" "மீன்பாடுறதெண்டு சொல்லுறதத் தான் நான் கேட்டிருக்கிறன் மச்சான் ஆனா அப்பிடி பாடுனத நானெண்டாக் கேக்கல்ல கேட்டதாக ஆரும் சொல்லல்ல! ஆனா பாடித்தான் இருக்கும்! பாடாம இப்படியொரு பேர்வராது!"

"இப்ப உள்ள இரசாயன மாற்றங்களால அந்த மீனினம் அழிஞ்சி போயிருக்கும்!" என்றேன் நானும். பொது வைத்தியசாலைக்கு அருகாமையால் ஆற்றங்கரையை நோக்கி ஒரு வீதி போகிறது. "மத்தியாஸ் வீதி" என்று பெயர்ப்பலகையும் இட்டிருக்கிறது! அங்கே உள்ள வீட்டிற்குத்தான் என்னை அழைத்துச் சென்றான்!

"இதாரிது... கனகாலத்துக்குப்புறகு வாற,.... மதிக்கவொண்ணாம இருக்கி...! மனே, இஞ்சவாடி வெட்டைக்கிறங்கி! ஆருவந்திருக்கி எண்டு பாரன் ஒள்ளம்!"... இப்படியாக வரவேற்று உபசரித்தனர். சும்மா சொல்லக்கூடாது, இவ்வளவு சண்டை சீரழிவுக்குப் பின்னும், விருந்தோம்பல் பிரமாதமாகவே இருந்தது! பாயோடு ஓட்டவைப்பார்கள் போலிருந்தது!

அன்று பின்னேரம் புனித அன்னம்மாள் ஆலயம் நோக்கி நடை பயின்றோம்! அந்த வட்டாரம் முழுக்க கிறிஸ்தவர்கள்தான்! அவர்களும் உடுத்திப் படுத்திக் கொண்டு, செபமாலை செபப்புத்தகம், முக்காட்டு வலைகளோடு படையெடுத்தனர் கோவிலை நோக்கி!

இங்கிருந்து ஒன்றரைக் கட்டை தூரம் வரும் அத்தலம். பலர் நடந்துதான் சென்றனர். வயதை எண்ணி நாம் முச்சக்கரத்தில் பயணித்தோம்! அவனும் அரைவாசித் தூரத்துக்கப்பால் ஓடவில்லை. ஓட்டத்தை நிறுத்தினான்! இதற்கப்பால் செலுத்த முடியாதாம்: பாதை சரியில்லையாம்! நாம் நடராசாவில் சென்றோம்!

நடக்கும் போதுதான் தெரிந்தது அவன் சொன்னது சரிதான். பாதை சுத்த மோசம்தான்! பல காலமாக கவனிப்பாரற்று இருந்த இவ்விடத்தில், இப்போதுதான் அபிவிருத்தி வேலை முக்கியமாக வீதி அபிவிருத்தி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்! அத்தோடு வடிகால் வேலைகளும் நடைபெறுகிறது! நேர்சீராக கால் வைத்து நடக்க முடியாது! பாளம் பாளமாக நிலத்தை வெட்டி கொத்தி கிளறி, மண்ணை கல்லை கொட்டி, நடை பயில முடியாத அலங் கோலம்! வயதானநண்பரிருவரும், ஆளையாள் பிடித்துத் தான் நடந்து செல்ல வேண்டிய நிலைப்பாட்டில் இருந்தோம்!

"இப்பிடி அவஸ்தைப்பட வேண்டும் என்று தெரிந்தால் நான் வந்தே இருக்க மாட்டேன்டா!" "அன்னம்மாள்ற அருளால உனக்கு எந்தக் கஸ்ரமும் வராதுடா மச்சான்! கவலைப்படாமல் என்ர கையைப் பிடிச்சுக் கொண்டு வா! எப்படியோ தட்டுத்தடுமாறி கோவிலை அடைந்து விட்டோம். ஆலயத்தை அடைந்ததும் தான் ஒரு உண்மை புரிந்தது! புத்துணர்ச்சி வந்தது! கனகாலமாக என்னைப்பீடித்திருந்த நாரிப் பிடிப்பு எடுபட்டுவிட்டது! இதை மச்சான் அருளப்பனிடம் மிருதுவாகச்சொன்னேன்! அவன் சொன்னான்" பாத்தியா மாதாட புதுமைய! அருள் நிறைந்தமாதாடா!" என்றான்.

இது மேடுபள்ளங்களால் ஏறிவிழுந்து மிகச் சிரமப்பட்டு நடை பயின்றதேக அப்பியாசத்தாலா, மாதாவின் அருளாலா, இரண்டும் தானா, இந்தமாற்றம் நிகழ்ந்தது! தடுமாற்றமாகவே இருந்தது! இந்துக்கள் மகாதிருத்தலங்களை மலை உச்சியிலே தான் அமைத் திருந்தார்கள்! விரதமிருந்து தவமிருந்து நேர்ந்திருந்து படாதபாடுபட்டு அத்திருத்தலத்தை தரிசித்ததும் அவர்கள் வேண்டிய வரம் – தீராத வியாதி எல்லாம் தீர்ந்து போய் விடுகிறது! அங்கு போனால் கட்டாயம் சுகம் வரும் என்ற நம்பிக்கையும் துணையாகி நிற்கிறது!

ஆலயத்தைக் கண்டதும், அதன் அமைவிடம், சூழ்விடம் என்னை வெகுவாக கவர்ந்தது! ஆற்றங் கரையில் பரந்த மணல் வெளியில் தென்னங்கீற்றுகள் சாமரம் வீச அந்த மாதா ஆலயம் அமைந்திருந்தது அருமையாகவே இருந்தது! ஆற்றங்கரையின் தொடுவானில் சூரியன் அஸ்தமித்து இறங்கிக் கொண்டிருந்தான்! செங்கதிர்கள் ஆற்றுநீரில் பட்டுத் தெறித்து வர்ணயாலம் காட்டியது! கோவிலையும் சுற்றாடலையும் கோலமிட்டு அழகுமயமாக்கியது!

ஆங்காங்கே சிறுகூடாரங்களை அமைத்து பக்தகோடிகள் குடும்பம் குடும்பமாக இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது! அயல் கிராமங்களில் இருந்தெல்லாம் மாதாவின் பக்தர்கள் நேர்வினை தொடங்கிய போதே வந்து சேர்ந்து வாடி போட்டு விட்டனர் போலும் – ஆலயத்துள் உள்ளிட்டோம். மச்சான் சாஸ்டாங்கமாக விழுந்து கும்பிட்டான்! பின் எழுந்து முழந்தாழ்படியிட்டு இருகரங்களையும் விரித்து செபிக்கத் தொடங்கிவிட்டான்! என்னை மறந்துவிட்டான்! அவன் இந்த உலகத்தில் இல்லை!

நானும் கிறிஸ்தவன்தானே, முழங்காலிட் டிருந்து பிதாசுதன் போட்டு கடவுளை பிரார்த்தித்தேன். "மாதாவே இறைவன் அருள் உமக்கு இருப்பது உண்மையாக இருந்தால், எமது மக்கள் – அகதியாய் அவலப்பட்டு அலையும் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையைக்கொடும்! எங்கும் சமாதானத்தை ஓங்கச்செய்யும்!"சரி எனது பிரார்த்தனை முடிந்து விட்டது.

நண்பனைக்கவனித்தேன், அவன் செபம் முடியவில்லை! அவன் செபிப்பது தெளிவாகக் கேட்டது: "அருள் நிறைந்த அன்னம்மாளே, தாயே! உன் பாதம் தேடிவந்தேன்! எனக்கு கொஞ்ச நாளாக உழைப்பே இல்லை: வருமானம் இல்லை: பெரிய கஸ்ரமாயிருக்கு தாயே! நீதான அருள்பாலிக்க வேண்டும்!...என்ர மகன்குடும்பம் பிரிஞ்சு போயிருக்கு நீதான் ஒற்றுமையாக்கி விடவேண்டும்!...இப்படியே இவன் மன்றாடல் தொடர்ந்தது!

அவன் குரல் மட்டுமல்ல கோயில் கூடத்தில் கூடியிருந்தோர் யாவரும் செபித்துக் கொண்டும் பிரார்த்தித்துக் கொண்டும் செபமாலை ஓதிக் கொண்டும் கீர்த்தனைகளை பாடிக் கொண்டும், எதையெதையோ வேண்டிக் கொண்டும் இருந்தனர்! மொத்தத்தில் செபக்கூடச் சத்தம் ஓங்காரமிட்டு ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்தது!..... கஷ்டம் கவலை இல்லாத

மனிதரே இல்லை! தங்கள் குறைபாடுகளைத்தீர்க்க, முடிந்த வரையில் எல்லா வழிகளையும் கையாண்டு, கையுடைந்து நம்பிக்கை இழந்த நிலையில்த்தான், தெய்வத்தை நம்பி வேண்டுகின்றனர், புலம்புகின்றனர்! ஒரு வயதான அம்மணி மிகவும் சத்தமிட்டு பிரலாபித்துக்கொண்டிருந்தார்!

அவள் குரல் மிகத்தெளிவாக கேட்டது: "அருள் நிறைந்த மரியாயே! ஆண்டவரே! என்ர ஆம்பிளைப்பிள்ளைகள்,பொம்பிளையக்கண்டவுடனே என்ன மறந்து போனாங்கள்! என்ர பாடு சீரழிவாக் கிடக்கு! நீதான் அவங்களுக்கெல்லாம் நல்ல புத்தியக் குடுக்கவேணும்!... மேலும் ஆண்டவரே பக்கத்து வளவுக் காரன் வேலியக்கூட எடுத்து அடைச்சுப்போட்டான்! ஏனென்டு கேட்டதுக்கு, கததியக்காட்டுறான்! அவன்ர தலையில இடிவிழவேணும்!....

இன்னுமொருவர் வெள்ளை வேட்டி சட்டையோடு வீற்றிருந்து முணுமுணுத்து வேண்டிக் கொண்டிருந்தார்:"இயேசுவே பரிசுத்த மாதாவே! எனக்கு பரிசுத்த இதயத்தைத்தாரும்! பசாசின் சோதனைகளால் தீயநினைவுகளில் விழாமல் என்னைக்காரும்! "பரிசுத்த இதயம் இருந்தால் காணும், என்றும் நல்லதே நடக்கும்! என்றும் உணர்ந்தார் போலும்! இதயம் பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறோம் தான், ஆனால் எப்படித்தான் படித்துப் படித்துச்சொன்னாலும் பாழும் மனதில் ஏதேதோ நினைவுகள்,கனவுகள் எல்லாம் வந்து போகின்றன! இது எம் சுயத்தை மீறி நடக்கின்றன! இப்படியான எண்ணங்களுக்கெல்லாம் நாமா பொறுப்பு? ஆகையால் நல்ல சிந்தனையே நாளும் வர ஆண்டவன் தான் அருள்பாலிக்க வேண்டும! இன்னொருவர் ஒரே செபத்தையே திரும்பத்திரும்ப உச்சரித்தவறாயிருந்தார்: "ஆண்டவரே சாவான பாவத்திலும், சடுதியான மரணத்திலும் நின்று எம்மைக்காப்பாற்றும்!" செபங்களில் எனக்குப்பிடித்த செபம் இதுதான்! இராத்திரியில் நித்திரையில் சர்ப்பம் தீண்டாமல் இருப்பதும் திடீரென சூழும் விபத்துக்களில் நின்று தப்புவதும் விபத்துப்போலும் பாவச் சோதனைகளில் விழாமல் எம்மைக்காப்பதுவும் எமது கரங்களிலா இருக்கிறது!

ஒருவர் உருக்கமாகப்பாடினார்:"இயேசு நேசிக்கிறார்: இயேசு நேசிக்கிறார்: நீசனான எனையும் அதிகமாய் யேசு நேசிக்கிறார்!... பாடல்களில் எனக்குப் பிடித்த பாடல் இதுதான்! என் வாழ்க்கையில் எனக்கு நேரவிருந்த பேராபத்துக்களில் இருந்தெல்லாம் எனைக்காத்தது இயேசு என்னும் நாமம்தான் என்று நான் உணரக்கூடியதாகவே இருக்கிறது! நான் அவதானித்த வரையில், யாவருடைய வேண்டுதல், மன்றாட்டுதல்கள்



எல்லாம் சுயநல வேண்டுதல்களாகவே காணப்பட்டன! "தனக்காக அல்லாமல் பிறருக்காக வேண்டுவதே தெய்வ சந்நிதானத்தில் ஏற்கப்படும்!" என்றும் கேள்விப்பட்டும் இருக்கிறேன்!

நிறைந்த சனம் கோவில் கொள்ளாது என்று, வளாக வெண்மணற்பரப்பில் மேடை போட்டு திருவிழா விற்கான திருப்பலிப்பூசை ஆரம்பிக்கலாயிற்று! மேற்றா சனத்துக்கான மேற்றாணி ஆண்டகை தலைமையில் மேதகு குருக்களோடு திருச்சடங்குகள் நடக்கலாயின! எல்லாக்கோயில் திருவிழாக்களிலும் நடைபெறுவது போலத்தான் இங்கும் திருவிருந்து இடம்பெற்றது. ஏந்த மாற்றமுமில்லை! ஆனால் ஆண்டகையின் பிரசங்கம் தான் என்னை மிகவும் ஈர்த்தது:

"நம் ஆண்டவராகிய இயேசு, குருடருக்கு பார்வையை,செவிடருக்கு கேள்வியை, ஊமைக்கு வாக்கை, கொடுத்தார். தீராத நோய்களை தீர்த்தார்! கட்டிலோடு கிடந்தவனை கட்டிலைத் தூக்கிக்கொண்டு நடக்கப்பண்ணினார்!.....இப்படியே அவர் அற்புதங்களைச்செய்து," உன் நம்பிக்கை விசுவாசமே உன்னைச் சுகப்படுத்தியது"என்றார்! "கடுகளவு தெய்வ நம்பிக்கை இருந்தால் காணும் இந்த மலையையே இடம்பெயரச் செய்யலாம்" என்கிறார் இயேசு! கடவுள் நம்பிக்கை இருந்தாலே அரியவை ஆற்றலாம்!.... இவ்வாறாக நம்பிக்கையில் நம்பிக்கையூட்டும் விதமாகவே அவர் பிரசங்கம் அமைந்திருந்தது! பூசை, ஆராதனை, ஆலாபனைகள் முடிந்த பின்னர், சுற்றுப்பிரகாரம்

சுற்றிவரத் தொடங்கியது! அன்னம்மாள் திருச்சொருப பேழையைத் தாங்கி ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்!

வீதியின் இரு மருங்கிலும் பக்தர்கள் பக்தசிரத்தையோடு மெழுகுவர்த்தியை ஏந்தி நிறையாக ஊர்ந்து சென்றனர்! இந்த அருமையான காட்சியை கத்தோலிக்க ஆலயங்களில் தான் காணமுடியும்!

இந்த ஊர்வலத்தில் ஒரு விசேடம் என்ன வென்றால், ஒழுங்கைகள் தோறும் நெருக்கமான வீடுகள், அத்தனையும்கிறிஸ்தவர்கள்! அல்லாதவர் களும் சேர்ந்து வீட்டுக்கு வீடு மாதா சுருவக்கூடுகளை வைத்து வர்ண விளக்குகளால் பூக்களால் அலங்கரித்து, பக்தி சிரத்தையாய் கரம் குவித்து மாதாவை வரவேற்றுநின்றனர்!

அந்த ஊரே பக்திமயமாய் விழாக்கோலம் பூண்டு நின்றது!விழா இனிதே நிறைவேறிய பின்னர் சனம் கலையத்தொடங்கியது! நேரம் போய்விட்டது! சுற்றுப்பிரகாரம் அதிக நேரத்தை விழுங்கிவிட்டது! சனம் எல்லாம் கலைந்தாலும், மச்சான் இப்போதைக்கு வாறசாயலாக இல்லை! உள்ள திருச்சுருவங்களை எல்லாம் ஆரத்தழுவி கும்பிட்டுக் கொண்டிருந்தான்.

இந்த வரிசையில் புத்தர் சிலையிருந்தால் அதற்கும் வணக்கம் தெரிவிப்பான் போலிருந்தது! கேட்டால்"எல்லாம் கடவுள்தானே"என்பான்! நோக்கம் சமதர்மம் அல்ல, எல்லா தெய்வங்களும் சேர்ந்து தன்னில் அருள்பாலித்து நல்லாக்கி வைக்க வேண்டும் என்பது தான்! எனக்குத்தெரிந்த வரையில் ஒரு தெய்வமும் இவனை நல்லாக்கி வைக்கவில்லை! காலம் முழுக்க கஷ்டம் தான்! எண்ணங்கள் பலவானால் ஒன்றும் நடக்காது: ஒரே சிந்தனையாய் இருந்தால் விண்மீனையும் வீழ்த்தலாம்! இதுவும் ஒரு பொன்மொழி தான்!

எப்படியோ நாமிருவரும் வெளிவரும் போது நேரம் பத்தையும் தாண்டிவிட்டது! அனேகமாக நான் பள்ளிகொள்ளும் நேரம்! நாம் தங்கும் வீடு நோக்கி நடையைக்கட்டினோம். இவன் பின்னே திரும்பி பார்த்துப்பார்த்து வந்தான் கோபுரத்தை! பழைய காதலியை சந்தித்து பிரிய மனமில்லாது பிரிந்து செல்வது போலிருந்தது! நான் நடையை நிறுத்தினேன்! எங்குமிருட்டு! ஒரு மின் வெளிச்சத்தையும் காணவில்லை: வானத்தில் விண்மீன்கள் கூட இல்லை! ஒரே இருள் மயம்! நான் எடுத்தடி வைக்கப்பயந்து நின்றேன்!

அப்போது தான் பேரொளி வீசியது! இருளைக் கிழித்துக்கொண்டுஎல்லாம் துலாபாரமாக தெரிந்தது! மச்சான் மின்சூளைப் (டாச்லைற்) பிடித்துக் கொண்டு வந்து என் கரம் பற்றினான்! "பயப்படாதடா! மாதாட துணையால நாங்கள் நல்லபடியாக போய்ச்சேருவம்! "

"என்னெண்டு இந்த ரோச்சு உன் கைக்கு இந்த நேரம் வந்தது!"

"எனக்கு இப்படி வரும் எண்டு தெரியும் தானே, நான் திருகோணமலையில இருந்து வரக்குள்ளேயே முன்னேற்பாடாகக் கொண்டு வந்தனான் மச்சான்!.....இது சவுதியில இருந்து வரக்குள்ளேயே என்ர மகன் கொண்டு வந்தவன். நல்ல பவர் புல்லானது!அங்கேயே இதிரவில எண்ணாயிரம்! "அவன் மின்சூளை ஒரு கரத்திலும், மறுகரத்தில் என்னையும் பற்றிக்கொண்டு மிக நிதான மாக என்னை அழைத்துச்சென்றான்! பள்ளங்கள், படு குழிகள், கால்வாய்கள், வெட்டுக்கள் எல்லாவற்றில் நின்றும் "கவனம்....பத்திரம்....என்று வாயோயாமல் சொல்லிக்கொண்டே என்னைப் பத்திரமாக நடத்தி வந்தான்! இந்தப்பிரகாச வெளிச்சம் இருந்தால் கூட அவன் இல்லாவிட்டால் நான் வீழ்ந்திடாமல் நடந்திருக்க மாட்டேன்!

அவன் அனுபவம்; மதியூகம்; முன்யோசனை; என் மீது கொண்ட பற்று பிடிப்பு இவைகளை மெச்சாமல் இருக்க முடியவில்லை. மச்சானை மனதுள் வாழ்த்திக் கொண்டே வந்தேன்! ஆனால் அவனோ, "மாதாவே....மாதாவே...."என்று சொல்லிக்கொண்டே வந்தான்! "நீ பயப்படாத மச்சான் மாதா நமக்கொரு குறையும் வராம பாதுகாப்பா!"

இந்தப் படுபாதகப் பாதையை வெகுநேரம் கடந்து நடந்து செல்கையில், தூரத்தில் மின்விளக்குகள் மினுக்காட்டின! இந்த ஆபத்தான பாதையைத் தாண்டி விட்டோம் என்று மனதில் ஒரு தெம்பு பிறந்தது! குடியிருப்புகளிலும் தெருவிளக்குகளிலும் இருந்து மின்வெளிச்சம் துலங்கின! மனதிலும் ஒருவெளிச்சம்: தெளிவு! பாதையும் சீராகிவிட்டது: தெளிவாகிவிட்டது! இனிநடைபாதையைப் பற்றி கவலை இல்லை: வெளிச்சத்தைப் பற்றியும் அக்கறையில்லை!

மச்சான் அருளப்பன் மின்சூள் வெளிச்சத்தை அணைத்தான்! "மச்சான்! பாத்தியா, கடவுள் தான் எங்களக்காப்பாற்றினார்! மாதாதான் எங்கள ஒரு ஆபத்தும் இல்லாம கொண்டு வந்து சேர்த்தா! நாம மாதாவுக்குத் தான் நன்றி சொல்லவேணும்! "என் பகுத்தறிவு விழித்துக் கொண்டது! "மடையா, விசர்க்கதை பேசுறாய்!இந்த ரோச்லைற்றிட உதவியில்லாம நாம பத்திரமா வந்து சேர்ந்திருப்பமா?! இதக்கண்டு பிடிச்சவன்ர பேர் தெரியுமா? ஊர் தெரியுமா? உனக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது! ஆனா உண்மையில அவனுக்குத்தான் நாம நன்றி சொல்லவேணும்! சிலை வைத்துக் கும்பிடவேணும்!

அவன் வாயடைத்துப் போய் மௌனமாக என்னைப் பின் தொடர்ந்தான்!

ச.முருகானந்தன்

# தமிழர்களின் இன்றைய வாழ்வியல் அவலங்களைச் சித்திரிக்கும் திரைப்படம் "இனி அவன்"




அதீதமான ஜனரஞ்சக சகதிக்குள் மூழ்கிப் போய் அதிலிருந்து மீண்டெழ முடியாமல் வெறும் கேளிக்கை யான சினிமாக்களை தமிழ்ப்பட ரசிகர்கள் வரவேற்று இன்னமும் குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். நிஜ வாழ்வின் யதார்த்தத்திற்கு அண்மையில் கூட நெருங்காத, அழகுணர்வும் கலைத்துவமும் அற்ற வெற்று வேட்டுக் களையே பார்த்துப் பழகிப் போன இவர்களால் அவ்வப் போது வரும் நம்பிக்கையூட்டும் படைப்புகள் நிராகரிக்கப் படுகின்றன. புதிய மிலேனியத்தில் தமிழக சினிமாவில் நம்பிக்கையூட்டும் சில அறுவடைகள் தரிசனமாகின்ற போதிலும் அவற்றில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை ஜனரஞ்சக சுழிகளிடையே சிக்கி அமிழ்ந்து போவதையே காண்கிறோம். இந்த நிலையோடு ஒப்பிடும் போது எமது நாட்டு சிங்கள சினிமாவில் பல வித்தியாசமான மாற்றுத் திரைப்படங்கள் வெளிவருவதுடன் அவை மக்களின் கவன ஈர்ப்பையும் பெறுகின்றன. இலங்கைத் தமிழ் சினிமாவைத் தலையெடுக்க விடாமல் வணிக ரீதியிலான இந்தியத் திரைப்படங்கள் வெளிவந்தவண்ணமுள்ளன. இந்திய சினிமாக்களின் இறக்குமதி மட்டுப்பட்டிருந்த ஒரு கால கட்டத்தில் சில ஈழத்து தமிழ் சினிமாக்களும் வெளிவந்தன. இவற்றிலும் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை மண் கவ்வின. தமிழகத்தில் தற்போது வெளிவரும் பல மாற்றுச் சினிமாக்கள் இலங்கையில் திரையிடப்படுவதுமில்லை. ஒரு சில ஒரே ஒரு பிரதி மட்டும் திரையிடப்படுகின்றது.

தமிழ் திரைப்படம் ஒன்றைத் தயாரித்து கைகளைச் சுட்டுக் கொள்ள எவரும் விரும்பாத இன்றைய சூழலில் சில புலம் பெயர்ந்தவர்களின் உதவியுடன் சில படங்கள் வெளிவந்த போதும் அவையும் வியாபார ரீதியில் படுத்து விட்டன. தற்போது சிங்கள திரையுலகில் தலைசிறந்து விளங்கும் ஓர் இயக்குனரான அசோக ஹந்தகமவின் நெறியாள்கையில் "இனி அவன்" என்ற திரைப்படம் வெளிவந்து மூச்சுப்பிடித்து தாக்குப்பிடித்து மூன்று வாரங்களை எட்டியுள்ளது.

"இனி அவன்" திரைப்படத்தை சிங்கள மொழி மூலம் தயாரித்திருந்தால் இது இன்னமும் வரவேற்பைப் பெற்றிருக்கும். எனினும் அப்படத்தை தமிழில் இயக்கிய அசோக ஹந்தகம பாராட்டுக்குரியவர். அதிலும் ஈழத் தமிழர் இன்று எதிர்கொள்கின்ற பிரச்சினையைக் கதைக் கருவாக எடுத்து அழகிய படிமங்களினூடாக யதார்த்த நிலையைத் தரிசிக்க வைத்துள்ளமை சிறப்பம்சமாகும்.

போரையும் அதற்கான வேரையும் இனவாத அடக்குமுறையையும் இந்தப்படம் பேசாது விட்டாலும், போருக்குப் பின்னரான தமிழர் வாழ்வினை தரிசிக்க வைத்ததனூடாக இந்தக் கொடிய யுத்தம் தமிழர்களின் வாழ்வினை எவ்வளவு தூரம் கலைத்துப் போட்டுள்ளது என்பதனை முன்னாள் போராளி ஒருவனை கதாநாய கனாக வைத்து நெஞ்சைத் தொடும் வண்ணம் அழகிய லோடு வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்றைய தமிழர்களின் வாழ்வின் சிதைவுகளினூடாக, நடந்து முடிந்த கொடு நாச யுத்தம், சிறப்புடனும் சிறப்பான பண்பாட்டு விழுமியங்களுடனும் வாழ்ந்த ஈழத்தமிழரின் இன்றைய நிலையையும், கேள்விக்குறியாகியுள்ள எதிர்காலத்தையும், மீண்டெழ முடியாமல் தவிப்பதையும் மனதைத் தொடும் வண்ணம் மனதில் எழ வைக்கும் சிந்தனை ஊற்றூடாக உணரவைத்துள்ளமை சிறப்பம் மாகும். நேரடியாக அரசியலைப் பேசாமல், அன்றைய அரசியலின் இனவாதச் சிந்தனையால் சிறுபான்மை யினர் வாழ்வில் ஏற்பட்டுள்ள துன்ப துயரங்களை எடுத்தியம்பியுள்ளார்.

பொதுவாக யதார்த்த திரைப்படங்களைப் போலவே இத்திரைப்படமும் மெதுவாக ஆரம்பித்து இறுக்கமாக நகர்கின்றது. "போர்முயுலா" வகைத் திரைப் படங்களிலுள்ள வழமையான கனவுக் காதல் காட்சி களோ, பாடல் நடனங்களோ, அகாய சூரத்தனம் காட்டும் யதார்த்த சண்டைக் காட்சிகளோ எதுவும் இல்லை. நகைச்சுவை என்ற பெயரில் கழுத்தறுக்கும் காட்சிகளு மில்லை. இளசுகள் விரும்பும் வேகமுமில்லை. அதே வேளை மெகா தொடர்களில் வருவது போன்ற வசனங்கள் எதுவுமில்லை. பல விடயங்களை ரசிகனின் சிந்தனைக்கு விட்டுவிடும் காட்சிகள் ஏராளம். பூடகமா சில விடயங்களைக் காட்சிப்படுத்தி பார்வையாளனை ஊகிக்க வைக்கும் மாற்றுச்சினிமாவின் சிறப்பான அம்சங்கள் நிறைய உண்டு.

போராளியாக இருந்து புனர் வாழ்வு பெற்று ஊர் திரும்பும் கதாநாயகன் யாழ் மண்ணின் பாதை களூடாக பழைய பஸ் ஒன்றில் பயணிப்பதுடன் படம் ஆரம்பிக்கின்றது. நீண்ட நேரம் வசனம் எதுவுமில்லாமல் மெலிய பின்னணி இசையுடன் பஸ்ஸின் ஜன்னலூடாக சிதைவுற்ற யாழ் மண்ணை தரிசிக்க வைக்கிறார். கிடுகு

வேலிகளும், குடிசைகளும், பனையோலை வேலிகளும் பனை விருட்சங்களும், பூவசர மரங்களும் யாழ் மண்ணைத் தரிசிக்க வைக்கின்றன. யார் அவன் என்ற கேள்வி மனதில் எழுகிறது. பின்னர் ஒரு காட்சியில் தான் அவன் புனர்வாழ்வு பெற்று ஊர் திரும்பிய போராளி என்பது தெரிய வருகிறது அது கூட பார்வையாளனின் ஊகத்திற்கு சிலரது புறக்கணிப்புகள், திட்டுதல்கள் ஊடாக போராளி என்பதை அறிகிறோம். சமூகத்தில் உயர்வாக மதிக்கப்பட்ட, மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்ட போராளிகள், யுத்தம் நிறைவடைந்து புனர்வாழ்வு பெற்று மீண்டு வந்த பின்னர் மதிக்கப்படுவதில்லை என்பதுடன், தூற்றவும் படுகிறார்கள். அவர்களுக்கான ஆதாரத்தை அரசு வழங்கவில்லை என்பதுடன் அவர்களுக்கு வேலை வழங்கவோ, உதவிடவோ எந்த சமூகத்திற்காக தியாக சிந்தனையுடன் போராடினார்களோ அவர்களே முன் வருவதில்லை என்பதை மனதைத் தொடும் வண்ணம் சித்திரிக்கிறார். போரின் அழிவுகளும், மனச்சிதைவுகளும், இழப்புக்களும் மக்கள் வாழ்வை எவ்வளவு தூரம் பாதித் துள்ளது என்பதையும் மக்களின் வாழ்வு தடம் புரண்டுள்ளது என்பதையும் பாத்திரங்களூடாகக் காட்டியுள்ளார்.

யாழ் மண்ணின் சாபக் கேடுகளில் ஒன்றான சாதியப் பாகுபாடும், அடக்கு முறையும் எந்த இடத்திலும் நேரடியாகக் காட்டப்படவில்லை என்பதுடன், வசனங்களில் கூட சுட்டப்படாத போதும், சாதியம் பேசப்படுகின்றது. போராளியாவதற்கு முன்னர் கதாநாயகனைக் காதலித்த பெண் உயர் சாதிப் பெண் என்பதால், குறைவான இவனுக்குக் கட்டி வைக்க மறுப்பதுடன் அவனுடன் ஓடிப் போய்விடக் கூடும் என்பதற்காகவே தமது சாதியில் ஒரு முதியவருக்குக் கட்டி வைத்து விதவையாக்கும் கொடுமை யினூடே சாதியத்தின் கொடுமை பேசப்படுகின்றது. அதே வேளை முப்பது வருட போர் தந்த இன ஐக்கியத்தினூடாக வும், இடப்பெயர்வு, முகாம் வாழ்வு என்பவற்றின் பலனாக சாதிய முரண்பாடுகளின் கனதி நலிவுற்று வருவதையும் கூட பூடகமாக சொல்வதன் மூலம் வலுவிழந்து வரும் சாதிய பாகுபாட்டை தரிசனமாக்குகிறார். மீண்டு வந்த போராளி நாயகன் தனது முன்னாள் காதலியை தன்னோடு அழைத்துச் செல்வதும், அதை அவளது தாய் மறுக்காம லிருப்பதும் கால தரிசனமாகும் புதிய மாற்றங்கள்!

படத்தின் முன்பகுதி கதாநாயகன் வேலை தேடுவதையும், சமூக நிராகரிப்பையும், சமூகத்தின் இன்றைய நிலையையும், விதவையான காதலியை மணப்பதையும் காட்சிப்படுத்துகிறது. வடபுலத்தின் மண் கமழும் சிறுசிறு பாத்திரங்களினூடாக இன்றைய யாழ் மண்ணினதும் மக்களினதும் நிலையைப் புரிய வைக்கிறார். அதிக வசனங்கள் இல்லாமல் சிறுசிறு பாத்திரங்களினூடாக, படிமங்களினூடாக மெல்ல மெல்ல மனதில் புரிய வைக்கும் உத்தி சிறப்பானது. கதாபாத்திரங் களுக்கு ஏற்ப பாத்திரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமையும், இயல்பான உடைகளும் பார்வையாளனைக் கனவுகளில் சஞ்சரிக்க விடாமல் நிஜ வாழ்வுடன் பயணிக்க வைக்கிறது. கணவன் மனைவியிடையேயான பிணைப்பு ஒரு பரத நாட்டியக் காட்சியினூடாக இயல்பாகக் காண்பிக்கப்படு கின்றது. கதாநாயகன் புதைத்து வைத்த ஆயுதங்களைத் தேட, பணத்திற்காக அவன் தனது நகையைத் தேடுகிறான் என எண்ணும் தாய் அது வேறிடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி, அதைக் கொண்டு ஏதாவது தொழிலை ஆரம்பிக்கும்படி கூறுகிறாள். போர்காலத்தில் நம்மவர்கள் வீட்டுக்குள் நகைகளை வைத்திருக்கப் பயந்து மண்ணில் புதைத்து வைத்தது நினைவில் வருகிறது.

படத்தின் இரண்டாவது பாதியில் கதாநாயகன் சில சகவாசங்களினால் கெட்ட திசையில் பயணிப்பதை யும், யாழ் மண்ணில் சிலர் போதை வஸ்தைக் கடத்தி வந்து இளைய சமுதாயத்திற்கு ஆப்பு வைப்பதையும் நேரடியான காட்சிப்படுத்தலின்றி சொல்வதும், இரண்டாவது கதா நாயகியூடாக வறுமையும், இழப்புக்களும் மக்களின் பண் பாட்டை, ஒழுக்கத்தை சிதைவுறுவதையும் சித்திரித் துள்ளார். வறுமை நிமித்தம் சோரம் போவது, வன்புணர்வு, கலாசாரச் சீரழிவு என எமது இன்றைய வாழ்வின் அவலங் களை இயல்பாக தரிசிக்க முடிகிறது. கெட்ட திசையில் பயணிக்க ஆரம்பித்த கதாநாயகன் தவறான பாதையி லிருந்து மீள்வதுடன் படம் முடிகிறது. எழுந்து வெளியே வரும் போது, பின்னர் இரவு படுக்கையிலும் கூட திரைப் படம் ஏற்படுத்திய கேள்விகளும், அதிர்வுகளும் மனதை அலைக்கழித்த வண்ணமேயிருந்தது. இரண்டாவது நாயகியும் சிறப்பாக பாத்திரத்துடன் ஒன்றி நடித்துள்ளார்.

பூடகமாக ஊகிப்பது சிலவேளைகளில் சமான்ய ரசிகர்களுக்கு கடினமாக இருக்கக் கூடும். அவ்வாறே காட்சி மாற்றங்கள் திடீரென ஏற்படும் போது சிலருக்குக் குழப்பமாக இருக்கலாம். சில காட்சிகள் யதார்த்தமற்ற தாகவுமிருந்தது. கதாநாயகனின் வீட்டின் முன்னர் பிரேதத்தை வைத்து விட்டுப் போவது இயல்பாக இல்லை. அடுத்து கடத்தல் தொழில் இன்று தமிழர்களால் மேற் கொள்ளும் சாத்தியமில்லை. கடலுள் அவ்வளவு பாதுகாப்பு. உண்மையில் தென்புலத்திலிருந்தே வடபுலத் திற்கு போதைப் பொருட்கள் கடத்தி வருவதாகத் தான் கருதப்படுகிறது. இதில் தென்பகுதி சகோதர இனத்தவர்கள், தப்பியோடிய இராணுவத்தினர் சம்மந்தப்பட்டிருப்பதாக வும் கருதப்படுவதே யதார்த்தமான நிலை. இப்படி வெகு சில குறைகளைச் சுட்டிக்காட்ட முடியும். எனினும் நாயகி வறுமை நிமித்தம் விபசாரத்தில் ஈடுபடுவது யதார்த்த மாகவே உள்ளது. கதாநாயகனாக நடிக்கும் தர்ஷன் தர்மராஜ்ஜின் உருவப் பொருத்தம் கச்சிதமாக இருக்கிறது. முரண்பட்ட மனச்சிக்கலிடையே இறுக்கமான முகமும் இயல்பாக இருக்கின்றது. சுபாசினி பாலசுப்பிரமணியம், நிரஞ்சினி சண்முகராஜா என இரண்டு கதாநாயகி பாத்திரம் ஏற்றவர்களும் மனதைத் தொடுகிறார்கள்.

ஒரு சிங்கள இயக்குனர் எமது இன்றையை அவல நிலையை தனது பார்வையில் இயல்பாகச் சொல்லி யுள்ளார். புனர்வாழ்வு பெற்று வந்த போராளிகளின் இன்றைய அநாதரவான வாழ வழியற்ற நிலையை நாயகன் ஊடாகவும், இரண்டாவது நாயகி ஊடாகவும் சிறப்பாக பதிய வைத்துள்ளார். பெரு வீதிகள் சீர் செய்யப் பட்டாலும் கிராமங்கள் இன்னமும் சிதிலங்களுடனே கவனிக்கப்படாமலிருப்பதும் தரிசனமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றம் என்பது சீராகச் செய்யப்படவில்லை என்பதையும் உணர வைத்துள்ளமை பாராட்டுக்குரியது.

# நிலா தமிழின் தாசனின்
# “பள்ளிச் சட்டையும் புத்தகப் பையும்”




கவிஞர் நிலா தமிழின் தாசனின் முதலாவது சிறுகதைத் தொகுப்பாக 14 சிறுகதைகளை உள்ளடக்கி “பள்ளிச் சட்டையும் புத்தகப் பையும்” அம்மா பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளது. நேர்த்தியான அட்டைப்படம் நூலின் முகப்பை அலங்கரிக்கின்றது. கவிதைத்துறையில் ஆழ்ந்த பரிச்சயம் கொண்ட நிலா தமிழின்தாசனின் சிறுகதைகள்; போரின் அவலம், வறுமை வாழ்வு, முதலாளி வர்க்கத்தினரின் அராஜக செயல்கள், பிறர்நலம், மனிதானிமானம், காதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கப்பட்ட படைப்புக்களாகக் காணப்படுகின்றன. இவரது சிறுகதைகள் சிந்தாமணி, தொண்டன், தினகரன், தமிழ்அலை, வசந்தம் ஆகியவற்றில் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தொகுப்பின் தலைப்பாக அமைந்துள் பள்ளிச்சட்டையும் புத்தகப்பையும் என்ற சிறுகதை ஏழ்மைவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு குடும்பத்தின் கதை. குடும்பத்தலைவனின் நாளாந்த உழைப்பே அக்குடும்பத்தின் தேவைகளைத் தீர்க்க உதவுகின்றது. மரம்வெட்டி விறகு விற்று பிழைக்கும் ஒரு குடும்பத்தின் சோகக்கதை. நிலாதமிழின் தாசனின் பாம்புப்புற்று, ஆணவம், ஒட்டுண்ணியும் ஒரு சொட்டுக் கண்ணீரும், சொந்தநிலம் ஆகிய கதைகள் முதலாளி வர்க்கத்தினரின் கொடுமைகளையும் ஆணவப்போக்கையும் ஈவிரக்கமற்ற செயல்களையும் எடுத்தியம்புவையாக அமைந்துள்ளன. “பாம்புப்புற்று“ கதையில் வரும் முத்துலிங்கத்தார் தன் முதலாளிக்குணத்தை பிரயோகித்து காசு இல்லாத வேலைக்காரனைத் தந்திரமாக பெற்றுக் கொள்பவராகவும், “ஆணவம்“ கதையில் வரும் வாத்தியார் தன் வரட்டுக் கௌரவத்துக்காக தன் தென்னந்தோப்பையே அழிக்கும் வரட்டு ஆணவம் மிக்கவராகவும், “ஒட்டுண்ணியும் ஒரு சொட்டுக் கண்ணீரி“லும் வரும் பெண் முதலாளி அகதிகளை வைத்துப் பிழைப்பு நடத்தி வரும் சுயநல அளுமை மிக்க பாத்திரமாகவும், சொந்தநிலம் கதையில் வரும் முதலாளி, குடியிருந்த நிலத்தை விட்டு வறியவர்களை துரத்தும் இயல்பு கொண்ட கொடிய பாத்திரமாக இவரது கதைகளில் உலாவருகின்றனர். இக்கதைகளுடாக முதலாளி வர்க்கத்தினரின் கொடுமைகள் மிக இயல்பாக வெளிக்காட்டப்படுகின்றன.

“மயக்கம்“ கதையின் ஊடாக மனிதாபிமானம் மிக்க முகாமையாளர்கள் உள்ளார்கள் என்பதையும் “டெங்கு ஒழிப்புச் சட்டமும் விநாசித்தம்பி அப்பு“ என்ற கதையின் ஊடாக மனிதாபிமானம் அற்ற சட்ட அதிகாரிகள் உள்ளனர் என்பதையும் அழகான கதைச்சித்திரமாக வரைந்துள்ளார்.


சபலப்பன்றி இந்ததொகுதியில் உள்ள வீரியம் குறைந்த கதையாகவும் சினிமாத்தனமான கதையாக அமைந்துள்ளது. கதாசிரியர் போர் பற்றி எழுதிய யுத்த வடுக்கள், இரண்ய அறுவடைகள், சாகடிக்கப்படும் சத்தியங்கள் ஆகிய மூன்று கதைகள் இத்தொகுதியில் உள்ள சிறந்த கதைகளாகவும் இத்தொகுப்பிற்கு அதிக வலுவைக் கொடுப்பனவாகவும் அமைந்துள்ளன. போரின் போதும் அதன் பின்னரும் தமிழ் இளைஞர்கள் அடைந்த துன்பங்கள் இவரது கதைப்பொருளாக அமைந்துள்ளது. இரண்ய அறுவடைகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் “பிஞ்சுமனம்“ திரைப்படத்தை நினைவுபடுத்துகிறது. அறுவடை கதை “வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான்“ என்ற பழமொழியை ஞாபகப்படுத்துகிறது. “நிழல் மரம்“ எதிர்கால நலன் கருதி முதியவர் பற்றிய சிறுகதை. “சொல்ல நினைத்து சொல்லாமல் போனது“ என்ற சிறுகதை நல்லதொரு காதல் கதை.


மொத்தத்தில் இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் ஒரேயிருப்பில் இருந்து வாசித்து விட வாசகனைத்தூண்டுவனாவாக அமைகின்றன. இருப்பினும் இவரது பெரும்பாலான கதைகளில் ஆரம்பத்திலேயே முடிவு எவ்வாறு அமையப்போகின்றது என்பதை உடனே வெளித்தெரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. ஆசிரியர் கருப்பொருளில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும். இவரிடம் இருந்து இன்னும் பல சிறந்த சிறுகதைகளை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம்.

# பிரபல எழுத்தாளர் தெணியானுக்கு வந்த கடிதங்கள்

## எழுத்தாளர் மலரன்பன் எழுதியிருக்கும் சில கடிதங்கள்







நோத் மாத்தளை ஜங்சன்
கவுடுபெலல்ல
*04.12.1967*

திரு நடேசன் அவர்கள்,
அட்டாப்பிட்டிய.

அன்புள்ளஆசிரியர் அவர்கட்கு,

தங்களின் கடிதம் கிடைத்தது. நன்றி. தங்களைப்பற்றி ஆசிரியர் திரு.இராசலிங்கம் என்னிடம் நிறைய கூறியிருக்கின்றார். தங்களின் சிறுகதைகள் கைவசம் உள்ளவைகளை எனக்கு அனுப்பி வைக்கவும். படித்தபின்னர் திருப்பி அனுப்புகின்றேன்.

எனது சிறுகதைகளைப்பற்றிய தங்களின் அபிப்பிராயத்தை தெரிவித்தமைக்கு எனது நன்றி.

எனது ஆரம்பக்கதைகள் - புதுமைப்பித்தன் கூறுவது போல சொப்பனாவஸ்தைக் கதைகள் தான். இலக்கியம் என்றால் என்ன என்ற ஒரு தெளிவு எனக்கில்லாத நாட்களில் பிறந்தவைகள் அவை.

சிலநாட்களுக்கு முன்பு ஈழத்தின் சிரேஸ்ட எடுத்தாளர்களில் ஒருவரான திரு.என்.எஸ்.எம்.இராமையா அவர்கள் எனது சிறுகதையொன்றினைப்பற்றி தன் அபிப்பிராயத்தை எழுதும் போது ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். “தன்னிலிருந்து உதிரும் இலைகளையும் மலர்களையும் எருவாக்கிக் கொண்டு செழித்து வளர்வதே செடியின் இயல்பு எழுதுபவனும் அப்படியே”

ஓ! எவ்வளவு பொருத்தமான உதாரணம். நான் ஓரளவேனும் எழுதுகிறேன் என்றால் அதற்கு முக்கிய காரணம் திரு.என்.எஸ்.எம்.இராமையா அவர்கள் தான். மாப்பசானின் கதைகளைப் பற்றி நானும் எனது நண்பர் ஒருவரும் ஒருநாள் பேசிக் கொண்டிருந்தோம். அன்றுமாலை, தமிழ்விழா நினைவேடு (இம்மலர் நாங்கள் அண்மையில் எடுத்த தமிழ்விழாவின் போது வெளியிடப்பட்டது) பொறுப்பாளராக இருந்த திரு நி.கா.முத்து என்னிடம் வந்து மலருக்கு ஒரு கதை எழுதும் படியும் அதுவும் இரண்டே நாட்களில் தன்னிடம் கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டார். மாப்பசானின் பாணியிலே எழுத வேண்டும் என்ற ஆவலில் அன்று மாலையே விபரீத உறவு என்ற கதையை எழுதிக் கொடுத்தேன். அவசரஅவசரமாக எழுதும்படி நேர்ந்ததால் அரை வேக்காடு கதையாகிவிட்டது. சிலகாரணங்களால் கதைகள் ஒன்றுமே தமிழ்விழாநினை வேட்டில் பிரசுரிக்க முடியாமற் போய் விட்டது. இந்நினைவேடு ஆசிரியர் ராசலிங்கம் அவர்களிடம் ஒன்று கொடுத்தேன். நீங்கள் பார்த்திருப்பீர்கள் என எண்ணு கின்றேன். அக்கதையை தற்பொழுது பிரசுரத்திற்கு அனுப்புவதாக எனக்கு உத்தேசம் இல்லை. மலைமுரசு சிறுகதை மலருக்கு ஒரு கதை எழுதும் படி என்னிடம் கேட்டுள்ளார்கள். தற்பொழுது எழுதிக் கொண்டிருக்கிறேன். பொங்கல் பண்டிகையின் போது இம்மலர் வெளியிடப்படும் என எண்ணுகின்றேன். தங்களின் சிறுகதைகளை எதிர்பார்க்கிறேன். வணக்கம்.

அன்புடன் மலரன்பன்

(2)

28.12.1967

திரு தெணியான் அவர்கள்
பொலிகண்டி.

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

தங்களின் கடிதம் கிடைத்தது. எனக்கு கடும் சுகவீனம் ஏற்பட்டிருந்தமையினால் கடிதம் எழுத காலதாமதம் ஏற்பட்டு விட்டது. அதற்காக மிகவும் வருந்துகின்றேன். இன்னும் எனக்கு சரியான சுகமேற்படவில்லை. அதனால் கடிதத்தை தம்பியிடம் சொல்லி எழுதுவிக்கிறேன்

தங்களின் இரண்டு கதைகளையும் படித்தேன். கதைகளுக்குத் தாங்கள் எடுத்துக் கொண்ட கருவை சரியான உரு கொடுத்து இறுக்கமாக அமைத்திருக்கின்றீர்கள். "பெண் பாவை", "உறவு உள்ளத்தில்" ஆகிய இரண்டு கதைகளிலும் வரும் இரு கன்னிப் பெண்களின் பாத்திரமும் ஒரு பெண்ணைச் சுற்றியே எழுந்த கதையாக இருப்பதாக இரண்டையும் அடுத்தடுத்து வாசிக்கும் போது ஒரு உணர்வு ஏற்படுகின்றது. "உறவு உள்ளத்தில்" கதையில் பிரதேச மணம் நன்றாகக் கமழ்கின்றது. அதே கதையைப் படித்த இங்குள்ள இன்னுமோர் நண்பர்(யாழ்ப்பாணத்தவர்) கதை முடிவுபெறவில்லை என்று கூறுகின்றார். மட்ட ரகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சினிமா ஆகியவைகளில் திடீர் திருப்பங்களைக் கொண்ட கதைகளை வாசித்தும் பார்த்தும் அதற்கேற்றவாறு தங்கள் ரசனைகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள் நமது வாசகர்கள். அப்படிப்பட்ட பலரால் சில நல்ல கலையம்சம் நிறைந்த இலக்கியப் படைப்புக்களை சீரணிக்க முடிவதில்லை. இறுதியாக நான் கூறுவது என்னவெனில், நான் ஒரு தேர்ந்த விமர்சகன் அல்லன் எனினும் எனது கருத்துப்படி "பெண்பாவை", "உறவு உள்ளத்தில்" ஆகிய இரண்டு கதைகளிலும் மனஅவசங்களைப் படம்பிடிப்பதில் தாங்கள் வெற்றியடைந்தே இருக்கின்றீர்கள். இது உங்களைப் போலியாக உயர்த்துவதற்காக நான் கூறும் ஒரு கூற்றன்று.

தங்களிடம் எஸ்.பொன்னுத்துயின் "வீ" சிறுகதைத்தொகுதி இருப்பின் தயவு செய்து அனுப்பி வைக்கவும். படித்து விட்டு திருப்பி அனுப்புகின்றேன்.

அன்புடன் மலரன்பன்.

(3)

23.08.1982

எனதன்பு நண்பர் தெணியான் அவர்கட்கு,

வணக்கம், தங்களின் கடிதம் கண்டு மிக மகிழ்ச்சியடைந்தேன். நமது நட்பின் காரணமாக நிச்சயம் தாங்கள் உதவி புரிவீர்கள் என்ற நம்பிக்கையில் தான் தங்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். நான் தங்களைப்பற்றி கொண்டிருந்த கணிப்பு மிகவும் சரியானதே என்று மனம் மகிழ்கின்றேன்.

நான் குறிப்பிட்ட நண்பர் தமிழகம் சென்று மீண்டும் யாழ்.வந்துள்ளதாக அறிவித்துள்ளார். நண்பர் பாஸ்கர் நல்லவர். சினிமாத்துறையில் ஈடுபாடுள்ளவர். யாழ் சென்றால் 224/47 கஸ்தூரியார் வீதியில் அவரை சந்திக்கவும். தங்களின் "கழுகுகள்" நாவல் பிரதியொன்றை அனுப்பி வையுங்கள். அதற்குரிய பணத்தை அனுப்புவேன். மல்லிகையில் சிங்கள மொழிப்பெயர்ப்புக்கதைகள் தொகுதியாக வெளிவர உள்ளதாக அறிந்தோம். பல வருடங்களுக்கு முன்னர் மல்லிகை இதழ் ஒன்றில் வெளிவந்த "பலிகென்ம" என்ற ஜீபீ.சேனநாயக்கவின் கதையை "பலி" என்ற பெயரில் எனது மனைவியின் துணையுடன் தமிழில் மொழிபெயர்த்து அனுப்பியது நான் தான். மொழிபெயர்ப்பு சாந்தி ஆறுமுகம் என்று பிரசுரமாகியிருந்தது. சாந்தி ஆறுமுகம் என்ற பெயரில் எனது மனைவியின் இலக்கிய பங்களிப்பு இந்த ஒரு படைப்பு மட்டுமே. சாந்தி ஆறுமுகம் என்ற பெயரில் மற்றுமொரு எழுத்தாளரின் படைப்புகள் பல வெளிவந்துள்ளன. அவற்றிற்கும் எனது மனைவிக்கும் எந்த சம்பந்தமுமில்லை. எனது மனைவி ஒரு சிங்களப் பெண்மணி! இது பற்றி முன்னர் நான் தங்களுக்கு எழுதினேன் தானே!

நான் எழுதாத காலத்தில் தங்கள் பல கதைகளைப் படித்தேன். நண்பர்களோடு விமரிசனம் செய்தேன். அவற்றில் எனக்கு பிடித்த நல்ல கதைகளும் உண்டு. இலங்கையில் தெணியானும் தமிழகத்தில் சு.சமுத்திரமும் குறுகிய காலத்தில் பளிச்சென முன்னுக்கு வந்த குறிப்பிடத்தக்க படைப்பாளிகள் என்று சில இலக்கியவாதிகள் இங்கு குறிப்பிடுவதுண்டு. வேறு என்ன விசேடங்கள். எனக்கு இரண்டு மகள்மார்கள் இருக்கின்றார்கள். மூத்தவள் படிக்கின்றாள். தாங்கள் தங்களன்பு மனைவி மக்கள் மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் நலம் பெறுவீர்களாக.

அன்புடன் மலரன்பன்




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.